
கல்கி

KALKI 13.2.2000 ரூ. 5.00



மூப்பனார் கிளப்பிய 'ஸ்பெஷல்' புழுதி!



ஊஞ்சல் காதலர்கள்!


‘அய்யனே! பார்த்தாயா அநியாயம்?’

குமரிக் கரையில், சிலையாய் நின்று கொண்டிருக்கும் திருவள்ளுவர், பொடி நடையாய் கோட்டைக்கு வந்து, முதலமைச்சரிடம் மனு கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! “ஐயா! என் பேரில் ஊராட்சிகள் தோறும் நூலகமும், படிப்பகமும் திறக்கவும் வேண்டாம்; என் பெயரைரிப்பேராக்கவும் வேண்டாம்” என்று அதில் எழுதியிருந்தாலும் அதிசயமில்லை. காரணம், தமிழக அரசு அறிவித்துள்ள அய்யன் திருவள்ளுவர் நூலகம் - படிப்பகம் அமைக்கும் திட்டம் சம்பந்தமான முறைகேடுகள், பூசி மெழுகுதல்கள் போன்றவைதான்!

விஷயம் இப்போது அரசியலாக்கப்பட்டு, விவாதத்துக்கு உள்ளாகி இருக்கிறது என்றாலும், திட்டத்தின் நோக்கத்தையே சந்தேகிக்குமளவுக்குக் காரியங்கள் நடக்கின்றன.



கடந்த திருவள்ளுவர் தினம் (16.1.2000) முதல் ஊராட்சிகளில் திருவள்ளுவர் பெயரால் நூலகம் அமைக்க ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் ஒரு அரசாணை வெளியிடப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டிலுள்ள பன்னிரண்டாயிரத்து அறுநூற்றுப் பத்தொன்பது ஊராட்சிகளுக்கும் தலா ஐயாயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஆறு கோடியே முப்பது லட்சம் ரூபாய்க்கும் அதிகமாக, சட்டமன்றத்தில் ஒப்புதல் பெறாமல், அரசின் எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த ஐயாயிரம் ரூபாயில் மூவாயிரம் ரூபாயினை மேஜை, நாலு மடக்கு நாற்காலிகள் போன்றவை வாங்கவும், மீதி இரண்டாயிரம் ரூபாய் புத்தகங்கள் வாங்கவும் செலவிடப்பட வேண்டும் என்று அரசின் ஆணை குறிப்பிடுகிறது. நூலகம் துவக்க இடவசதி இல்லாது போனால், தாற்காலிகமாகக் கீற்றுக் கொட்டகை போட்டு, நூலகத்தை ஆரம்பிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு நூலகம் என்றால், நூலகர் வேண்டாமா? நூலகர் பற்றியோ, திருவள்ளுவர் நூலகத்தை நடத்தும்



அரசு விளக்கம்

திருவள்ளுவர் நூலக சர்ச்சை குறித்து அரசுத் தரப்பு விளக்கம் என்ன என்பதை அறிய, அமைச்சர் தமிழ்க்குடிமகனை அணுகியபோது, "இது குறித்து ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளரான ஆர்.சி. பாண்டாவை சந்திக்கும்படிக் கூறிவிட்டார். தலைமைச் செயலகத்தில், ஐ.ஏ.எஸ். அதிகாரி ரமேஷ் சந்திர பாண்டாவைச் சந்தித்தோம். ஊரக வளர்ச்சித் துறை இயக்குனர் சண்முகம் உடனிருக்க, பாண்டா நம்மிடம் தெரிவித்த விளக்கம்:

● அய்யன் திருவள்ளுவர் நூலகம், படிப்பகம் குறித்த முதலமைச்சரின் அறிவிப்பைத் தொடர்ந்து, அரசு ஆணை வெளியிட வேண்டியிருந்ததால், அவசரமாக அது வெளியிடப்பட்டது. புத்தகங்கள் வாங்குவது குறித்த வழிமுறைகள் அதில் இடம் பெறவில்லை.

● தமிழ் வளர்ச்சித் துறை, பொது நூலகத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, போன்றவற்றின் உயர் அதிகாரிகள் கொண்ட குழு, புத்தகங்கள் வாங்குவது குறித்த வழிமுறைகளைப் பரிசீலிக்கும். ஒரு வாரத்தில் அவை வெளியிடப்படும்.

● அரசின் பரிந்துரைப் பட்டியல் என்ற பெயருடன் புத்தகப் பட்டியல்கள் உலவிக் கொண்டிருப்பதாக முதலமைச்சர் வரை புகார் வந்திருக்கிறது. ஆனால் இந்த நிமிடம் வரை அரசு எந்த ஒரு புத்தகப் பட்டியலையும் பரிசீலித்து, ஊராட்சிகளுக்குப் பரிந்துரை செய்யவில்லை.

● நூலகங்களுக்குப் புத்தகம் வாங்கும் வழிமுறைகளை, ஒளிவு மறைவின்றி, தில்லுமுல்லுகளுக்கு இடமின்றி செயல்படுத்த வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்.

● இந்த நூலகம் சிறு அளவில்தான் இருக்கும் என்பதால், தனியே நூலகர் அவசியமில்லை: ஊராட்சி மன்ற ஊழியர்களே இதையும் பராமரித்துக் கொள்ளலாம்.

● அரசாங்கமே பரிசீலித்து புத்தகங்களின் பட்டியலை வெளியிட்டாலும்கூட, அதிலுள்ள புத்தகங்களை வாங்க வேண்டும் என்று ஊராட்சிகளைக் கட்டாயப்படுத்த முடியாது. தேவையான புத்தகங்களை, ஊராட்சி மன்ற ஒப்புதலுடன் அவர்களே வாங்கிக் கொள்ளவும் சுதந்தரம் உண்டு!

பொறுப்பு யாருக்கு என்றோ அரசின் ஆணை எதுவும் சொல்லாதது விசித்திரமாக உள்ளது. நூலகர் இல்லாமல் அய்யன் நூலகம். ஒரு புதிய முயற்சிதான்!

அடுத்ததுதான் வெகு முக்கியமான பிரச்னை: பன்னிரண்டாயிரத்து சொச்சம் நூலகங்களுக்கு, தலா இரண்டாயிரம் ரூபாய்க்குப் புத்தகங்கள் வாங்க வேண்டும். இதன் மதிப்பு இரண்டரை கோடியே 52 லட்சம் ரூபாய்.

தமிழ்நாட்டில் ஏற்கெனவே நூலகத் துறையின் கீழ் இயங்கி வரும் ஆயிரத்து ஐந்நூறுக்கும் மேற்பட்ட நூலகங்களில் புத்தகங்கள் வாங்குவதற்குக் கையாளப்படும் முறை கெடுபிடிகள் மிகுந்தது. பதிப்பகத்தினர், ஒரு தலைப்புக்கு இருபத்தி ஐந்து ரூபாய் கட்டணம் கட்டி, புத்தகப் பிரதியுடன் விண்ணப்பித்தால், இரண்டு கட்டங்களில் இரு குழுக்கள் புத்தகத்தைப் படித்துப் பார்த்து, 'நூலகங்களுக்கு வாங்குவதற்குத் தகுதி உடையதுதானா' என்று முடிவெடுக்கும். தேர்வாகும் தலைப்புகளில், எண்ணூற்று ஐம்பது பிரதிகள் வாங்க அரசு ஆர்டர் கொடுக்கும்.

அதுவும், பிரசுகர்த்தர் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கும் விற்பனை விலைக்கு அரசு வாங்காது. வழக்கமான (கிரவுன்) சைஸில் நூற்று அறுபது பக்கப் புத்தகத்தின் விலை நாற்பது ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும் அரசு, பதினாறு பக்கத்துக்கு இரண்டு ரூபாய் பத்து காசு என்ற கணக்கில் இருபத்தியோரு ரூபாய்க்குத்தான் வாங்கிக் கொள்ளும். இது தவிர, பத்து சதவீதம் தள்ளுபடியும் தர வேண்டும்!

ஆனால், திருவள்ளுவர் நூலகங்களுக்கு இது போல விலைக் கட்டுப்பாடு எதையும் அரசு நிர்ணயிக்கவில்லை! (வள்ளுவர் விலை மதிப்பில்லாதவர் என்பதால் போலும்!)

நூலகத்துறையினர், பதிப்பகங்களிடமிருந்து, நூல்களைப் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கக் கோரி, நாளிதழ்களில் விளம்பரம் தருவது மரபு. ஆனால் வள்ளுவர் நூலக விஷயத்தில், இந்த மரபும் காற்றோடு போயாச்சு! நூலகம் குறித்த அரசாணை வெளியான சூட்டோடு சூடாக புத்தகங்கள் பரிந்துரைப் பட்டியல் தயாராகி

விட்டது.

அந்தப் பட்டியலின் கதை சுறுசுறுப்பானது. குறிப்பிட்ட சில பதிப்பகத்தினரை, விலைப் பட்டியலோடு புறப்பட்டு வரச் சொல்லி, உடனே பரிசீலித்து, பதிப்பகம் வாரியாகப் பட்டியல் ரெடி! இந்தப் பட்டியல் சூட்டோடு சூடாக ஊராட்சிகளுக்கும் போய்விட்டது.

அந்தப் பட்டியல் அன்பழகனின் பார்வைக்குப் போனபோது "பன்னிரண்டாயிரம் நூலகங்களுக்குப் புத்தகம் வாங்க வேண்டிய விஷயம் என்பதால், அவசரப்பட வேண்டாம்; நிதானம் காட்டுங்கள்" என்று எச்சரித்திருக்கிறார். ஆனால் அவரது அறிவுரை அலட்சியப்படுத்தப்பட்டு விட்டது.

அய்யன் நூலகத்துக்குப் பரிந்துரைக்கப்பட்ட நூல்களின் பட்டியல் வெளியான பிறகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் 'எந்தெந்தப் பதிப்பகங்களிலிருந்து எந்தெந்த நூல்கள் வாங்குவது என்பது குறித்து நிபுணர் குழு ஒன்று பரிசீலித்து முடிவெடுக்கும்' என்று அறிக்கை விட்டதுதான் ஆச்சர்யத்திலும் ஆச்சரியம்!

பரிசீலனைக் குழுவின் உறுப்பினர்கள் யார் யார்? அவர்கள் எப்போது, எந்த அடிப்படையில் தேர்வு செய்வார்கள் என்பது அவருக்கே வெளிச்சம்!

தமிழ்நாட்டில் ஐந்நூறுக்கும் அதிகமான பதிப்பகங்கள் உள்ளன. ஆனால், பத்தே பத்து பதிப்பகங்கள் மட்டும் வெளியிட்டுள்ள நூற்றி அறுபது புத்தகங்களைக் கொண்ட பரிந்துரைப் பட்டியல் உலவிக் கொண்டிருப்பதன் பின்னணி என்ன? இந்தப் பட்டியலில் ஒரு குறிப்பிட்ட பதிப்பகம் வெளியிட்டுள்ள அறிஞர் அண்ணாவின் நாற்பத்து இரண்டு புத்தகங்களும், கலைஞரின் நாற்பது புத்தகங்களும் அடங்கும் என்பது இன்னொரு செய்தி!

சரி! ஊராட்சி மன்றத்தினரிடம் வருவோம்... ஊரிலிருந்து பரிந்துரைப் பட்டியலுடன் புறப்பட்டு, சென்னை வருகிறார்கள் அவர்கள். பதிப்பகங்களுக்குப் போய் எத்தனை சதவீதம் கமிஷன் தர முடியும் என்று வெளிப்படையாகவே பேரம் பேசுகிறார்கள். "அந்தப் பதிப்பகத்தில் அவ்வளவு சதவீதம் வரை கமிஷன் மற்றும் தள்ளுபடி தரத் தயாராக இருக்கிறார்கள்! அதை விடக் கூடுதலாக உங்களால் தர முடியுமா?" என்று கேட்கிறார்கள்.

எலெக்டிரிகல் கடை வைத்திருப்பவர் ஒருவர், சென்னையிலிருந்து புத்தகங்களை வாங்கி, உள்ளூர் புத்தக வியாபாரி போல, ஊராட்சிகளுக்கு விற்கும் முயற்சியில் இறங்கியிருக்கிறார்.

இது போதாது என்று, பரிந்துரைக்கப்பட்ட புத்தகப் பட்டியலில் இடம் பிடிக்காத பதிப்பகங்களுடன் தனி 'பேரம்' நடத்திக் கொண்டிருக்கிறார்கள், பட்டியலில் இடம் பிடித்த சிலர். 'பேரம் மூலம் கிடைக்கும் தொகை எங்களுக்கு இல்லை; ஆனால் யாருக்கு என்றெல்லாம் கேட்கக் கூடாது' என்பது பேரத்தின் கண்டிஷன்களில் ஒன்று.



"சொன்னா கேளுங்க சார்! பத்திரிகைக்குத்தான் ஊறுகாய் பாக்கெட் இலவசமா தர்றாங்க. நீங்க ஊறுகாய் பாக்கெட் வாங்கிட்டு அந்தப் பத்திரிகையை இலவசமா கேட்டா எப்படி சார் தர முடியும்...?"

— ஆர். வசந்தகுமார்

தமிழகம் முழுவதிலுமுள்ள ஆயிரக்கணக்கான அரசு நூலகங்களிலேயே உறங்கிப் பொழுதைக் கழிக்க வருவோர்தான் அதிகம். உருப்படியாகப் படிக்கவென வருவோர் எண்ணிக்கை சொற்பம்தான்.

ஏற்கெனவே உள்ள நூலகங்களில் வள்ளுவருக்குத் தனியிடம் – சிறப்பிடம் கொடுத்து மக்களின் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்க வழி செய்வதை விடுத்து, இப்படி 'வள்ளுவர் படிப்பகம்' எனத் தனியாகத் தொடங்குவதன் அவசியம் என்ன என்றே புரியவில்லை.

புரிவதெல்லாம் – இது புதுவித ஊழல்களுக்கு வளமாக வழி வகுக்கக் கூடுமென்பதுதான்!

— நமது நிருபர்



உயிரின் விலை ரூ. 5000!

"கடந்த 1998–99ம் ஆண்டுக்கு உங்களுக்கு நாலு லட்சம் ரூபாய் வரி விதிக்கப்படுகிறது. இந்த நோட்டீஸ் கண்ட ஏழு தினங்களுக்குள் நாலு லட்சம் ரூபாயைச் செலுத்தவில்லை என்றால் வரி ஏய்ப்பு குற்றத்தின் பேரில் உங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்"

இந்த நோட்டீஸ், நம் நாட்டின் ஒரு மாநிலத்தில் இயங்கி வரும் தீவிரவாத அமைப்பின் கட்டாய வசூலுக்கானது என்றால் நம்பித்தான் ஆக வேண்டும். வடகிழக்கு எல்லைப்புறத்தில் உள்ள திரிபுரா மாநிலத்தின் 'திவிபுரா தேசிய விடுதலை முன்னணி' என்கிற தீவிரவாத அமைப்பின் கைங்கர்யம்தான் இது! இந்தத் தீவிரவாத அமைப்பு, இப்படிப் பட்ட கட்டாய வசூல் மூலமாகக் கோடிக் கணக்கில் சம்பாதிக்கிறது.

திரிபுராவில், ஆளும் சி.பி.எம். அரசு, தீவிரவாதத்தை எதிர்கொள்ள முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறது. கடந்த இருபது ஆண்டுகளாக, கொஞ்சம் கொஞ்ச மாக வளர்ந்து, இன்று பிரச்னை விஸ்வ ரூபம் எடுத்து நிற்கிறது. இந்தக் காலகட் டத்தில் படுகொலைக்கு ஆளான அப் பாவி மக்களின் எண்ணிக்கை பத்தாயிரத் தைத் தாண்டி விட்டது. இவர்களில், பெரும்பாலானவர்கள் பங்களாதேஷ் அகதிகள்; மற்றவர்கள் உள்ளூர் பழங்குடி யினர்.


கடந்த நவம்பரில், பஞ்சவடி என்ற கிராமத்தில், எட்டுப் பேர் படுகொலை செய்யப்பட்டனர். சம்பவம் நடந்த இடத் துக்கு போலீஸ் வரவே ரொம்பத் தாமத மாகி விட்டது. காரணம், அந்த கிராமம் உள்ள சட்டமன்றத் தொகுதியில், போலீஸ் ஸ்டேஷனே கிடையாது! இன்றுவரை உள்ளூர் எம்.எல்.ஏ அந்தக் கிராமத்துக்கு வந்தது கிடையாது என்கிறார்கள் மக்கள்.

பொதுவாகவே, திரிபுராவில் மக்களி டையே பாதுகாப்பற்ற உணர்வுதான் நிலவுகிறது. மாநிலத்தின் ஐந்தாறு அரசுப் பள்ளிக்கூடங்களும், மருத்துவமனை களும் மூடப்பட்டு விட்டன. இத னால், படிப்புக்கு வழியில்லாமல், வேலை ஏதும் கிடைக்காமல், இளம் வயதிலேயே துப்பாக்கி ஏந்தப் போய் விடுகிறார்கள் மாணவர்கள். தனியார்

பெரும்பாலான பள்ளிகளையும், ஆஸ்பத்திரிகளையும் தொடாமல், அரசு பள்ளிகள் மீதும், ஆஸ்பத்திரிகள் மீதும் மட்டும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவது, சி.பி.எம். அரசாங்கத்தையே யோசிக்க வைத்திருக்கிறது.

சில மாதங்களுக்கு முன், நாலு ஆர்.எஸ்.எஸ். ஊழியர்களைக் கடத்திக்கொண்டு போன தீவிரவாதிகள், இரண்டு கோடி ரூபாய் கேட்டார்கள். பணம் தரப்படவில்லை. அந்த நாலு பேரும் என்ன ஆனார்கள் என்ற தகவல் இன்றுவரை இல்லை; இது விஷயமாய் யாரும் கைது செய்யப்படவில்லை.

மாநிலம் முழுவதுமாக உள்ள தீவிரவாதிகள்


GOVERNMENT OF THE TWIPRA KINGDOM
LED BY NATIONAL LIBERATION FRONT OF TWIPRA
MOTTO : SACRIFICE FOR LIBERATION 5148
Estd. 1989 A.D.
1399 T.E.
REVENUE & TAX DEPARTMENT
Ref. No. E 4( ) - R)/NLFT/99 ______ Date 14/11/99
To ..... Phalinpur Beta Commit ...
Dear Sir/Madam,
The Government of Twipra Kingdom of the Revenue & Tax Department hereby notified that according to the assessment year of 1998.. 1999.. to pay in Taxes of Rs. 4,00000/- (in word) ... Five Lakh ... on your annual income of all sources, the amount should be paid within 24/11/99 If any person is failed to pay, he/she shall be imposed violation act, under sec. 7 (1) of the Revenue & Tax act. 1989 A.D.
Collector
14/11/99
(Mg. ...)
Secretary
of Revenue & Tax Dept.
NLFT

• வரி நோட்டீஸ் இதுதான்!

எண்ணிக்கை சுமார் எழுநூறு என்று அரசு கணிக்கிறது. திரிபுராவில், பாராமிலிடரி படையும், திரிபுரா மாநில ரைபிள்ஸ் படையும் சேர்ந்து ஆறாயிரம் பேர் இருக்கிறார்கள். இருந்தும் தீவிரவாத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இந்தத் தீவிரவாதம், வடகிழக்கு மாநிலங்கள் முழுமைக்கும் பரவுவது மாநில அரசுகளுக்கு மட்டுமில்லாமல் மத்திய அரசுக்கும் நிரந்தரத் தலைவலிதான்.

ஒரு விஷயம் –

திரிபுராவில், மனித உயிரின் மதிப்பு வெறும் ஐயாயிரம் ரூபாய்! ஆம்! தீவிரவாதத்துக்கு பலியானவர் குடும்பத்துக்கு அரசு தரும் மானியம் அது! கூடுதலாக, குடும்பத்தில் ஒருவருக்கு வேலை.

— கௌதம் ராம்



அங்கும் தமிழ்!

அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் நவீன தமிழ் இலக்கியம் பற்றிய புதிய வகுப்பு ஒன்று தொடங்கவிருக்கிறது! நடத்தப் போகிறவர், தமிழ் எழுத்தாளர் திலீப்குமார்.

'மூங்கில் குருத்து' என்னும் மறக்க முடியாத சிறுகதைத் தொகுப்பு மூலம் தமிழ் வாசகர்களுக்குப் பரிச்சயமான திலீப்குமார், புத்தக விற்பனையாளரும் கூட.

''வாரத்துக்கு ஒன்று என சுமார் மூன்று மாதங்கள் அங்கே வகுப்பெடுக்கச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், எல்லாமே மாணவர்களுக்கும் எனக்கும் ஏற்படும் உறவைப் பொறுத்துத்தான் அமையும். 'பிரதாப முதலியார் சரித்திரம்' தொடங்கி, இன்று வரை உள்ள நவீன தமிழ் இலக்கியம் பற்றிப் பேசப் போகிறேன்'' என்கிறார் திலீப் குமார்.

திலீப் குமாரின் தாய்மொழி குஜராத்தி. ஆனாலும் குஜராத்தி படிக்கத் தெரியாது; பேசுவார். எழுதுவதெல்லாம் தமிழில் மட்டுமே!

— சாருகேசி

● "சமீபத்திய இந்தியன் ஏர்லைன்ஸ் ஹைஜாக் விஷயத்தை பா.ஜ.க. அரசு கையாண்ட விதம் திருப்திகரமாக இல்லை. இதுகுறித்து, மத்திய அரசின் நிலையில் எனக்கு உடன்பாடில்லை!"– இப்படி விமர்சித்திருப்பவர் காங்கிரஸ் பிரமுகராக இருப்பார் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. கமெண்ட் உபயம், பா.ஜ.க. எம்.பியான சினி ஸ்டார் ஷத்ருகன் சின்ஹாதான். ஏற்கெனவே, மத்திய அமைச்சரவையில் இடம் கிடைக்கவில்லை என்று நொந்து போயிருக்கிறார். அதன் வெளிப்பாடுதான் இது!

● ஹரிகிருஷ்ணாவை ஞாபகமிருக்கிறதா? ஆந்திராவில், கடந்த சட்டசபைத் தேர்தலின்போது, தாம்தான் என்.டி.ஆரின் உண்மையான 'அரசியல் வாரிசு' என்று கூறிக் கொண்டு தேர்தலில் குதித்தவர். (சந்திரபாபு நாயுடுவால் முன்னதாக, தெலுங்கு தேசக் கட்சியில் ஓரங்கட்டப்பட்டவர்.) மனுஷர் பாவம்! கம்யூனிஸ்ட் உட்பட பதினாறு கட்சிக் கூட்டணி அமைத்துப் போட்டியிட்ட ஹரிகிருஷ்ணாவுக்கு, ஏற்கெனவே ஜெயித்த ஹிந்துபூர் தொகுதியிலும், இன்னொரு தொகுதியிலும் படுதோல்வி! அரசியலா! ஐயோ வேண்டாம்! என்று அலறி ஓடுகிறார் இப்போது!

அரசியலா? ஐயோ, வேணாம்!

● கொஞ்சம் கொஞ்சமாக 'ஆக்டிவ் பாலிடிக்சி'லிருந்து ரிடையர் ஆகிவிட வேண்டும் என்று நினைக்கிறார். இசை கேட்பது, படிப்பது, என்று பொழுது போக்கிக் கொண்டிருக்கும் அவர், விரைவில் தனது வாழ்க்கை அனுபவங்களைப் புத்தகமாக எழுதப் போகிறார். அவர்: ராமகிருஷ்ண ஹெக்டே.

● புத்தாயிரம் வருடம் பிறந்து, உலகில் ரிலீசான முதல் சினிமா எது தெரியுமா? மிலெனியம் ஸ்டார்ஸ். பிரபல மலையாள டைரக்டர் ஜெயராஜ் இயக்கிய மலையாளப் படம்தான்! டிசம்பர்31ம் தேதி நள்ளிரவு சரியாக பன்னிரண்டு மணிக்கு இந்தப் படம் திருவனந்தபுரத்தில் ரிலீஸ் ஆனது. நள்ளிரவில் படம் பார்க்க தியேட்டரில் ஒரே கூட்டம். கின்னஸ் புத்தகத்துக்கு இதை அனுப்பப் போகிறார்களாம்!

● எம்.ஜி.ஆர். போல, இரட்டை விரல் காட்டிக் கொண்டிருக்கும் மனிதரை அடையாளம் தெரிகிறதா? ஜி.ஆர். கைர்நார். ஆறு வருடங்களுக்கு முன்னால், மும்பையின் அத்துமீறிய ஆக்ரமிப்புகளை அதிரடியாக அகற்றி, பழிவாங்கப்பட்ட மும்பை கார்ப்பரேஷனின் துணை கமிஷனர்தான்!

1994-ல் சஸ்பெண்டு செய்யப்பட்டவுடன், சமூக சேவையில் இறங்கினார். மும்பை சிவப்பு விளக்குப் பகுதியிலிருந்து மைனர் பெண்கள் உட்பட பலரையும் விடுவித்து, வெளியே கொண்டு வந்தார். அவர்கள், தம் ஊர்களுக்குத் திரும்பவும், மறுவாழ்வுக்குமாக உதவினார். குடிசைப்பகுதி மக்கள் சொந்தக்காலில் நிற்க உதவியாய் தையல் மிஷின்கள் வாங்கிக் கொடுத்தார். தமது பிராவிடெண்ட் பண்டு பணம், தன் மகளின் சேமிப்பு, இவைகளைக் கொண்டு, 'முக்தாம்பர் டிரஸ்ட்' என்ற அறக்கட்டளையைத் துவக்கி, அதன் மூலமே உதவிகளைச் செய்து வந்தார் கைர்நார்.

ஆனால் அவருக்குக் கைகொடுக்க தொண்டு நிறுவனங்களும், வாலண்டியர்களும் எதிர்பார்த்தபடி உதவவில்லை என்பது ஒருபுறம் என்றால், பல்வேறு தரப்பினரும், அவரிடமிருந்து எதிர்பார்த்த உதவிகள் மிக அதிகம். கிராமத்துக்கு ஆம்புலன்ஸ் முதல் ஆற்றின் குறுக்கே அணை கட்டித் தருவது வரை பலவிதமான கோரிக்கைகளை அவர் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று அவரிடம் கோரிக்கைகள் வந்து குவிந்தன. அவரிடமிருந்து உதவி பெற்றவர்களும் நன்றி மறந்துவிட்ட வேதனையும் உண்டு.



• ஹெக்டே



• ஷத்ருகன் சின்ஹா

பணம் கரைந்த நிலையில், "மற்றவர்களி



இந்தியா.காம்



• கைர்நார்

டம் பணம் கேட்டுப் பெற எனக்குக் கூச்சமாக இருக்கிறது" என்கிறார். விளைவு : தனது சேவையைத் தொடர போதுமான நிதி இல்லை. மகாராஷ்டிராவில் நிலைமை இப்படியிருக்க, அவருக்கு பீகாரிலிருந்து அழைப்பு வரவே, அங்கும் தமது சமூக சேவையை விரிவுபடுத்தினார். கடந்த ஒரு வருடமாக, பீகாரின் பத்து மாவட்டங்களில் சுமார் 200 தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், இவரது ஆலோசனை மற்றும் உதவியுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. பீகாரில் உற்சாகமாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் கைர்நார்.

• ஒரு க்விஸ். மேலே, கண் மூடி, கன்னத்தில் கை பொத்திக் கொண்டிருப்பவரை அடையாளம் தெரிகிறதா? அண்மையில் ஒரு தமிழ்ப் படத்தில் கலக்கியவர் இவர். விடை : கடைசியில் காண்க.

• ரவீந்திரநாத் தாகூர் துவக்கிய விஸ்வ பாரதி பல்கலைக்கழகம், ஆண்டுதோறும் விருது வழங்குவது வழக்கம். இவ்வாண்டு, விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர் குறித்து சர்ச்சை கிளம்பியுள்ளது. அவர், சதீஷ்குஜ்ரால். ஓவியர். முந்நாள் பிரதமர் ஐ.கே. குஜ்ராலின் சகோதரர். சர்ச்சை ஏன்? சாந்தினி கேதனில் உள்ள விஸ்வ பாரதி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் யார் தெரியுமா? ஐ.கே. குஜ்ரால்!

• பொதுத் துறை நிறுவனங்களில், லஞ்சம் வாங்குபவர்களைப் பற்றி நேரடியாக மத்திய விஜிலன்ஸ் கமிஷனருக்குத் தகவல் தரும்படி அறிவிக்கும் தகவல் பலகைகள் வைக்க உத்தரவாகியுள்ளது. அண்மையில் மத்திய தலைமை விஜிலன்ஸ் கமிஷனர் விட்டல், இதுகுறித்துப் பேசி முடித்தவுடன் ஒருவரது கமெண்ட் : "மும்பையில், அனைத்து பொதுத் துறை நிறுவனங்களிலும் இந்த போர்டை வைக்கும் பணியைப் பெற்ற காண்டிராக்டர் அதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டியிருந்தது."

— நியூஸ்வாலா

விடை : வேறு யார்? சுஷ்!

காதல் கதைகள்

இப்போதெல்லாம் ஏன் எழுத்தாளர்கள் காதல் கதைகளே எழுதுவதில்லை? எழுத்தாளர்களுக்கு வயதாகிக் கொண்டிருக்கிறதா? அல்லது மக்கள் ரசனை மாறிக் கொண்டிருக்கிறதா? சில எழுத்தாளர்களிடம் விசாரித்தோம் :




இந்திரா சௌந்தர்ராஜன் :

காதல் கதைகள் குறைந்து விட்டனவா? மற்ற எழுத்தாளர்களுக்கு என்ன பிரச்னையோ - நான் இப்போதுதான் 'காதல் சதுரங்கம்', 'காதலா, இது காதலா?' என இரண்டு தொடர்கள் எழுதி முடித்து விட்டு மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறேன்.

யோசித்துப் பார்த்தால் மக்களின் ரசனை மாறிவிட்டதுதான் இதற்குக் காரணம் என்று தோன்றுகிறது. வீட்டுக்கே வந்துவிட்ட சினிமாவில் காதலைத் தவிர வேறில்லை. டீவி தொடர்களே கூட அதனால்தான் குடும்ப சென்டிமென்டைப் பிடித்துக் கொள்ள வேண்டியதாகி விட்டது.

தவிர, ஜாதி ஒரு முக்கியமான 'காதல் எதிரி'யாக இருந்த காலம் மாறி விட்டது. காதலர்களின் பிரச்னை அல்லது மகிழ்ச்சி குறித்துப் புதிதாக யோசிக்கவல்ல இளைய தலைமுறை முழுக்க டீவி., சினிமா உலகில் நிரம்பி விட்டனர். இன்றைய காலகட்டத்துக்கேற்ப, காதலை இளமையுடன் சொல்ல எழுத்தாளர்கள் இல்லை. எழுத்துத் துறை, அடுத்தத் தலைமுறையினரிடம் அநேகமாக இதைப் பெறக் கூடும்.



சுபா :

முதலாவது, காதலுக்குத் தடையாக ஜாதி, மதம், ஸ்டேட்டஸ், அப்புறம் வரதட்சணை என்று எல்லாவற்றையும் வைத்து ஏகமாய் எழுதியாகி விட்டது. வேற்றுகிரகவாசியைக் காதலிப்பது ஒன்றுதான் பாக்கி. எனவே அதில் வாசகர்களுக்கு இருந்த ஆர்வம்





குறைந்து போய் விட்டது. அடுத்த முக்கிய மான காரணம், சினிமாகாரர்கள் காதல், காதல், காதல் என்று நாற அடித்துக் கொண் டிருக்கிறார்கள். காதலை, விஷுவலாய் சுவா ரசியமாய்க் காட்ட முடிவதால், 'நாவல் காதலு'க்கு வரவேற்பு குறைந்து போய் விட்டது.

பிரபஞ்சன் :

பத்திரிகைகளில் இடம்பெற்றுக் கொண் டிருந்த காதலைத் தமிழ் சினிமா தத்து எடுத் துக் கொண்டு விட்டது. தமிழ் சினிமாவில் காதல் என்ற பெயரில் காதல் அல்லாத வற்றைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாகவே, தமிழ் சினிமா, ஆரோக்கியமான காதலைச் சொன்னதாகச் சுவடு இல்லை.

எழுத்தைப் பொறுத்தவரை, காதல் கதை எழுதி வந்த எழுத் தாளர்களுக்கு வயதாகி விட்டது அல்லது வாசகர்களுக்கு ஒரு முதிர்ச்சி ஏற்பட்டிருப்பது இரண் டுமே காரணம் என்பது என் கருத்து. அதிலும், வாசகர் முதிர்ச்சியடைந்திருந்தால் எனக்கு மிக மகிழ்ச்சி.

காதல் வாழ்க்கையில் ஒரு அம்சம். வேண்டுமானால் முக்கியமான அம்சம். ஆனால், காதலே வாழ்க்கை யாகி விடாது. படுக்கை அறையே வீடாகி விடாது!

ஆண், பெண் இடை யிலான காதல் என்பது இடம்பெயர்ந்து, இயற்கை, மனிதன், சமூகம் என அனைத்தின் மீதும் அன்பும் பரிவும் காட் டச் சொல்லித் தர வேண்டிய கடமை கலைஞனுக்கு உண்டு. மண்ணுக்கு மேலும், கீழும் உள்ள அனைத் தையும் ஆராதிப்பதே ஆரோக்கியமான காதல்.

பட்டுக்கோட்டை பிரபாகர் :

காதல் கதைகள் குறைந்து போய் விட்டது என்ற வாதத் தையே நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். சமீபத்திய எனது தொடர் கதைகளான மதில்மேல் மனசு, மௌனத் தால் பேசாதே என்ற இரண்டுமே காதல் கதைகள்தான். இப்போது, இன்னொரு பத்திரிகையில் காதல் கதைதான் வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். மாத நாவல் களிலும் எனது காதல் கதைகளுக்கு நிறைய ரெஸ்பான்ஸ் இருக் கிறது. காதல் என்றும் சாகாது!

தொகுப்பு :
பாரதி



• காட்மண்டு நகரம்

ISI யின் தேன் பொறி சதி!



இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தை பாகிஸ்தான் தீவிரவாதிகள் நேபாள தலைநகரான காட்மாண்டு விமான நிலையத்திலிருந்து கடத்திச் சென்றார்கள் அல்லவா? அதையொட்டி, நேபாள அரசுக்கு, விமான நிலைய பாதுகாப்பு குறித்துப் பல்வேறு உலக நாடுகளிலிருந்தும் கண்டனம் வந்தது. விமான நிலையத்தில், செக்யூரிட்டியை அதிகரிக்கும்படி எச்சரிக்கை வந்தது. நேபாள நாட்டு போலீசும் சுறுசுறுப்படைந்தது.

அதன் விளைவாக, பாகிஸ்தான் உளவு நிறுவனமான ஐஎஸ்.ஐ. பல காலமாகக் கடைபிடிக்கும் ஒரு சதித் திட்டம் வெளிச்சத்துக்கு வந்திருக்கிறது. இந்த சதித் திட்டத்துக்கு நேபாள அரசு பாஷையில் 'தேன் பொறி' என்று பெயர்.

இதில் ஐ.எஸ்.ஐ. உளவு நிறுவனத்தின் இலக்கு, உயர்ந்த பொறுப்புகளில் இருந்துவிட்டு, முப்படையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள். இவர்கள், ஓய்வு பெற்று விட்டார்கள் என்றாலும் கூட, இவர்களுக்கு மிக நெருக்கமானவர்கள் இன்னமும் முப்படைகளிலும், இந்திய அரசின் வெளிவிவகாரத் துறை, உள்துறை, மற்றும் உளவு அமைப்புகளான ரா, ஐ.பி. போன்றவைகளிலும் இருப்பார்கள் என்பதால் தான், ஐ.எஸ்.ஐ. இவர்களைக் குறிவைத்து, பொறியை விரிக்கிறது.

ஓய்வுபெற்ற ராணுவ அதிகாரிகளில் பலர், சொந்தமாக செக்யூரிட்டி ஏஜென்சிகள் ஆரம்பித்து நடத்தி வருகிறார்கள். முன்னாள் ராணுவ உயர் அதிகாரிகள் நடத்தும் செக்யூரிட்டி ஏஜென்சிகளுக்குப் பொதுவாகவே, நல்ல டிமாண்டு இருக்கிறது. எனவே, இந்த செக்யூரிட்டி ஏஜென்ஸிகளில் பெருமளவில் செக்யூரிட்டி பணியாட்கள் தேவைப்படுகிறார்கள். நேபாள நாட்டு கூர்க்கா இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு, செக்யூரிட்டி பணியில் நாட்டம் அதிகம். மற்ற எந்த

வேலையையும் விட, செக்யூரிடி பணியிலேயே இவர்கள் அதிகம் சேருகிறார்கள்.

இதைக் குறிவைத்துத்தான் ஐ.எஸ்.ஐ. செயல்படுகிறது. நேபாளத்தில் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்து வருவதால், அவர்களுக்கு இந்தியாவில் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி, நேபாளத்தில் உள்ள ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட்கள் அவர்களை இங்கே அனுப்பி வைக்கிறார்கள். இந்திய செக்யூரிடி ஏஜென்சிகளுக்கு, நேபாளத்திலிருந்து கூர்க்கா இளைஞர்களை அனுப்பி வைக்கிற ஏஜெண்ட்கள் என்கிற போர்வையில் செயல்படும் இவர்கள், உண்மையில் ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட்கள் என்பது நம் ஊரில் செக்யூரிடி ஏஜென்ஸி நடத்தும் முன்னாள் ராணுவ அதிகாரிகளுக்கும் தெரியாத ரகசியம்!

கணிசமான அளவில் நேபாள இளைஞர்களுக்கு வேலை கொடுக்கும் செக்யூரிடி ஏஜென்ஸிகளை நடத்துபவர்களுக்கு, அவர்களது சேவையை அங்கீகரிக்கும் விதமாக, நேபாளத்துக்கு இலவசமாக வந்து போக ஏற்பாடு செய்கிறார்கள் இந்த ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட்கள். இந்தப் பின்னணி தெரியாமல், ஜாலியாய் நேபாளத்துக்கு 'ஹாலிடே டூர்' போகிறார்கள் செக்யூரிடி ஏஜென்ஸி நடத்துபவர்கள்.

அங்கேதான் இவர்களுக்குத் 'தேன் பொறி' வைக்கப்படுகிறது. ஆம்! அங்கே மசாஜ் பார்லர்கள் தொடங்கி, சகலவிதமான சௌகரியங்களும் இவர்களுக்குச் செய்து கொடுக்கப்படுகின்றன. இவர்களும் ஜாலியாய் அனுபவித்துவிட்டு வருகிறார்கள். அவர்கள் நேபாளத்தில் 'உல்லாசமாக' இருக்கும்போது ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட்கள், தந்திரமாக போட்டோ, வீடியோ எடுத்து விடுகிறார்கள்!

அதன்பின் ஆரம்பமாகிறது 'பிளாக் மெயில்' டெக்னிக். போட்டோக்களையும், வீடியோவையும் வைத்து பயமுறுத்தியே ஐ.எஸ்.ஐ. தனக்கு வேண்டிய தகவல்களைச் சேகரித்துக் கொள்கிறது. இந்த விபரீத விளையாட்டைத்தான் நேபாள போலீஸ் அண்மையில் வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கிறது. இதற்கு அவர்கள் சூட்டியுள்ள பெயர்தான் 'தேன் பொறி'.

தொகுப்பு : **மௌலி**



ஜீபூம்பா!

வேலைக்குப் போகும் பெற்றோர். ஆகவே, துணையற்ற தனிமை. ஏக்கமும் சோகமுமாகப் பொழுதைக் கழிக்கிற ஒரு சிறுவனுக்கு ஒரு மேஜிக் பென்சில் கிடைக்கிறது. அந்தப் பென்சிலை வைத்து அவன் வரையும் உருவங்களெல்லாம் உயிர் பெற்று எழுந்து அவன் வாழ்க்கையையே வண்ணமயமாக்கிவிடுகிறது.

– அம்புலி மாமாவில் அல்ல; விஜய் டீவியில் வரப்போகிற 'ஜீபூம்பா' குழந்தைகள் தொடரின் கரு இதுதான்.

ஒரு விஷயம். எல்லா தனியார் சானல்களுமே போட்டி போட்டுக் கொண்டு குழந்தைகள் சீரியல் தயாரிப்பில் படு மும்முரமாயிருக்கின்றன இப்போது. பகலெல்லாம் பெண்களுக்கு; இரவானால் குழந்தைகளுக்கு என்பதுதான் சாடிலைட் டீ.விக்களின் சமீபத்திய ப்ரோக்ராம் ஃபார்முலா!

– ஜுஜுபி

15

அம்மா திடுமெனப் புறப்பட்டு வந்து விட்டாள். வருவதாகச் சொல்லிக் கொண்டே இருந்தவள், அன்று காலையில் பெட்டியுடன் வந்தே விட்டாள். அம்மா வரும்போது காகங்கள் கரைந்தன. அம்மா வந்ததால் அவை கரைந்தன என்று சொல்வதற்கு இல்லை. காகங்கள் கரையும் போது, அம்மா வந்தாள்.

வீட்டுக்குள் நுழைந்ததும், சுற்றுமுற்றும் பார்த்தாள். மண், அழுக்கு, குப்பை, எங்கேயாகிலும் பார்வையில்படும் ஜட்டி, நாற்காலியின் முதுகில் கிடக்கும் அழுக்குக் கைலி, கண்ட கண்ட இடத்தில் எச்சில் தட்டுகள், மூடப்படாத தண்ணீர் பாட்டில், தரையில் சுருண்டு கிடக்கும் ஆங்கில, தமிழ்ப் பத்திரிகைகள் என்று பிரமசாரியின் அறை அல்லது வீடு இருக்கும் என்று அம்மா எதிர்பார்த்தாள். ஏமாந்தாள். அரவிந்தன் தன் வீட்டைக் கண்ணில் ஒற்றிக் கொள்கிற சுத்தத்துடன் வைத்திருந்தான்.

"வீட்டை அழகா வச்சிருக்கியே, சபாஷ்'' என்று அவள் மகனைப் பாராட்டினாள்.

"நான் உன் மகன் ஆச்சேம்மா."


பத்மாவதி அம்மாள் எனப்படும் அவள், அவளுடைய குடும்பம், ஊர், சூழலில் மகாராணி என்றே அறியப்பட்டாள். தந்தை, ஒரு ஜமீன்தார். புகுந்த இடமும் ஒரு ஜமீன்தார்க் குடும்பம். ஜனநாயகம் தழைத்து எல்லோரும் இந்நாட்டு மன்னர் ஆனதும், ஜமீன்தார்கள், பட்டணங்களுக்குக் குடிபோனார்கள். அரசியல், விவசாயம், சினிமா என்று பல தொழில் வாய்ப்புகளிலும் ஈடுபட்டார்கள். அரவிந்தனின் தந்தை அரசியலை எடுத்துக் கொணடார். சுதந்தரத்துக்குப் பிந்தைய இந்தியாவில், அரசியல், நஷ்டமே தராத தொழில் என்பதை அவர் தன் அனுபூதியினால் அறிந்து கொண்டு, அதன்படி ஒழுகினார். கூடுமானவரை நல்ல தலைவர் என்று பெயர் எடுத்தார் - பலப்பல சமரசங்கள் செய்து கொண்டுதான்.

அம்மாவுக்கு என்றே, அவள் வரும்போது பயன்படும் என்று, ஒரு அழகிய பூஜை அறையை வைத்திருந்தான், அரவிந்தன். குளித்துப் பூஜையை நிறைவேற்றிக் கொண்டாள் அம்மா.

தட்டில், திருநீற்றுப் பிரசாதத்தைக் கொடுத்த அம்மாவிடம் அரவிந்தன் கேட்டான்.

"என்ன வேண்டிக்கிட்டே, சாமிகிட்ட?"

''இப்பல்லாம் வேண்டிக்கிறதே இல்லைடா. நமக்கு என்ன தரணும்னு பகவானுக்குத்



பிரபஞ்சன்

தெரியாதோ? அசட்டுத்தனமா எனக்கு இதைக் கொடு, அதைக் கொடுன்னு என்னத்துக்குக் கேட்கிறது? தவிரவும், பெரிசா நான் என்னத்தைக் கேட்டுடப் போறேன். எல்லாரும் நல்லா இருக்கணும்கிறதைத் தான்...."

"என் வீட்டுக்காரருக்குப் பெரிய பதவியைக் கொடு. என் மகனுக்குச் சீக்கிரமா கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்யின்னு, கடவுளை எம்ப்ளாய்மென்ட் எக்ஸ்சேஞ்ஜா ஆக்குவே... எனக்காக அவரை மேரேஜ் புரோக்கராவும் ஆக்குவே. பாவம்மா, கடவுள்..."

"உஸ்... தூஷணை பேசாதே. மனுஷான்கிட்ட சொல்ல முடியாததைத்தாண்டா கடவுள்கிட்ட சொல்ல முடியும்!"

"ஏன், மனுஷான் கேட்க மாட்டானா?"

அம்மா கொடுத்த இருநீறை நெற்றியில் பூசிக் கொண்டான் அரவிந்தன்.

தட்டை, சாமிப் படங்கள் முன் வைத்துவிட்டு அவன் சொன்னான்.

"கேப்பா... மனசுக்குள்ள இகழ்ச்சியா, சிரிப்பா, கீழ்த்தரமா ரசிச்சு, மேலுக்குப் பரிதாபம் பொங்கக் கேட்பாள். சிரத்தையா கேட்கிறவா யார்? அப்பாவும் பிள்ளையுமே ஒட்டிக்கிறது இல்லை. உன்னையும் அப்பாவையும் மாதிரி. அம்மாவும் பெண்ணும், கணவனும் மனைவியும், சிநேகிதனும் சிநேகிதியுமே ஒட்டிக்கிறது இல்லையே. எல்லாமே மேல் பூச்சு. எல்லாமே சுயலாபம் கருதித்தான்."

ஒரு மனுஷி



ஆச்சரியமாக இருந்தது அரவிந்தனுக்கு.

அம்மாவுக்கும் எப்படி இந்த மனித வெறுப்பு ஏற்பட்டது? எல்லாரையும், பூனைகளை, நாய், மரம், மரவட்டை என்று எல்லாவற்றையும் அன்பு என்ற ஒன்றைத் தவிர வேறு பார்வையில் பார்க்காத அம்மா. எதன்

காரணமாக இப்படி மாறினாள்?

நிறைய வேலைகள் இருந்தன. அரவிந்தன் ஏற்பாடு செய்திருந்த சமையல்கார அம்மாள் வந்து காலைப் பலகாரம் செய்தாள். வெண் பொங்கலும், வடையும். நன்றாகத்தான் செய்திருந்தாள். பெயர்தான் சற்று வித்தியாசம். ஜெபமாலை. இது என்ன பெயர்?

அரவிந்தன் தெளிவுபடுத்தினான்.

"கிறிஸ்துவப் பெண் அம்மா. ஜெபம் செய்கிற மாலை. ஜெபமாகிய மாலை. ஜெபம் போல, உசத்தியான பெண். இப்படி அதன் அர்த்தம்."

"ஓ"

அம்மா, கிறிஸ்துவப் பெண் சமையலை ஆசாரம் பார்ப்பாளா என்பது யோசனையாக இருந்தது. இல்லை. அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அம்மா அவனுடன் காலைப் பலகாரம் சாப்பிட்டாள். அவன் அலுவலகம் புறப்பட்டபோது, "சாயங்காலம் சீக்கிரமா வந்துடு" என்றாள்.

என்ன விஷயமாக இருக்கும்?

வண்டியை ஸ்டார்ட் செய்தபோது அவன் கேட்டான்.

"உன் ஹஸ்பெண்ட் எப்படியிருக்கார்?"

அம்மா சிரித்தாள்.

"உன் ஃபாதர் நல்லாவே இருக்கார். அவருக்கு என்ன, என்றைக்கும் புது மாப்பிள்ளை."

அதுதான் அப்பாவின் பிரச்னை. நிறைய பெண் தொடர்புகள். சிநேகிதிகள். பெண் வாசனையோடு பொழுது புலர்வதும், மறைவதும் அவர் வாழ்க்கை முறை. அம்மா இது பற்றி ஒருபோதும் குறைபட்டுக் கொண்டது இல்லை. குறை இல்லாமல் இருக்குமா, ஒரு மனைவிக்கு? வாய் விட்டுக் கணவனைக் குற்றம் சொல்லக் கூடாது என்று இருக்கும். வேறு என்ன?

அலுவலகத்தில், அரவிந்தன் லலிதாவிடம், அம்மா வந்து இருக்கிறதைச் சொன்னான்.

"பார்க்கணுமேப்பா" என்றாள் லலிதா.

"சாயங்காலம் வாயேன்."

லலிதா, மார்க்கெட்டுக்குச் சென்று, பழங்கள் வாங்கிக் கொண்டாள். அரவிந்தனுடன், ஸ்கூட்டரில் வீட்டுக்கு வந்தாள்.

"பாரதியை அழைச்சு இருக்கலாம். அவளுக்கு உங்க அம்மாவைப் பார்க்கப் பிடிக்கும்."

"மறப்பேனா? சொல்லி அனுப்பியிருக்கேன் அழைச்சு வர்ற. நம்ம மானேஜர் காரையும் அனுப்பி வைச்சிருக்கேன்."

"புத்திசாலிதாம்பா, நீ."

அம்மா லலிதாவைப் பார்த்ததில் மிக்க சந்தோஷம் அடைந்தாள்.

"வா, குழந்தை. வீட்டுல எல்லாரும் சௌக்யம்தானா?"

"சௌக்யம் மாமி."

அம்மாவே போய்க் காப்பி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தாள்.

"இப்பத்திக்குச் சாப்பிடு. ராத்திரி சாப்பாடு சாப்பிடலாம். சரியா?"

"உங்க இஷ்டம், மாமி."

"இல்லை. சாப்பிடறது உன் இஷ்டம்தான். என்ன கறி பிடிக்கும்?"

"எனக்கும், பாரதிக்கும் – இப்ப வருவா

இதுதான் காதலென்பதா?

எம்.ஏ.ஷாகிப் என்பவர், அஸ்மா என்கிற பெண்ணை பூமியில் காதலித்தார். இவர்களது திருமண



நிச்சயதார்த்தம் நடுவானில் நடந்தது!

பாராசூட் பயிற்சி பெற்ற இவ்விருவரும், கர்நாடக மாநிலம் தாவணகரேவில் விமானமேறி, பாராசூட்டில் குதித்து, நடுவானில் மோதிரம் மாற்றிக் கொண்டார்கள். சுற்றமும் நட்பும் கீழிருந்தபடி கை தட்டி மகிழ்ந்தார்கள்!



ஷீலா சௌத்ரி, டெல்லிவாசி.
இவரது அக்கம் பக்கத்து வீட்டுக்காரர்கள் காலி மருந்து பாட்டில்கள், மூடிகள், தீப்பெட்டி, பிளாஸ்டிக் பை, சணல் கயிறு என்று வேண்டாதவை எது இருந்தாலும், அவைகளைக் கொண்டு வந்து ஷீலா சௌத்ரியிடம் கொடுத்து விடுகிறார்கள். அவற்றிலிருந்து அழகான பொம்மைகள் செய்கிறார் ஷீலா. வேஸ்ட் பொருட்களிலிருந்து ஷீலா சௌத்ரி உருவாக்கியதுதான் இந்தப் பிள்ளையார் பொம்மையும்.

— சி.எம்.

மாமி - பாவக்காய் பிட்ளை பண்ணிடுங்கோ. பீன்ஸ் அல்லது இருக்கிற காய் பொறியல். மோர் எதேஷ்டம்."

"ஊறுகாய், வத்தல், அப்பளம், மோர் மிளகாய், கொத்தவரை வத்தல் எல்லாமே இருக்கு."

"விருந்துதான் மாமி."

"நாக்கு கேட்கிறதைக் கொடு, குழந்தை. மனசு இருந்தாலும் சாப்பிட முடியாத பருவம் ஒன்று இருக்கு. அப்போதைக்கு இப்போதே சாப்பிட்டுடு."

லலிதா சிரித்தாள்.

இருட்டுகிற நேரம், பாரதி வந்து சேர்ந்தாள்.

"வாடியம்மா குழந்தை" என்றபடி பாரதியின் கையைச் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள் அம்மா.

லலிதாவின் அருகில் அமர்ந்தாள், பாரதி.

பாரதி உடுத்தியிருந்த காட்டன் புடைவை, அதன் அழகிய, மென்மையான இளம் பச்சை வர்ணத்தை, கொழுந்து வெற்றிலை நிற ஜாக்கெட்டை, ஒற்றைச் செயின், முத்து வைத்த அடக்கமான தோடு, சுத்தமான விரல் நகங்கள், அழுக்குப் படாத பாவாடை ஓரம், பூசியதே தெரியாது பூசிய பவுடர், முகத்தில் வீசும் அறிவுக் களை, கண்களின் தீட்சண்யம், எப்போதாவது சிரித்துவிட்டு மூடிக் கொள்ளும் உதடுகள், எல்லாவற்றையும் ஒன்று விடாமல் கூர்மையாகப் பார்த்தாள் அம்மா.

"என்னம்மா" என்றாள் பாரதி கூச்சத்துடன்.

"அரவிந்தன் உன்னைச் சொல்லிச் சொல்லி மாஞ்சிப் போறானே. அந்த மனுஷி எப்படிப்பட்டவன்னு பார்க்கிறேன்."

"என்ன அரவிந்தன், அம்மாகிட்ட என்ன சொன்னீங்களாம்? ஏதானும் அதிகப்படியா சொல்லி வச்சுட்டீங்களோ?"

"இல்லை. உண்மையை மட்டும்தான் சொன்னேன்."

அம்மா, வாஞ்சையுடன் சொன்னாள்.

"நீ பெரிய ஞானஸ்தியாமே. சொன்னான். சரஸ்வதி கடாட்சம் பெற்றவளாமே, சொன்னான். என் அரண்மனையில, மன்னிக்கணும், பழக்கதோஷம் வந்துடுச்சு, எங்க வீட்டுல, பட்டுச் சேலை பரபரக்கும். வைரத் தோட்டோடு டாலடிக்கிற பொம்மனாட்டிகள் வர்றதைப் பார்த்திருக்கேன். வாயைத் திறந்தா அந்தஸ்து, பணம், சொத்து, சுகம்னு பேசற பொம்பிளைகள் அனுபவம்தான் எனக்கு. ஒரு ஜமீன்தார் சம்சாரம், இந்த காந்தி என்ன இப்படி பைத்தியமா இருக்காரேன்னு பேசினதைக் கேட்டிருக்கேன். என்ன பண்ண? சத்தியத்தைப் பேசக் கூட, பட்டு, பணம், பவிஷு வேண்டியிருக்கு. என் பையன் கூடச் சொல்வான். பொம்மனாட்டிகள், பதவியில் உள்ளவர்கள், பணம் படைச்சவளுக்குதான் டீ.வி.யில வாய்ப்பே தருவானாமே.. பெரிய அறிவாளிகள் தெருவில் நிக்கறா. ரெண்டுங்கெட்டான் எல்லாம் பல்லக்குல போறது. காலம் செய்யற கூத்தைத்தான் பாரேன்."

"எல்லாக் காலத்திலேயும் அப்படித்தான் இருந்துச்சு மாமி. கம்பர் எப்படிப்பட்ட கவி. அவர் காலத்துல ஒட்டக்கூத்தனுக்குத்தானே அரசு அங்கீகாரம் எல்லாம். அது அப்படித்தான்."

அம்மா, பாரதியைப் பார்த்துச் சொன்னாள்.

"குழந்தே... உன் மனசு கூட எனக்குத் தெரியும். என் மகன் சொல்லி இருக்கான். இஷ்டப்படாததைச் செய்யச் சொல்றவன்,



அண்மையில் ஜெருசலேம் நகரில் வசிக்கும் முஸ்லிம் மக்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவம். அங்குள்ள 'அல்–அகியூஸா' மசூதியில் பனிப்புயல் வீசி, நாற்பது சென்டிமீட்டர் உயரத்துக்குப் பனி விழுந்து விட்டது! படத்தில் பனித்துகள்களைச் சற்றே விலக்கிவிட்டு, தொழுகை நடத்திய அவ்வூர்வாசிகளைப் பாருங்கள். பக்திக்கு முன்னால் பனி எம்மாத்திரம்?

– சி.எம்.

கடவுளே ஆனாலும், செய்யப்படாது."

"சரி மாமி."

"உனக்குத்தான் எத்தனை கஷ்டம்! எனக்குத் தோணறது என்னன்னா, கலை வரப்ரசாதிகள், கல்யாணம் பண்ணிக்கப்படாது. ஆணானாலும், பெண்ணானாலும் சரி. பண்ணிட்டா, கலையை மதிக்கிறவனா இருக்கணும். இல்லைன்னா, பிடுங்கல் வந்துடும். எல்லாத்துக்கும் மேலே, கலை போயிடுமே. சோறு பொங்கறவா, இருக்கா. புள்ளை பெத்துக்கறவா இருக்கா. பாடறவன் எத்தனை பேர். ஆடறவன் எத்தனை பேர்? அது முக்கியம் இல்லையோ..."

"நிச்சயம் மாமி."

"நீ கலையை மட்டும் இழக்காதே. கலைக்காக எதையும் இழக்கலாம்."

பாரதிக்கு அழுகை வந்தது. கண்ணீர் கசிந்து, வெளியே வந்து விடாமல், கண் இமை வரம்புக்குள் அதைத் தேக்கிக் கொள்ள அரும்பாடுபட்டாள்.

லலிதாவும், அதே உணர்ச்சியில் இருந்தாள்.

அரவிந்தன் சூழ்நிலையைப் புரிந்து கொண்டான்.

"பார்தி, ஒரு பாட்டுப் பாடுங்க, அம்மாவுக்கு..."

"என்ன பாடலாம், அரவிந்தன்?"

"தேவகாந்தாரி இந்தச் சூழ்நிலைக்குப் பொருந்தும்."

"சரி."

ஒருகணம், மனசுக்குள் அந்த ராகதேவதையை ஆவாஹனம் செய்து கொண்டாள்.

மழை ஜலம். வீதியில் ஓடும் பால் வெள்ளம், தெரு மிட்டாய்க்காரனிடம் மிட்டாய் கேட்கும் குழந்தை; கல்யாணம் முடிந்த மறுநாள் தம்பதிகள் சந்திக்கும் அழகான காலை, பிரசவத்துக்கு ரத்தம் கொடுத்தவரைப் பார்க்கும் பார்வை, பழைய வாத்தியாரைக் கலெக்டர் மாணவன் பணியும் அன்பு எல்லாம் சேர்ந்தது தேவகாந்தாரி. நெகிழ்ச்சியின் வெள்ளைச் சாம்பிராணிப் புகை...

தியாகையரின் க்ஷீரசாகர சயனத்தை எடுத்துக் கொண்டாள்.

"ராமா, பாற்கடலில் துயில்கின்ற பொருளே... கடைத் தேற்றம் அருள்பவனே! என்னைக் கருணையோடு ஏற்றுக் கொள்வாயாக. கஜேந்திரனை, த்ரௌபதையை, ராமதாசனை, சீதாவை என்று பலரையும் காத்தவனே. என்னையும் காக்க மாட்டாயா...?" அம்மா சொன்னாள்.

"மிருகம் முதலாக, பத்தினியை, சகோதரியை எல்லாரையும் காப்பாத்தற ராமன் உன்னையும் காப்பான். கவலைப்படாதே."

உள்ளம் தெளிந்து, புதிய தைரியமே பிறந்தது.

"ஏண்டி பெண்டுகளா, இத்தனை அறிவாளிகள் இருந்து கொண்டு, என் பிள்ளைக்கு உங்களைப் போல, ஒரு பெண் பார்த்துக் கட்டிவைக்கப்படாதோ?"


பாரதி அரவிந்தனைப் பார்த்தாள்.

அம்மா சொன்னாள்.

"பாரதி, உன்னைப் போல பெண் வேணுமாம் அவனுக்கு."

அரவிந்தன் திடுக்கிட்டான்.

(தொடரும்)





2000 பிப்ரவரி 13
பிரமாதி மாசி 1
மலர் : 58
இதழ் : 29

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




நீதிமன்றத்தை அவமதிக்கும் அ.தி.மு.க!

வழக்குகளைச் சந்திக்காமல் காலம் கடத்தவும் சட்டத்தின் ஓட்டைகளில் புகுந்து வெளி வரவும் ஜெயலலிதா மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். அந்த முயற்சிகளையும் மீறி, ஒரு நியாயமான தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால், பிளெசன்ட் ஸ்டே வழக்கில் தீர்ப்பு வெளியானதைத் தொடர்ந்து, தனி நீதிமன்ற நீதிபதிகளுக்கு வழங்கப் பட்டு வரும் பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருக்கிறது! ஆயுதம் ஏந்திய ஒரு போலீஸ் இருந்த இடத்தில் இப்போது பைலட் ஜீப்புடன் ஒரு இன்ஸ்பெக்டர், நான்கு காவலர் கள்!

ஜெயலலிதாவுக்கு எதிராக ஒரு நியாயமான தீர்ப்பு வழங்குவதென்பது தமிழ்நாட்டில் இன்று ஆபத்தான விஷயமாகிவிட்டது! இத்தகைய சூழலில் தெளிவும் நியாயமும் நடுநிலையும் கொண்ட ஒரு தீர்ப்பை வழங்கியுள்ள நீதிபதி ராதாகிருஷ்ணன் பாராட்டுக் குரியவர்.

கொடைக்கானலில் பல மாடி பிளெசன்ட் ஸ்டே ஹோட்டல் கட்ட அனுமதி வழங்கி யதில் பல முறைகேடுகள் நடந்ததாக அரசுத் தரப்பில் மனு செய்யப்பட்டது. அவற்றுள் இரு முறைகேடுகளுக்காக, தலா ஓராண்டு சிறைத் தண்டனை ஜெயலலிதாவுக்கு விதிக்கப்பட்டது. எனினும் மொத்த தண்டனையை இரு ஆண்டுகளாக்காமல் ஒரே கால கட்டத்தில் இரு தண்டனைகளையும் அனுபவிக்க அனுமதித்துள்ளார் நீதிபதி.



அதே சமயத்தில் 'கிரிமினல் சதித் திட்டம் தீட்டப்பட்டதற்கான சான்றுகள் வலுவாக இருக்கின்றன; குற்றம் சாட்டப் பெற்ற ஐவரும் குற்றவாளிகள் என்று சந்தேகத்துக் கிடமின்றிச் சொல்லலாம்' என்றும் நீதிபதி தெளிவுபடுத்தியிருக்கிறார்.


சில ஆவணங்களை ஜெ முறைகேடாகத் திருத்தியதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை நீதிபதி ஏற்கவில்லை. அக் குற்றச்சாட்டுக்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார். எனவே அந்தக் குற்றச்சாட்டிலிருந்து ஜெ விடுவிக்கப்பட்டிருக்கிறார்.

இதற்கெல்லாம் மேலாக, உடனடி சிறைவாசத்தை உத்தரவிடாமல் மேல் கோர்ட்டில் முறையிட ஜெயலலிதாவுக்கு ஒரு மாதம் அவகாசம் தந்துள்ளார் நீதிபதி ராதா கிருஷ்ணன். அதுவரை தமது தீர்ப்பு அமுலுக்கு வராது என்றும் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

ஒரு முன்னாள் முதல்வருக்கு எதிராகத் தீர்ப்பு வழங்குகிறோம் என்பதை மறக்காமல் செயல்பட்டிருக்கிறார்.

நீதிபதியின் பாரபட்சமற்ற அணுகுமுறையினால் இந்த முக்கியமான தீர்ப்பு மேலும் பலம் பெறுகிறது. தமது பேரில் வீண் பழி சுமத்தவே கருணாநிதி பொய் வழக்குகள் போட்டதாக ஜெயலலிதா நிகழ்த்தி வந்த பிரசாரம் அடிபட்டுப் போகிறது. பொது வாழ்வில் ஊழல் செய்வோர் தண்டனையிலிருந்து தப்ப முடியாது என்பதும் நிரூபணமாகிறது.

மேல் கோர்ட்டில் முறையிட்டு ஜெயலலிதா வெற்றி பெறக் கூடும்; அல்லது சிறப்பு நீதிமன்றத் தீர்ப்பை உயர்நீதி மன்றம் உறுதி செய்யக் கூடும். ஆனால், அவரது அரசியல் கலாசாரம் எத்தகையது என்பதும் சட்டம் ஒழுங்கை அவரும் அவரது கட்சியினரும் எவ்வளவு துச்சமாக மதிக்கின்றனர் என்பதும் பட்டவர்த்தனமாக



நிரூபணமாகியுள்ளன.

பிப்ரவரி 2 அன்று தீர்ப்பு வெளியான கையோடு தமிழகமெங்கும் வன்முறை வெடித்திருக்கிறது. கையில் தயாராக பெட்ரோல் குண்டுகள் வைத்துக்கொண்டு, காத்திருந்ததுபோல் இயங்கியிருக்கிறார்கள் அ.தி.மு.க.வினர். அநியாயத்துக்குப் பொது சொத்தும் அக்கிரமத்திற்கு மூன்று இளம் உயிர்களும் பலியாகியிருக்கின்றன. எக் காரணம் கொண்டும் இந்த நடத்தையை நியாயப்படுத்தவோ, மன்னிக்கவோ முடியாது.

நிலைமையின் தீவிரத்தைத் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனார் புரிந்து கொள்ளாமல் போனதுதான் ஆச்சர்யம்! தீர்ப்பு வெளியான தினத்தன்று மாலையே நெடுஞ்செழியன் மறைவுக்காக நடந்த இரங்கல் கூட்டத்தில், ஜெயலலிதா தமது கட்சியினருக்கு வன்முறையில் தொடர்பு இல்லை என்று அறிவித்திருக்கிறார். தாம் மீண்டும் ஆட்சிக்கு வந்து கருணாநிதியை எப்படியும் சிறை வைக்கப் போவதாகச் சூளுரைத்திருக்கிறார். "இந்தக் கஷ்ட காலத்தில் உங்களுக்கு உறுதுணையாயிருப் போம்" என்று மூப்பனார் அதே கூட்டத்தில் ஜெயலலிதாவை வழி மொழிந்தது முற்றிலும் கேவலம்!

தீர்ப்பு வெளியானதைத் தொடர்ந்து கிளம்பிய வன்முறையை வன்மையாக ஒடுக்கும்படி மத்திய அரசு, மாநில அரசுக்கு ஆலோசனை கூறியிருக்கிறது. ஜெய லலிதா கட்சியினர் பிப்ரவரி 2 அன்று இழைத்த வன்முறைகளை நீதிமன்ற அவ மதிப்பாகவே கொள்வதற்கு இடமிருக்கிறது. இதை மூப்பனார் பொருட் படுத்தாமலிருக்கலாம்; நடந்தவை யாவும் ஆளுங்கட்சியின் சதிச் செயல்கள் என்று ஜெயலலிதா கோயபல்ஸ் பிரசாரம் செய்யலாம்; ஆனால் தமிழ்நாட்டு வாக்காளர்கள் சுலபத்தில் ஏமாந்து விட மாட்டார்கள்.

காத்து – கறுப்பு சீரியல்களுக்கு நடுவே, உருப்படியான காதல் கதையாக (விஜய் டிவியில்) வந்து கொண்டிருக்கும் ஒரு சீரியல் 'ஊஞ்சல்'. அதில் காதலர்களாக நடிக்கும் எஸ்.பி.பி. சரணையும் ஷாலினியையும் சந்தித்தோம். இருவருமே தொழில்முறைப் பாடகர்கள் என்பது இன்னொரு சிறப்பு:

● **ஷாலினி, நீங்க வீட்டுல இங்கிலீஷ் பேசறீங்க. தமிழ் சீரியல்ல நடிக்கற போது உச்சரிப்பு கஷ்டமா இருக்கலியா?**

அம்மாவுக்குத் தமிழ் நல்லா தெரியும். அவங்கதான் எனக்குத் தமிழ் சொல்லிக் கொடுத்தாங்க. ஆனா 'ழ' மட்டும் சரியா வரலே. ஒரு தடவை இளையராஜா சார் மியூசிக்ல பாடற போது, 'மழை'ங்கறதுக்குப் பதிலா மலை, மலைன்னே பாடிட்டிருந்தேன். 'நோ, நோ. ழ, ழ, ழ'ன்னு திருத்தினார். அப்போ அங்கே எவ்வளவு சொல்லிப் பார்த்தும் 'ழ' சரியா வரல்லே. வீட்டுக்கு வந்ததும் சொல்லிப் பார்த்தேன். கரெக்டா 'ழ' வந்தது!

● **சரண், உங்க கேஸ் எப்படி?**

எனக்குத் தமிழ் பிரச்னையே இல்லே. நான் பிறந்தது, வளர்ந்தது, படிச்சது எல்லாமே மெட்ராஸ்தான்'

● **பாட வந்தது எப்படி?**

ஷாலினி : ஹோலி ஏஞ்சல்ஸில் நான் ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்ட் படிக்கறபோதே டிவி புரோக்ராம்ல பாடிட்டே நடிச்சேன். தாயன்பன் அதைப் பார்த்துட்டு, 'யார் அந்தக் குட்டிப் பொண்?'ன்னு விசாரிச்சார். 'சூப்பு நூடுல்ஸ்' விளம்பரப் படத்துல அவர் ஏற்பாடு செஞ்சு நடிச்சேன், பாடினேன். அதுதான் என்னோட முதல் விளம்பரப் படம். அப்பவே, சவுண்ட் ஆஃப் மியூசிக், 'ஆன்' மாதிரி ஸ்டேஜ் பிளேல எல்லாம் பாடிட்டே நடிச்சிருக்கேன். மூணு வயசுல பாட ஆரம்பிச்சு, பதிமூணு வயசில மேரேஜ்ல பாட ஆரம்பிச்சேன். கஸல் கூடப் பாடினேன்!

சரண் : அப்பாவோட குரல்ல எனக்கும் கொஞ்சம் வந்துட்டுது. பாடறது எனக்கு நேச்சுரலாவே அமைஞ்சிட்டுது.

● **உங்களுக்குப் பிடிச்ச பாடகர்கள் யாரு?**

ஷாலினி : ஜக்ஜித் சிங், பீனா மஸானி,



பங்கஜ் உதாஸ்!

சரண் : அப்பாவைத் தவிரவா? முகமது ரஃபி!

● **மியூசிக் காம்படிஷன்ல எதுலயும் கலந்துக்கலயா?**

ஷாலினி : ஸ்கூல்ல நிறைய பிரைஸ் வாங்கியிருக்கேன். ஆர்.டி. பர்மன் நினைவா நடத்தின மூவி போட்டிக்குக் கூட ட்ராக்ல பாடி அனுப்பிச்சு வச்சேன். '1942 – எ லவ் ஸ்டோரி' படத்துல வர குச் நா கஹோ, தில் நே கஹா ரெண்டு பாட்டு. இதை ரெக்கார்டு பண்ணின சவுண்ட் என்ஜினீயர் பாலாஜி என் பாட்டைக் கேட்டு அசந்து போய், 'இவ்வளவு சின்ன வயசுல இத்தனை நல்லா பாடறியே? நான் ரெக்கார்டிங் ஃபீஸ் எதுவும் வாங்க மாட்டேன்'னுட்டார்! அப்புறம் என் பேர்லயே ஒரு பாப் ஆல்பம் வந்துது. நிறைய பாப் சாங்ஸ் பாடினேன். மக்னா சவுண்ட் கூட வெளியிட்டிருக்காங்க.

சரண் : நானும் தேவனும் பாடி முதல் ஆல்பம் வெளியிட்டேன். நல்ல ரெஸ்பான்ஸ்.

● **பாட்டுல இருந்து எப்படி நடிக்க வந்தீங்க?**

ஷாலினி : ஸ்டேஜ்ல நான் டான்ஸ் பண்ணிட்டே பாடறதைப் பார்த்திருக்கார் கே.பி. சார். டான்ஸ் டிரேஸ் ஃபுல்லா இருக்குன்னார். அப்புறம் அவரோட சீரியலுக்கு டைட்டில் சாங் பாடறபோது, சீரியல்ல நடிக்கிறியான்னு கேட்டார். பாடறதோட படிப்புலயும் கவனமா இருந்தேன் நான். பாடற காரக்டர் மாதிரி இருந்தா பரவால்லன்னேன். எனக்காகக் கதையையே சேஞ்ச் பண்ணினார். பாப் சிங்கர் அமெரிக்கா போய்ட்டு வர மாதிரி மாத்தினார். டைரக்டர் சுந்தர் கே. விஜயன் ரொம்ப ஹெல்ப் பண்ணினார்.

● **சரண், நீங்களோ அமெரிக்கா போய், பேஸ் யூனிவர்சிடில மார்க்கெட்டிங் படிச்சுட்டு வந்தீங்க. ஆனா மியூசிக் ஃபீல்டுக்கு வந்துட்டீங்க?**

சரண் : நவம்பர் 96ல வந்துட்டேன். நான் படிச்ச புரொஃபஷனுக்குப் போகலே. பாடப் புடிச்சிருந்துது. பாட ஆரம்பிச்சுட்டேன். அப்பாவும் அப்ஜக்ட் பண்ணலே. கோபமும் படலே. ஸோ, அவர் சம்மதிச்சிட்ட மாதிரி தான் எடுத்துக்கிட்டேன். அம்மா என்கரேஜ் பண்ணினாங்க.

● **'ஊஞ்சல்' சீரியலுக்கு அப்புறம் ஆஃபர் வந்துதா?**

ஷாலினி: வந்துது. பட் ஐ ஆம் நாட் கீன்.

சரண்: மூணு நாலு ஆஃபர் வந்துது. இந்தி நடிகர் ஜிதேந்திரா கூட தூர்தர்ஷனுக்குப் பண்ணப் போற சீரியல்ல நடிக்கிறியான்னு கேட்டிருந்தார். யெஸ்னு சொல்லிருக்கேன்.

● **சினிமா ஆஃபர்**





• 'ஊஞ்சல்' தொடரில்...

வந்துதா?

ஷாலினி: வந்தாக் கூட நடிக்க மாட்டேன். கேட்டாங்க. ரொம்பப் பிடிவாதமா மறுத்துட்டேன். ஏன்னா, முதல் இடம் பாட்டுக்குத்தான்!

சரண்: வரட்டும், பார்க்கலாம்!

● **ஹிந்தி பாட்டு பாடுவீங்களா?**

ஷாலினி: 'சோட்டி ஸி ஆஷா'ங்கற சீரியலுக்கு டைட்டில் சாங் பாடியிருக்கேன்! அதான் 'காசளவு நேசம்'- ஹிந்தி.

சரண்: எனக்கு செகன்ட் லாங்க்வேஜ் இந்திதான். அதுனால இந்திப் பாட்டு பாடறது எனக்குப் பிரச்னையே இல்லே!

● **காதல்ங்கற உணர்வு பத்தி என்ன நினைக்கறீங்க?**

ஷாலினி: உன்னதமானது. கேரிங், ஷேரிங், ஃபீலிங், சிம்பதைஸிங் எல்லாமே இதுல அடங்கியிருக்கு!

சரண்: ஒவ்வொருவரும் கட்டாயமா அனுபவிக்க வேண்டிய அற்புதமான எக்ஸ்பீரியன்ஸ்.

● **ஷாலினி, நீங்க லவ் மேரேஜ் விரும்பறீங்களா, அரேஞ்ட் மேரேஜா?**

ஷாலினி: (சிரித்து) சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. நாட் அரேஞ்ச்ட் மேரேஜ், எனிவே!

● **சரண், நீங்க?**

சரண்: நான் அமெரிக்கால இருக்கறப்பவே லவ் பண்ண ஆரம்பிச்சேன். அவ பஞ்சாபி கேர்ல். பிஜோயான்னு பேர்.

● **வீட்டுல எதிர்ப்பு இளம்பலியா?**

சரண்: இளம்பாமயா? ஒரே எதிர்ப்புத்தான்!

● **தென்? என்ன பண்ணீங்க?**

சரண்: அவ இந்தியாவுக்கு ஒரு ஹாலிடே ட்ரிப் வந்தபோது அம்மா-அப்பாவப் பார்த்துப் பேசச் சொன்னேன். அப்புறம் எல்லாம் சரியாயிடிச்சு.

● **ஸோ, ரெண்டு பேருமே காதலை சப்போர்ட் பண்றீங்க?**

சரண், ஷாலினி (கோரஸாக): யெஸ், யெஸ்!

தொகுப்பு: **சித்தார்த்**

அட்டை, வண்ணப்படங்கள்: **வெங்கடேஷ்**



இந்திய தடகளத்தின் தங்கப் பெண்ணான பி.டி. உஷா, தனது சொந்த ஊரான பயோளிக்கு அருகில் உள்ள கோயிலண்டி என்கிற இடத்தில் ஒரு ஸ்போர்ட்ஸ் ஸ்கூல் தொடங்கப் போகிறார். தடகளப் பயிற்சிக்கு வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்கும் இந்தப் பள்ளியை, 'இந்திய விளையாட்டுத்துறைக்கு என்னால் ஆன சிறு நன்றிக்கடன்' என்று குறிப்பிடுகிறார். ''இந்தப் பள்ளி உருவாக்குகிற அதலெட்கள் மூலமாக, என் அதலெடிக் வாழ்க்கையில் எனக்குக் கிடைக்காமல் போன மெடல்களை வாங்குவதே என் லட்சியம்'' என்கிறார் பி.டி. உஷா!

– **சி.எம்.**

உயிரணு உற்பத்திக்கு மருந்து சாப்பிட்டு குழந்தைப் பெற்ற தம்பதிகள்

உண்மை நிகழ்ச்சி!

கீழேகண்ட போட்டோவில் உள்ள தம்பதிகளாகிய நாங்கள் பல ஆண்டுகளாக குழந்தைகள் இல்லாமல் இருந்து பல டாக்டர்களை சந்தித்து தோல்வியாகி, பின் வந்தவாசி டாக்டர் A. அர்ஜுனா, டாக்டர் V.A. ஆண்டாள் அவர்களை சந்தித்தோம். என்னுடைய விந்து பரிசோதனையில் உயிரணு இல்லை என்று கூறினார்கள். எனது மனைவியின் பரிசோதனையில் கருத்தரிக்க பல இடைஞ்சல்கள் இருப்பதாக கூறினார்கள். எனவே நாங்கள் இருவரும் மேற்படி டாக்டர்களிடம் மருத்துவச் சிகிச்சை பெற்றதில் எனக்கு உயிரணுக்கள் உற்பத்தியாகியும், என்னுடைய மனைவிக்கு மலடு நீக்கியும் குழந்தை பெற்றோம். படத்தில் உள்ள பெண் முதலில் பிறந்தது. பிறகு இரண்டாவதாக ஒரே பிரசவத்தில் இரண்டு ஆண் குழந்தைகள் பிறந்தது. அதன்பின் மூன்றாவது பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்துள்ளது.

மேலும் இந்த டாக்டர்கள் ஆண்களில் உயிரணுக்கள் குறைவாக உள்ளவர்களுக்கு அணு உற்பத்தி செய்து, அபிவிருத்தி செய்தும், பெண்களுக்கு மாதவிடாய் பிரச்னை ஒழுங்கு



படுத்தியும், கருப்பை ஒவரிகளை சரிசெய்தும் கருக் குழாய் அடைப்புகளை நீக்கியும், கருப்பையிலும் சினைப் பைகளில் உள்ள கட்டிகளை கரைத்தும் குழந்தை பிறக்கச் செய்கிறார்கள். குழந்தை இல்லாத தம்பதிகள் இந்த டாக்டர்களை சந்தித்தால் எங்களைப் போல புத்திரபாக்கியம் அடையலாம்.

உலகப் புகழ்பெற்ற 'மருத்துவதிலகம்' டாக்டர் A. அர்ஜுனாவுடன் திருவண்ணாமலை மாவட்டத்தில் உயிரணு உற்பத்தியாகி குழந்தை பெற்ற கிருஷ்ணன் ஜெகதாம்பாள் தம்பதிகள்.

டாக்டர் அர்ஜுனாவின் மலடு நீக்கும் மருத்துவம் பற்றிய விரிவான பேட்டி **16.1.2000** கல்கி பொங்கல் மலரில் (பக். **124, 125**-ல்) வெளியாகியுள்ளது.

நவீன வைத்தியாலயா

சென்னையில் சனி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம்.
நெ.9, நெற்குன்றம் பாதை. (மாநில தலைமை தேர்தல் அலுவலகம் எதிரில்) 100 அடி ரிங் ரோடு, வடபழனி, சென்னை – 600 026
போன் : 4833464 STD. 044

ஹோமியோபதி – சித்தா – ஆயுர்வேத மலடு நீக்கும் ஆஸ்பத்திரி

செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் டாக்டரை சந்திக்குமிடம்.
நெ. 7, இராமய்யர் தெரு, வந்தவாசி,
வீடு : நெ. 29, பிராமணர் தெரு, வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம் – 604 408
போன் : 25208 STD. 04183



"கல்கி ஷாப்பிங்"

பக்கங்களில் விளம்பரம் செய்ய ரூ.1250/- மட்டுமே. செய்து பயனடைவீர்!

47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை – 97.
போன்: 2345622, 2345623

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ எம்பெருமானார் திவ்ய தேச யாத்திரை – ஸ்ரீ ரங்கம்

காசி, கயா, மதுரா, பத்ரிகாஸ்ரமம்
20.5.2000 முதல் 7.6.2000 வரை
(19 நாட்கள்)

ரயில், பஸ், இரண்டு வேளை காப்பி, சாப்பாடு, தங்கும் வசதி உட்பட கட்டணம் ரூ. 6400/-. ரயில் பாஸ் உள்ளவர்களுக்கு சலுகை உண்டு.

முன் தொகை ரூ. 2500/-ஐ 15.3.2000க்குள் அனுப்ப வேண்டும்.

விபரங்களுக்கு:

டி. ராகவாச்சாரி,
134/152 (old) கீழ சித்திரை வீதி.
ஸ்ரீரங்கம் - 620 006.
தொலைபேசி: (0431) 430498

மூப்பனார் கிளப்பிய



• எஸ். குருமூர்த்தி

த.மா.கா.வின் தடாலடி முடிவின் காரணமாக, தமிழக அரசியலின் போக்கு எப்படி மாறும்? 2001-ல் நடக்க இருக்கின்ற சட்டமன்றத் தேர்தலை இது எவ்வாறு பாதிக்கும்? சில அரசியல் விமர்சகர்களிடமும் 1998-ம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் ஜெ.வுடன் கூட்டணி கண்ட வைகோவிடமும் கேட்டோம்.

இனி மரியாதை போய்விடும்!

எஸ். குருமூர்த்தி :

த.மா.கா. என்று ஒரு கட்சி இனி தேவை தானா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. காரணம், எந்த அ.தி.மு.க. - காங்கிரஸ் உறவை எதிர்த்து விலகி வந்து தனிக்கட்சி கண்டாரோ, அந்த நோக்கத்திற்கு நேர்மாறாக அ.தி.மு.க.வுடன் நெருங்கியிருக்கிறார் மூப்பனார். எந்தக் கொள்கையோ, கோட்பாடோ அல்லது தத்துவமோ அவரது இந்த முடிவுக்கு அடிப்படையாக அமைந்திருக்கும் என்று நான் கருதவில்லை. இனி அடுத்தக் கட்டம், காங்கிரஸில் இணைய வேண்டியதுதான். தனது இந்த முடிவின் மூலம், நரசிம்மராவ் அன்று செய்தது சரி என்று மூப்பனார் சொல்கிறார் போலிருக்கிறது. இதுபோன்ற தடுமாற்றங்களைப் பார்க்கும்போது ஒழுங்காக அவர் காங்கிரஸிலேயே இருந்திருக்கலாம் என்றும் தோன்றுகிறது. இரு கழகங்களுக்கும் மாற்று ஏற்பாடாக, மூப்பனார் இருப்பதாக மக்கள் நினைத்தார்கள். இனி மரியாதை போய்விடும். குறைந்த பட்சம் ஒரு சட்டமன்றத் தேர்தலில் தமது தனித் தன்மையை மூப்பனார் சோதித்துப் பார்த்திருக்கலாம்.

அடுத்தது மதவாதப் பிரச்னை. முஸ்லிம் லீக், த.மு.மு. போன்ற அமைப்புகளுடன் நெருங்கியிருக்கும் போது மூப்பனார் மதவாதம் பற்றிப் பேசும் தகுதியை இழக்கிறார். ஊழல் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியிருக்கும் ஜெயலலிதாவுடன் சேர்ந்த காரணத்தால் மற்றவர்களது ஊழலைப் பற்றிப் பேசும் தார்மீக உரிமையும் அவருக்கு இப்போது இல்லாமல் போய் விட்டது.

அ.தி.மு.க.வுடன் த.மா.கா. உறவு கொண்டு விட்டதாலேயே தி.மு.க. பலவீனமாகப் போய் விட்டது என்ற வாதம் சரியல்ல. 1996-ல் ஜெ. எதிர்ப்பு வோட்டுகள் முடிவைத் தீர்மானித்தன. காங்கிரஸ் கலாசாரத்தில் வந்த மூப்பனார் கடைசிக் கட்டத்தில் தி.மு.க.வுடன் கைகுலுக்குவார் என்று யாரும் எதிர்பார்க்க

• வைகோ





• சின்னக் குத்தூசி

ஜெ.வை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்ற வலுவான காரணம் இருந்தது. எனவே எதிர்மறையான சக்திகள் இணைய வலுவான காரணம் வேண்டும். ஜெ.வைத் தோற்கடிக்க வேண்டும் என்ற தீவிரம் அப்போது மக்களிடம் இருந்ததைப் போன்று, தி.மு.க.வைத் தோற்கடிக்க வேண்டும் என்ற தீவிரம் மக்களிடையே இப்போது இல்லை!

காத்திருக்க வேண்டும்!

பி.சி. கணேசன்:

ஒரு கட்சியை எதிர்ப்பதற்காகவே மற்றொரு கட்சி தோன்ற முடியாது. எனவே அ.தி.மு.க.வை எதிர்ப்பதற்காகத்தான் த.மா.கா. உருவானது என்ற வாதமே தவறு. 'அப்படியென்றால், தொடர்ந்து காங்கிரஸிலேயே இருந்திருக்கலாமே' என்ற கேள்வி எழும். அன்றும் ஆட்சியில் இருந்தவர்களின் ஊழலை எதிர்த்தது த.மா.கா.; இன்றும் ஆள்கின்றவர்களின் ஊழலை எதிர்க்கிறது. எனவே த.மா.காவின் ஊழல் எதிர்ப்பில் எந்த மாறுதலும் இல்லை. அதே போல பா.ஜ.க.வை எதிர்ப்பதிலும் தொடர்ந்து அதே நிலைப்பாட்டை எடுத்து வருகிறது.

சில தேர்தல் வியூகங்கள் வகுப்பதாலேயே லட்சியங்களில் இருந்து நழுவி விட்டதாகச் சொல்ல முடியாது. தி.மு.க. - பா.ஜ.க. எதிர்ப்பு வோட்டுக்கள் சிதறக்கூடாது என்பதற்காக த.மா.கா. - அ.தி.மு.க.வுக்கு ஆதரவுக்கரம் நீட்டியிருக்கிறது. எனவே பாராளுமன்ற ஜனநாயகத்தில் வகுக்கப்படுகின்ற தேர்தல் வியூகங்கள் கொள்கை பாதிப்பை விளைவிக்கும் என்று சொல்வதற்கில்லை.

தமிழக அரசியலின் நிர்பந்தங்கள் காரணமாக வரும் சட்டமன்ற பொதுத் தேர்தலில் அ.தி.மு.க. - த.மா.கா. கூட்டணி அமைத்து தேர்தலைச் சந்திப்பது என்பது தவிர்க்க முடியாத ஒன்று எனக் கருதுகிறேன். த.மா.கா. இனித் தனிக் கட்

வில்லை. ஒன்றுக்கொன்று எதிர்மறையான தி.மு.க.வும்- த.மா.காவும் அன்று கூட்டணி கண்டதை மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். அதற்கு,

'ஸ்பெஷல்' புழுதி!

• பி.சி. கணேசன்





• சோலை

சியாக நீடிப்பது சரிதானா என்று கேள்வி எழுப்புகிறார்கள். காங்கிரஸுடன் இணை வதற்கு சரியான தருணம் வரும் வரை த.மா.கா. காத்திருப்பதைத் தவிர வேறு வழி யில்லை.

மூப்பனார் ஒரு பலமான சக்தியல்ல!

சின்னக்குத்தூசி :

எந்தக் கட்சிக்கும் - எப்படிப்பட்ட முடிவையும் எடுக்க உரிமையுண்டு. கட்சிகள் கூட்டணி சேர்வது என்பது ஒருபோதும் கொள்கையின் அடிப்படையில் அமைவ தாக இல்லை; யாரோடு கூட்டுச் சேர்ந்தால் அதிக இடங்கள் கிடைக்கும்; அதிக இடங் களில் வெற்றி பெறலாம் என்கிற ஆதாயக் கணக்கின் அடிப்படையிலேயே கூட்டாளி கள் பற்றி முடிவு எடுக்கின்றன. 1999 தேர் தலுக்கு முன்பு பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாசிடம் "யாரோடு கூட்டு" என்று கேட்கப்பட்டபோது, "யார் அதிக இடங்கள் தருகிறார்களோ அவர் களோடுதான் கூட்டு" என்று ஒளிவுமறைவு இல்லாமல் பதிலளித்தார் அவர்.

எனினும், 'மூப்பனார் - தி.மு.க.வை கைகழுவி விட்டு அ.தி.மு.கவோடு சேர்வது பற்றி மட்டும் எல்லோரும் இவ்வளவு புழுதி கிளப்புகிறார்களே, ஏன்?

மூப்பனார் கட்சியின் தோற்றமே - ஜெய லலிதா எதிர்ப்பில் உருவானதுதான். ஜெய லலிதாவுடன் பி.வி. நரசிம்மராவ் கூட்டுச் சேர்ந்தார் என்பதற்காக அவரது கட்-அவுட்களைக் கூட எரித்து - உருவாக்கப் பட்ட கட்சிதான் மூப்பனார் கட்சி! இன்று அதே ஜெயலலிதாவுடன் அவர் கூட்டு சேர்வதால்தான் எல்லோரும் மூப்பனாரை ஒரு அசூயையும் இகழ்ச்சியும் பொங்கப் பார்க்கிறார்கள்! மற்றபடி சட்டமன்றத் தேர் தலிலும் ஜெயலலிதாவுடன் கூட்டு வைத்துக் கொள்வதற்கான துவஜாரோகணம்தான் இப்போது அவர் அ.தி.மு.க.வுக்கு அளிக்க முன்வந்திருக்கிற ஆதரவு.

அடுத்த தேர்தலில் - மூப்பனார் ஜெய லலிதா கூட்டு தமிழக அரசியலில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தும்? இப்போதே நாம் அதுபற்றித் தீர்க்கமாக முடிவு செய்து விட முடியாது. ஓரளவு யூகமாகச் சொல்லலாம். மூப்பனாரின் கட்சி காங்கிரசுடன் இணைந்து விடும். இப்போது திண்டிவனம் கோஷ்டி - தங்கபாலு கோஷ்டி என்று காங் கிரசில் நடைபெறும் சண்டைகள் மூப் பனார் கோஷ்டி - மணிசங்கர் அய்யர் கோஷ்டி என்று புதிய வடிவம் பெறலாம்! இதனைக் குறிப்பிடுவதற்குக் காரணம் மூப்ப னாரும் அடங்கிய காங்கிரஸ் ஒன்றும் புதிய பலம் பெற்று விடாது; எப்போதும் போல் தி.மு.க. அல்லது அ.தி.மு.க.வுடன் சேர்ந்து தான் சில இடங்களில் வெற்றி பெற முடி யும். இது மாறாத வரையில் யாரோடு யார் கூட்டு சேர்ந்தால் - அதனால் என்ன புதிய மாறுதல் வந்து விடும்?

98 தேர்தலில் மூப்பனார் கட்சி தி.மு.க வுடன்தான் இருந்தது. அதனாலே மட்டும் தி.மு.க. அதிக இடங்களில் வெற்றி பெற முடிந்ததா? 99 தேர்தலில் மூப்பனார் மூன் றாவது அணி அமைத்தார். அதனாலே - மூப்பனாரின் அணி தி.மு.க. - அ.தி.மு.க.வை தோற்கடித்து அதிக இடங்களில் வெற்றி பெற முடிந்ததா, இல்லையே!

ஆகவே மூப்பனார் யாரோடு சேர்கிறார் என்பதையடுத்து தமிழக அரசியலில் எந்த மாற்றமும் ஏற்பட்டு விடாது; ஏற்பட்ட தில்லை.

அடுத்த சட்டமன்றத் தேர்தலில் - தி.மு.க.வா அ.தி.மு.க.வா என்ற கேள்வி யையும் விட - அதிக அளவில் - நல்லாட் சியா அல்லது மீண்டும் ஊழல், அராஜக ஆட்சியா என்ற கேள்விதான் விசுவரூபம் எடுத்து நிற்கும். அது சட்டமன்றத் தேர்தல் என்பதால், மதவாதமா? மதச்சார்பின்மையா என்ற பிரச்னை கூட எடுபடாது! இந்த அடிப்படையில் பார்த்தால், தி.மு.க. கூட் டணியே மீண்டும் வெற்றி பெறும் என்பதில் சந்தேகமில்லை.

கொள்கைகள் வெற்றி பெறுவதில்லை!

சோலை :

எங்களுடைய ஆதரவு இந்த இடைத்

"மாப்பிள்ளை டீவில கிரிக்கெட் ரொம் பப் பார்ப்பாரோ?"

"ஒரு மாட்ச் விடமாட்டார்; எப்படி கண்டுபிடிச்சீங்க...?"

"ஆப்பிளைத் திங்கிறதுக்கு முன்னாடி பாண்ட்ல போட்டு இப்படித் தேய்க் கிறாரே...!"

— பாலு





"என்ன இது சித்திரகுப்தா! தப்பும் தவறுமா யார் யார் உயிரையோ கொண்டு வந்திருக்கிறாயே!"

"நம் கம்ப்யூட்டரில் Y2K பிராப்ளம் தர்மராஜா, அதனாலேதான்!"

— மெலட்டூர் விசுவநாதன்

தேர்தலுக்கு மட்டும்தான் என்று சொல்கிறார் மூப்பனார். ஆனால் அடுத்த ஆண்டு வரும் சட்டமன்றத் தேர்தலிலும் அ.தி.மு.க.வுடன் ஏற்பட்டுள்ள நெருக்கம் நீடிக்கும் என்பதே என் கருத்து. காலத்தின் கட்டாயம் என்பார்களே, அப்பேர்ப்பட்ட நிலை மூப்பனாருக்கு. இந்தச் சூழலில், வரும் பொதுத் தேர்தலின் முடிவுகள் எப்படியிருக்கும்?

அ.தி.மு.க.வுடன் த.மா.கா. உறவு கொண்டு விட்டதாலேயே அந்த அணி பலம் வாய்ந்த அணியாக மாறிவிட்டது என்று சொல்ல முடியாது. இரண்டு கழகங்களுக்கும் மாற்றாக, ஒரு சுத்தமான தலைவராக மூப்பனார் வருவார் என்று எதிர்பார்த்திருந்த நடுநிலையாளர்கள் ஏமாற்றம் அடைந்து அவருக்குக் கொடுத்த ஆதரவைத் திரும்பப் பெறும் வாய்ப்பும் இருக்கிறது. எல்லாவற்றையும் விட முக்கியமாக, தேர்தல் சமயத்தில் நடக்கும் நிகழ்வுகள்தான் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்றன. இதில் தமிழகத்தைப் பொறுத்தவரை ரஜினியின் நிலைப்பாடு என்பதும் அடங்கும்.

பரிதாபப் படுகிறேன்!

வைகோ:

த.மா.காவுக்குத் தமது பாதையைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம் உண்டு. அதை மறுப்பதற்கில்லை. ஆனால் அன்றைக்கு நரசிம்மராவ், ஜெயலலிதாவுடன் கூட்டு என்று அறிவித்தபோது சத்தியமூர்த்தி பவனில் பெரிய அமளி நடந்ததே? பிரதமர் - காங்கிரஸ் தலைவர் என்ற மரியாதை துளிக்கூட இல்லாமல், நரசிம்மராவ் கட்- அவுட்டை செருப்பால் அடித்து அமளி செய்தார்கள் மூப்பனார் ஆதரவாளர்கள். இன்று அவர்களது தடாலடி மாறுதலைப் பார்க்கும் போது நகைப்பதைத் தவிர வேறு வழியில்லை!

ஊழலை எதிர்த்து உதயமான த.மா.கா., இன்று ஊழலில் சங்கமமாகி விட்டது. அ.தி.மு.க.வுடன் ஏற்பட்டுள்ள இந்த நெருக்கத்திற்குத் த.மா.கா. எந்த வலுவான காரணமும் சொல்ல முடியாது. இந்த இடைத் தேர்தலையொட்டி இப்படிப்பட்ட ஒரு முடிவை மூப்பனார் எடுத்திருக்க வேண்டியதேயில்லை. தேர்தல் தோல்வியைக் கொஞ்சம் கூடப் பொறுக்க முடியாமல் இந்த முடிவை மூப்பனார் எடுத்திருக்கிறார்.

1996ல் நாங்கள் சட்டமன்றப் பொதுத் தேர்தலில் தோல்வியுற்றோம். மனம் தளரவில்லை. தொடர்ந்து புதுக்கோட்டை இடைத்தேர்தலிலும் தனித்துத்தான் நின்றோம். ஜெவுடன் கைகோத்துக் கொள்ளவில்லை. எந்த மனச்சோர்வும் எங்களைத் தடம் புரட்டவில்லை.

1998 பாராளுமன்றத் தேர்தலில் வாஜ்பாய் என்ற நல்ல மனிதர் பிரதமர் ஆக வேண்டுமென்பதற்காகத்தான் ஜெ.வுடன் கூட்டு சேர்ந்தோம். அப்போது கூட ஜெயலலிதாவின் ஊழல்களுக்கு வக்காலத்து வாங்கவில்லை. அவர் மீதுள்ள ஊழல் வழக்குகள் வாபஸ் பெறக்கூடாது என்பதில் தெளிவாக இருந்தோம். தி.மு.க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று அவர் பிடிவாதம் பிடித்தபோது நாங்கள் தீவிரமாக எதிர்த்தோம். அரசியலில் பலவீனமான நிலை ஏற்படும்போது கொஞ்சம் இறங்கி வருவது போலச் செயல்படுவதும், பின்னர் பலம் பெற்றவுடன் உதவி செய்தவர்களை உதாசீனப்படுத்துவதும் ஜெ.வுக்குக் கைவந்த கலை. மூப்பனாரை நினைத்துப் பரிதாபப் படுவதைத் தவிர வேறுவழியில்லை.

பா.ஜ.க. - மதவாதம் என்று பேசுவதெல்லாம் சற்றும் சரியல்ல. நடப்பது பா.ஜ.க.வையும் உள்ளடக்கிய தேசிய ஜனநாயக முன்னணியின் ஆட்சிதான். இதில் மதவாதத்திற்கு இடம் கிடையாது. மூப்பனாரின் இந்த முடிவு மூலம், தமிழகத்தில் அடுத்த சட்டமன்றப் பொதுத் தேர்தலுக்கான வியூகம் தெளிவுபடுத்தப்பட்டு விட்டது. தி.மு.க. தலைமையிலான கூட்டணியே வெற்றி பெறும். 'மக்கள் விரோத ஆட்சி' என்று தி.மு.க. ஆட்சியை மூப்பனார் சொல்லியிருப்பதற்குக் காரணம், அவரது புது சகவாச தோஷம்தானே தவிர வேறொன்றுமில்லை.

தொகுப்பு: **ப்ரியன்**

படங்கள் : **அமல்ராஜ்**

கொந்தளித்த கூட்டம்!

ஜெயலலிதா எங்கு பேசுவதாக இருந்தாலும், அவர் வருவதற்கு ஒரு மணி நேரம் முன்பிருந்தே 'அ.தி.மு.க. கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் வடசென்னை அ.தி.மு.க. தொண்டர்கள் - குறிப்பாகத் தாய்க்குலங்கள், அந்தப் பேட்டையையே கலக்கிக் கொண்டிருப்பார்கள். ஆனால் அந்தக் காட்சி நெடுஞ்செழியன் அஞ்சலிக் கூட்டத்தில் மிஸ்ஸிங்!

காரணம், கர்லையில் அம்மாவுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையால் அதிர்ச்சியடைந்த ர.ர.க்கள் தனி நீதிமன்றப் பகுதியில் ரகளையில் ஈடுபட, மது, சேகர் பாபு, பாலகங்கா தலைமையிலான கும்பலைக் கொத்தாக போலீஸ் அள்ளிக் கொண்டு போய் விட்டதுதான்! கடுங்காவல் தண்டனை காரணமாக ஜெ., கதிகலங்கிப் போக, மாலை நடக்க இருந்த அஞ்சலிக் கூட்டம் நடக்குமா என்று நகர் முழுவதும் ஒரே பேச்சு. ஆனால் அவருடன் 'புதிய நண்பர்' மூப்பனாரும் பேசுவதாக இருந்த முதல் கூட்டமாதலால் வேறு வழியின்றி ஜெ கலந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

புள்ளி போட்ட பொடிக் கலர் சேலை, மற்றும் இறுக்கமான முகத்துடன் வந்திறங்கினார் ஜெ. அவர் வந்த போது பிரம்மாண்டமான காமராஜ் அரங்கம் பாதியே நிரம்பியிருந்தது. மேடையில் இரண்டு டஜன் நாற்காலிகளில் தோழமைக் கட்சித் தலைவர்கள் அமர்ந்திருந்தனர். 'சிங்கிள் மேன்' பார்ட்டியிலிருந்து பெரிய கட்சித் தலைவர்கள் வரை அம்மாவுக்கு ஆறுதல் சொல்வதில் அதிக நேரம் எடுத்துக் கொண்டு, நாவலரைப் பெயருக்கு நினைவுகூர்ந்தனர். மற்ற கட்சித் தலைவர்கள் ஜெ. பெயரைச் சொல்லும்போதெல்லாம் அரங்கில் கைதட்டல்தான். நடப்பது அஞ்சலிக் கூட்டமா, பாராட்டுக் கூட்டமா என்று சந்தேகம் வருமளவுக்கு உற்சாகம்!

"கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிகிறார் கருணாநிதி" என்றார் நல்லகண்ணு. ஆனால் இடது கம்யூனிஸ்ட் சங்கரையா ரொம்பவும் விவரமாக, ஊழல் விவகாரத்தில் ஜெவுக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையைப் பற்றி ஒன்றும் குறிப்பிடாமல் அரசியல் ரீதியாக ஆதரவு தெரிவித்துப் பேசினார். சங்கரையா பேசி விட்டு வரும்போது, "ஒரு கிழச் சிங்கம் உறுமி விட்டு வருகிறது" என்



னார் மூப்பனார்.

"திருச்சி தொகுதியில், இடைத் தேர்தலின்போது எலெக்ட்ரானிக் மிஷின்கள் பயன்படுத்த இருப்பதால் நமது அணியினர் மிக உஷாராக இருக்க வேண்டும்" என்று நல்லகண்ணு பேச, உடனே அருகிலிருந்த சங்கரையா, திண்டிவனம், ஜெகவீர பாண்டியன் ஆகியோரோடு விவாதித்தார் ஜெ. (வோட்டிங் மிஷினை எதிர்த்து ஜெ.விடமிருந்து அறிக்கை வரலாம்.)

மூப்பனாரின் ஆதரவு பற்றிய தங்களது உண்மையான எண்ண ஓட்டத்தினைப் பிரதிபலிக்கும்விதமாக, "மனப்புண்ணுக்கு மருந்தாக வந்திருக்கும் மூப்பனார் அவர்களைப் பேச அழைக்கிறேன்" என்று சொன்னார் தொகுப்பாளர் காளிமுத்து. மூப்பனார் பேசத் துவங்கும்போது அரங்கத்தில் ஒரே ஆரவாரம்.

''தலைவா காங்கிரஸில் ஜாயின் பண்ணிடு" என்றார் ஒரு தொண்டர் சப்தமாக. "ஜெ. ஆதரவுடன் தமிழக மக்களுக்கு நல்லாட்சி கொடுக்கும் பொறுப்பு நமக்கிருப்பதாக"ச் சொன்னார் மூப்பனார்.

ஜெ. பேச வரும்போது அரங்கமே ஆடிப் போகும் அளவுக்கு உற்சாகம்! 1937-ல் அண்ணாவின் பேச்சைக் கேட்டு நாவலர் அரசியலுக்கு வந்ததில் இருந்து துவங்கிப் பேசிய ஜெ., கலைஞர் அமைச்சரவையில் அவர் பணியாற்றிய காலகட்டத்தைப் பற்றிக் குறிப்பிடாமல் தாண்டிப் போனார்.

"எனக்கு சோக நாள் என்று பேசினார்கள். ஆமாம், நாவலரின் மறைவால் - நினைவால் சோகம். ஆனால் வஞ்சகரின் சூழ்ச்சியை நினைத்தால் வருகிறது வீரம், தீரம்! அங்கே சிரிப்பவர்கள் சிரிக்கட்டும்; அது ஆணவச் சிரிப்பு'' என்றார் ஜெ. கூட்டம் கொந்தளித்து அடங்கியது.

காலை நிகழ்வுகளால் கலங்கிப் போயிருந்த ஜெ., மாலையில் தோழமைக் கட்சித் தலைவர்களால் கொடுக்கப்பட்ட உற்சாக டானிக் காரணமாகக் குஷியாகப் போயிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

— ஆர்.எஸ்.

படங்கள் : அமல்ராஜ், குழலன்



• மாலையில் மகிழ்ச்சி!



• காலையில் சோகம்



பற்றி எரிந்தது பஸ் மட்டுமா?

தர்மபுரி அரசு மருத்துவ மனையிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது பாரதிபுரம். ஒரு மௌன சாட்சியாய், சாலை யோரத்தில் புளியமரம் ஒன்று கடுந்தீயில் வெந்து அப்படியே கருகிப் போய்க் காட்சி தருகிறது. கல்லூரி மாணவிகள் மூன்று பேரின் வாழ்க்கையுமல்லவா அத்துடன் சேர்ந்து கருகிப் போய்விட்டது!

கோவை வேளாண் பல்கலைக்கழக மாணவ, மாணவிகள் அவர்கள். பத்து நாள் கல்விச் சுற்றுலாவாக இரண்டு பேருந்துகளில் வந்திருந்தார்கள். கிருஷ்ணகிரி அருகே பையூர் வேளாண் ஆராய்ச்சி மையத்தில் ஆய்வை முடித்துக் கொண்டு கோவையை நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதுதான் தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அருகில் இந்த இரண்டு பேருந்துகளையும் வழிமறித்திருக்கின்றனர், சாலை மறியலில் ஈடுபட்டிருந்த அ.தி.மு.க.வினர்.

மாணவர்கள் அவர்களிடம், "நாங்கள் அனைவரும் கல்லூரி மாணவர்கள். பத்து நாள் டூர் முடித்து விட்டு இப்போதுதான் கோவைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம். எங்களை விட்டு விடுங்கள்" என்று சொல்லியிருக்கின்றனர். இரண்டு பேருந்துகளும் நில்லாமல் மெதுவாய் சென்றவண்ணமே இருந்திருக்கின்றன.

நம் பேச்சுக்கு மதிப்பில்லாமல் சென்று கொண்டிருக்கிறார்களே எனக் கோபம் கொண்டது அந்தக் கும்பல். பாரதிபுரம் - இலக்கியாம்பட்டி அருகில் வேறு வாகனங்களில் சென்று, மீண்டும் பஸ்களைத் தடுத்து நிறுத்தியிருக்கிறது அந்தக் கும்பல்.

திடீரென அந்தப் பேருந்துக்குள்ளே கல் வீச்சு விழவும் மாணவிகள் பயந்து போய் ஜன்னல், கதவுகளை சாத்திக் கொண்டு உள்ளே பதுங்கிக் கொண்டனர். அதற்குள் பேராசிரியை கீழே இறங்கி வந்து கூட்டத்தினரிடம் கெஞ்சும் குரலில் பேசிக் கொண்டிருக்கும்போதே மோட்டார் சைக்கிளில் வந்த மூன்று பேர் பேருந்துக்கு அடியிலும் டயர்கள் மீதும் மண்ணெண்ணெயை ஊற்றியிருக்கிறார்கள். நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்ட பேராசிரியை,

"அவர்கள் மாணவிகள்... எதுவும் செய்து விடாதீர்கள்; அவர்கள் கீழே இறங்கி விடட்டும்... ப்ளீஸ்... ப்ளீஸ்..." என்று கெஞ்சிக் கொண்டிருக்கும்போது திறந்திருந்த ஒன்றிரண்டு ஜன்னல் வழியாக பெட்ரோல் குண்டுகள் பறந்து வந்து விழுந்தவுடன் பற்றிக் கொண்டது தீ!

சற்று தொலைவிலிருந்த மாணவர்களும், அக்கம்பக்கத்தாரும் ஓடி வந்து, பேருந்தின் ஜன்னலை உடைத்தும், கதவு திறந்தும் முடிந்தவரை மாணவிகளைக் காப்பாற்றியிருக்கிறார்கள். முழுவதும் காப்பாற்றபட முடியாமல் பேருந்தின் உள்ளே அகப்பட்டு சிக்கித் தவித்து கருகிப் போனார்கள் நாமக்கல் கோகிலவாணி, விருத்தாசலம் காயத்ரி, சென்னை ஹேமலதா ஆகியோர்.

பேருந்து எரிந்து போன ஸ்தலத்துக்கு நேர் எதிர் வீட்டுக்காரப் பெண்மணிக்கு இன்னமும் அந்த திகில் நீங்கவில்லை.

'நெஞ்சு பதறுகிறது' என்கிறார் நம்மிடம். "எல்லாம் பச்சைக் கிளிங்க மாதிரி பொண்ணுங்க சார். பெத்தவங்களுக்கு இனிமே திரும்பவும் கெடைக்குமா?'' என்கிறார் அந்தப் பெண்மணி.


பாரதிபுரத்தில் யாரிடம் பேச்சுக் கொடுத்தாலும், "என்ன நடந்திச்சுன்னே தெரியாதுங்க. ரோடு பூரா ஒரே சத்தமா இருந்தது. ஓடியாந்து பாத்தா பஸ் தீப்பிடிச்சு எரிஞ்சிட்டிருக்கு" என்கிறார்கள் பெரும்பாலும்.

"இந்த மாதிரி வழக்குல கோர்ட் தீர்ப்பு தர்ற நாளில் இனிமே யாரும் வெளியிலேயே வராம இருக்கறது நல்லதுன்னு நெனைக்கறேன்!'' என்கிறார் இலக்கியாம்பட்டி பகுதியில் வசிக்கும் ஒருவர்!




• கோகிலவாணி

தர்மபுரியில் நம்மிடம் பேசிக் கொண்டிருந்த எந்தக் கட்சியும் சாராத ஒருவரின் கருத்து இது : ''கோர்ட்ல தீர்ப்பு வெளியான கொஞ்ச நேரத்துல சன் டி.வி.ல ஒரு தொடர் ஓடிட்டு இருந்தப்ப ஃப்ளாஷ் நியூஸா, வரிச் செய்தியா திரும்பத் திரும்ப இதையே 'ஸ்லைடு' போட்டுக் காண்பிச்சிட்டிருந்தாங்க. அந்தக் கட்சிக்காரங்களை அதிகமா உணர்ச்சிவசப்பட வெச்சதுக்கு இதுவும் ஒரு காரணமா இருக்கலாம். வழக்கமா செய்திகள் வாசிக்கிற நேரத்துல இதுவும் ஒரு செய்தியா வந்திருந்தா இந்த அளவுக்கு வன்முறைகள் நடந்திருக்காதுன்னு நெனைக்கறேன். சமூகநலன் கருதி தனியார் தொலைக்காட்சிகள் இந்த மாதிரி அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்ட செய்திகளை வெளியிடும்போது சில தார்மீக நெறிமுறைகளைக் கடைபிடிக்கறது நல்லது!''



• ஹேமலதா



• காயத்ரி

அரசு பொது மருத்துவமனையில் மாவட்ட நலப்பணி இணை இயக்குனர் டாக்டர். ஆர். ராஜரத்தினத்தைச் சந்தித்தோம்.

"சாயந்திரம் 3:15லேருந்து இலேசான தீக்காயங்களோட மாணவிகள் மூணு பேர், அஞ்சு பேர்னு ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தாங்க. மொத்தம் இருபது மாணவிகள் அட்மிட் ஆனாங்க. அதுல மூணு பேருக்கு கைகளிலேயும், முகத்துலயும் இலேசான தீக்காயங்கள் ஏற்பட்டிருந்திச்சு. மீதி பதினேழு பேரும் சம்பவத்தை நேரா பார்த்த அதிர்ச்சியாலும் புகைமூட்டத்தினால் ஏற்பட்ட பாதிப்பாலும் மயக்கமடைந்தவர்கள். எல்லா மாணவிகளுக்கும் தீவிர முதலுதவி செய்து கோவைக்கு அனுப்பி வைத்தோம்'' என்றார் அவர்.

தர்மபுரி மாவட்ட எஸ்.பி.யுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டபோது, "தர்மபுரி அ.தி.மு.க. ஒன்றியச் செயலாளர் உட்பட இருபது நபர்கள் மீது குற்றப்பதிவு செய்துள்ளோம். அதில் ஐந்து நபர்களைக் கைது செய்து விட்டோம்'' என்று கூறினார். அந்த ஒன்றியச் செயலாளரும் பிறகு நீதிமன்றத்தில் 'சரண்' அடைந்து விட்டார்.

பலியாகிப் போன மூன்று மாணவிகளில் ஒருவரான நாமக்கல் கோகிலவாணியின் இல்லத்திற்கு நாம் சென்றபோது இரவு பதினொன்று. அன்று காலையில்தான் அருமை மகளின் காரியங்களை முடித்து விட்டு வந்து வீட்டில் உறக்கமின்றித் தவித்துக் கொண்டிருந்தனர்.

''ஈவுஇரக்கமற்ற காட்டுமிராண்டித்தனமான செயல்ங்க! எனக்கு இனிமே என்னோட பொண்ணு கெடைக்குமா... சொல்லுங்க!'' என்கிறார் கோகிலவாணியின் தந்தை வீராசாமி.

''அடுத்த அப்பீலில் இந்தம்மாவுக்கு தண்டனை இல்லேன்னு தீர்ப்பாயிட்டா... இந்த மூணு பேரும் திரும்பி வந்துடுவாங்களா?'' என்று எதிர்க்கேள்வி கேட்கிறார்கள் ஒரே தங்கையை இழந்து விட்ட சோகத்துடன் இருக்கும் சகோதரர்கள் விவேகானந்தனும் இளங்கோவனும்.

மகளைப் பறிகொடுத்து விட்ட துயரம் சரசுவதியின் கண்களில் கண்ணீராய்ப் பெருகி வருகிறது.

''எல்லா பாடத்துலயும் முதல் மார்க் வாங்கிட்டு வரும் எம் பொண்ணு. சாவுலயும் மொத ஆளா போய்ச் சேர்ந்திடுச்சி!''

தர்மபுரியிலிருந்து :
ஸ்ரீரங்கம் திருநாவுக்கரசு

மாறனுக்கு உள்ளது, மற்றோருக்கு வருமா?

வட்டமேஜை

✉ 'விடுவிக்கப் பட்ட டான்ஸி ராணி!' தலையங்கம் தமிழகத்தின் பால் கல்கி கொண்டிருக்கும் நியாயமான ஆதங்கத்தைப் பறைசாற்றுவதாய் இருந்தது.
நெய்வேலி, க. சுந்தர்.

✉ நாங்கள் மறந்து விட்டிருந்த 'இந்தியக் குடியரசு பொன் விழா ஆண்டை' நினைவுபடுத்தியது மட்டுமல்லாமல், விஷயம் தெரிந்தவர்களைக் கொண்டு அதனை விமர்சித்தது, அந்த நினைவுக்கு 'மகுடம்' சூட்டியது போலிருந்தது!
நெய்வேலி - 3,
ப. உத்தண்டராமன்.

✉ அதிர்ச்சியையும், ஆனந்தத்தையும் ஒருங்கே இணைத்துக் காட்டும் முகபாவத்துடன் கூடிய ஜெ. ஸ்டில் எப்படிக் கிடைத்தது?
தூத்துக்குடி - 2,
எஸ். ராமசுப்பிரமணியன்.

✉ 'பீகாரின் முடிவில் பி.ஜே.பியின் தலையெழுத்து!' என்ற கட்டுரையின் மூலம், நடக்கவிருக்கும் நான்கு மாநிலங்களின் தேர்தல் களத்தினை மிகச் சரியாக அலசி ஆராய்ந்து அம்மாநிலங்களின் இன்றையச் சூழ்நிலை குறித்து ஒரு தெளிவான தோற்றம் கொடுத்து விட்டீர்கள்.
தோட்டக்குறிச்சி, இரா. வளையாபதி.

✉ 'கலைஞர்' விருது வழங்கும் விழாவில் 'ஜெ' பெயரைக் கூறினால் கலைஞர் கோபப்படுவாரோ என்ற பயத்தில் தமிழ்க்குடிமகன் பெயரைத் தவிர்த்திருப்பார். மாறனுக்கு உள்ள தைரியம்... துணிச்சல்... தமிழ்க்குடிமகன் போன்ற அமைச்சர்களுக்கு வருமா என்ன...?
சர்க்கார்பதி, பி. ஜெயப்பிரகாஷ்.

✉ மாலினி பார்த்தசாரதியின் பேட்டி, 'கல்கி'யின் இதழியல் திறத்திற்கும், சுறுசுறுப்புக்கும் ஒரு சான்று!' என் வாழ்த்துக்கள்.
திருநெல்வேலி, தி.க. சிவசங்கரன்.

✉ 'குளிர்பானங்கள் ஆபத்தானவையா?' என்ற தலைப்பில் எஸ்.வி.என். எழுதிய கட்டுரையைப் படித்தேன். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்று சொல்லும் போது ஒரு மணி நேரத்தில் நாலு லிட்டர் கோக் குடித்தால் நேரே பரலோக பிராப்திதான் என்று சொல்வதில் ஆச்சர்யப்பட வேண்டியதில்லையே. எதில்தான் கெடுதல் இல்லை. எதையும் அளவோடு உண்டால் வளமோடு வாழலாமே சார்.
லால்குடி, எம். இராஜேந்திரன்.


✉ பட்டிணத்து அவலங்களையும், தாங்கள் சொகுசாய் வாழ வேண்டும் எனும் எண்ணத்துடன் தங்களை வருத்திக் கொண்டு செக்கு மாடுகள் போல உழன்று வரும் சமீப காலப் போக்கையும் அழகாய்ப் படம்பிடித்துக் காட்டியது மும்தாஜ்யாசீனின் 'பாவம் இந்தப் பிள்ளைகள்' சிறுகதை.
வடபழனி, சி. மகேஷ்.

✉ வசதி வாய்ப்பு வேறு, மனிதநேயம் வேறு, என நடைமுறையில் இனம்பிரித்து வாழ்ந்து காட்டிய, எம்.ஏ. சிதம்பரம் அவர்கள் உண்மையிலேயே மாமனிதர்தான்.
கும்பகோணம், எஸ். கே. மூர்த்தி.

✉ இயந்திரகதியில் இயங்கி, மனைவி குழந்தைகளிடையே பரஸ்பர உணர்வைப் பகிர்ந்து கொள்ள இயலாத கணவனின் மனநிலையை 'ஸ்ட்ரைக்' சிறுகதை வெகு இயல்பாய் உணரச் செய்தது.
போடிநாயக்கனூர், எம். பாலசுப்ரமணியன்.



மனசுக்குள்ளே காதலடி!



பெரியார் எப்போது பார்த்தாலும் படித்துக் கொண்டே இருப்பார் என்று சொன்னேன். ஆனால் என் அப்பாவோ, "படிக்காதே!" என்பார். அவர் படிக்காதே என்று சொன்னது வைணவப் புத்தகங்களை. சைவப் புத்தகங்களைத் தவிர வேறு எதையும் படிக்கக் கூடாது. அது மட்டுமல்ல; வைணவப் பையன்களோடு நான் சேர்ந்து விளையாடுவதைப் பார்த்தால் கூட அடிப்பார். அந்த அளவுக்கு அவர் தீவிர சைவர்!

என் தந்தை பெயர் வீராசாமி. தாயார் பெயர் சாரதாம்பாள். எனக்கு ஒரு தங்கை. ஒரு தம்பி. தந்தை ரயில்வேயில் ஒரு சாதாரண தொழிலாளி. நான் பிறந்து வளர்ந்ததெல்லாம் அகரம் – பெரம்பூர்ப் பகுதியிலுள்ள பெரமல்லூர் என்கிற பகுதிதான்.

எனக்கு நான்கு வயதாகும் போது திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கொண்டு போய்ச் சேர்த்தார் என் தந்தை. அதற்கு நாமக்காரர் பள்ளிக்கூடம் என்று பெயர். எங்கள் பகுதியில் இருந்த ஒரேயொரு சைவ ஆசிரியரும் இறந்து போயிருந்ததால் வேறு

நான் நாத்திகனில்லை

பேராசிரியர் பெரியார்தாசன்

5

வழியின்றி என்னை அந்த நாமக்காரர் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தாரே தவிர, முழு விருப்பத்தோடு சேர்க்கவில்லை.

ஓய்வு நேரங்களில் சிவன் கோயில்களுக்குச் சென்று தொண்டு செய்வார். வைணவக் கோயில்களைப் போல் சிவன் கோயில்கள் பராமரிக்கப்படுவதில்லையே என்கிற ஏக்கம் என் தந்தைக்கு. இது பற்றிய கவலையில் தனியாக இருக்கும்போது அவர் அழவும் செய்வார்!



சுமார் ஓராண்டு காலம் திண்ணைப் பள்ளியில் படித்த பிறகு, ஆரம்பப் பள்ளியில் முதல் வகுப்பு சேரப் போனேன். எனக்குத் தேர்வு வைத்துப் பார்த்த ஆசிரியர்கள் என்னை நேரடியாக மூன்றாம் வகுப்பில் சேர்த்துக் கொண்டார்கள்.

பிறகு, ஆர்.பி.சி.சி. உயர்நிலைப் பள்ளியில் நான் எட்டாம் வகுப்பு படிக்கும் போது, நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த என் தாயார் இறந்து போய் விட்டார். என் தாயின் மருத்துவச் செலவுக்காக, அலுவலகத்தில் என்னென்ன கடன்கள் உண்டோ அத்தனையையும் என் தந்தை வாங்கியிருந்தார். கடன் மட்டுமல்ல; கடன் போல் தெரிந்தால் கூட அதையும் அவர் வாங்கியிருந்த சூழ்நிலை.

இந்த நிலையில், கடன்களுக்கான பிடித்தமெல்லாம் போக, என் தந்தையின் கைக்கு என்ன சம்பளம் வந்து விட முடியும்? அதனால் பெரும்பாலும் வெறும் சாதத்தை மட்டும் வடித்து வைத்து விட்டு வேலைக்குச் சென்று விடுவார் என் தந்தை. நாங்கள் அந்த சாதத்தில் தண்ணீர் விட்டு, மிளகாயைக் கடித்துக் கொண்டு சாப்பிட வேண்டியதுதான்!

இப்படி வீட்டில் சாப்பிடலாம். பள்ளிக்கூடத்துக்கு எடுத்துச் சென்று சாப்பிட முடியுமா? அதனால் நான் மத்தியானச் சாப்பாட்டிற்கு எதுவுமே எடுத்துச் செல்ல மாட்டேன். பட்டினிதான். ஆனாலும் பசிக்கும். பசியை மறப்பதற்காக ஏதாவது பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் இருப்பேன்.

ஒருநாள் இப்படித்தான்,

"பொன்னருவி மேனியிலே
முத்தமிட்டுப் பார்க்கையிலே
பொசபொசன்னு ஊறுதடி
மனசுக்குள்ளே காதலடி!"

– என்று பாடி ஆடிக் கொண்டிருந்ததை எனக்குக் கணக்குச் சொல்லித் தருகிற ஜனார்த்தனம் வாத்தியார் கேட்டு விட்டார். "இந்த வயசுல உனக்குப் பொசபொசன்னு ஊறுதாடா?" என்று அடிக்க ஆரம்பித்தார்.

"நானே பசியை மறக்கறதுக்காக இப்படிப் பாடிக்கிட்டிருக்கேன். என்னைப் போய் அடிக்கிறீங்களே?" என்றேன்.

என் நிலையை விசாரித்த அவர், அதன் பிறகு தினசரி எனக்கும் சேர்த்து அவரே மதியச் சாப்பாடு கொண்டு வந்து கொடுக்க ஆரம்பித்தார். அவர் சாப்பாடு கொண்டு வந்து தருகிறாரே என்பதற்காக, அதுவரை கணக்குப் பாடத்தில் குறைந்த மார்க்குகளே வாங்கிக் கொண்டிருந்த நான், மிகுந்த ஆர்வம் எடுத்துப் படித்து நிறைய மார்க்குகள் வாங்க ஆரம்பித்தேன்.

எட்டாம் வகுப்பு வரை எனக்குக் கணக்கும் ஆங்கிலமும் வரவே வராது. காரணம், அந்த இரண்டு பாடத்தையும் சொல்லிக் கொடுத்தது வைத்தியநாதய்ய வாத்தியார். அவர் எதற்கெடுத்தாலும் அடிப்பார். "அமாவாசையன்னிக்கு சந்திரன் வந்தாலும் வருவான். உன் நாக்குல எதுவும் வராதுடா!"

என்று சொல்லிக் கொண்டே அடிப்பார். அதனாலேயே அவரை எனக்குப் பிடிக்காது. அவர் சொல்லிக் கொடுத்த கணக்கும் ஆங்கிலமும் கூட பிடிக்காமல் போனது.

இப்போது அப்படியில்லை!

ஜனார்த்தன வாத்தியாரின் அன்பும் பரிவும் என்னைப் படிக்கத் தூண்டி விட்டது. எனக்கு ஆங்கிலப் பாடம் சொல்லிக் கொடுத்தவர் ராஜகோபால் வாத்தியார். அவர் ரொம்பவும் ஸ்டைலாக ஆங்கிலம் பேசுவார். நல்ல பர்சனாலிடியாக அழகாகவும் இருப்பார். அதனாலேயே அவரைப் பிடித்தது. அவர் சொல்லிக் கொடுத்த ஆங்கிலப் பாடமும் மனத்தில் எளிதாகப் பதிந்தது!

அது சரி, "பொன்னருவி மேனியிலே..." என்கிற பாட்டை அந்த வயதில் எங்கிருந்து பிடித்தேன் என்கிறீர்களா? அதுவொரு கூத்து. ஆம். கூத்தேதான்!

என் தாயார் இறந்த சமயத்தில் ஒருநாள் ஏதோவொரு தவறு செய்து விட்டேனென்று என் தந்தை என்னைப் போட்டு அடி அடி என்று அடித்துத் துவைத்து விட்டார். 'சரி இனியும் இந்த ஆளோடு இருக்க முடியாது' என்று கருதி என் பாட்டுக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

நடந்தேன். நடந்தேன். நடந்து போய்க் கொண்டே இருந்தேன். இறுதியாக செய்யாறு வந்து சேர்ந்தேன். அங்கே ஏதாவது வேலை செய்யலாமென்று தேடினேன். பதினொரு வயதுப் பையனான எனக்கு என்ன வேலை கிடைக்கும்? இறுதியாக தெருக்கூத்து ஆடுபவர்களிடம் போய்ச் சேர்ந்தேன்.

எனக்கு தேவாரம், திருவாசகமெல்லாம் பாடிப் பழக்கமிருந்ததால், அந்தத் தெருக்கூத்து ஆசிரியரிடம் மாடுலேஷன்களோடு பாடிக் காட்டினேன். அவருக்கு என்னைப் பிடித்துப் போய் விட்டது. நான் சிறுவன் என்பதால் வேஷங்கட்டி ஆட முடியாது. என்றாலும் கூத்தில் பாடுகிற பாட்டுக்களை எப்படி மாடுலேஷன்களோடு பாடுவது என்பதைப் பிறருக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன்.

இப்படிச் சுமார் ஓராண்டு காலம் அவர்களோடு ஊர் சுற்றிக் கொண்டிருந்தபோதுதான், நான் அவர்களோடு இருப்பதை என் தந்தை எப்படியோ தெரிந்து கொண்டு, என்னை அழைத்துப் போக வந்தார். வந்தவர், "நாயே! நீ இங்கியாடா இருக்கே?" என்று போனஸ் அடிகளும் கொடுத்து, மறுபடியும் என்னை வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அந்தத் தெருக்கூத்துக் கலைஞர்களோடு இருந்த போது நான் கற்றுக் கொண்ட பாடல்தான், "பொன்னருவி மேனியிலே..." பாடல்!

பள்ளியிறுதித் தேர்வில் எங்கள் பள்ளியிலேயே நான் முதல் மாணவனாகத் தேர்வு பெற்று, பச்சையப்பன் கல்லூரியில் புகுமுக வகுப்பு, பி.ஏ. பொருளாதாரம் படித்து, தத்துவத்தில் எம்.ஏ. பட்டமும் பெற்று, எனது இருபத்திரண்டாவது வயதில் அங்கேயே ஆங்கில டியூட்டராகவும் வேலையில் சேர்ந்தேன்.

அப்போது பள்ளிக்கூட ஆசிரியர்களுக்காக அரசு ஓர் ஆணை பிறப்பித்தது. அதில், ஆங்கிலத்தை சிறப்புப் பாடமாக எடுத்துப் படிக்காமல், வேறு பாடங்களில் பட்டம் பெற்று, பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்கள், ஒரு பயிற்சி எடுத்துக் கொண்ட பிறகுதான் ஆங்கிலப் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று அரசு குறிப்பிட்டிருந்தது.

அதன்படி பயிற்சி எடுத்துக் கொள்வதற்காக, பள்ளியில் முன்பு எனக்குக் கணக்கும் ஆங்கிலமும் சொல்லிக் கொடுத்த வைத்திய ராமய்ய வாத்தியார் எங்கள் கல்லூரிக்கு வந்தார். அதுவும் எனது வகுப்புக்கே பயிற்சியெடுத்துக் கொள்ள வந்தார். அவர் என்னை அடையாளம் கண்டுகொள்ளாமல் போனாலும் நான் அவரை அடையாளம் கண்டுகொண்டேன். மொழிபெயர்ப்புப் பயிற்சி வகுப்பின் போது, "அமாவாசை இருளில் சந்திரன் வந்தாலும் வருவான்; உன் நாக்கில் எதுவுமே வராது!" என்கிற வாக்கியத்தை எழுதி மொழிபெயர்க்கச் சொல்லலாமா என்கிற எண்ணம் என் மனத்தில் எழுந்தது.

ஆனாலும் நான் அப்படிச் செய்து, அவரைப் பழிவாங்கவில்லை. என்னை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டால், எங்கே அவருக்குப் பழைய நினைவுகள் வந்து சங்கடப்படுவாரோ என்று நினைத்து, என்னை அவருக்கு அறிமுகம் செய்து கொள்ளவில்லை.

காரணம், பெரியாரும் அவரது கருத்துக்களும்தான்! எப்படி என்கிறீர்களா?

(தொடரும்)

> உனது குறைகளைச் சுட்டிக் காட்டுபவர்களை வரவேற்கக் கற்றுக் கொள். எந்த அளவு இதைச் செய்கிறாயோ, அந்த அளவு வேகமாக முன்னேறுவாய்.
>
> – ஸ்ரீ அரவிந்தர்
>
> தகவல்: பா. குணா

அகல்யாவுக்கு அந்தக் குழந்தையைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

பஸ் கிளம்பியபோது கூட்டம் அவ்வளவாக இல்லை. பத்து மணிக்கு இவ்வளவுதான் கூட்டம் இருக்குமோ? இதுவரை பத்து மணிக்கு பஸ் பிடித்துப் போனதாக ஞாபகம் இல்லை. காலையில் வீட்டை விட்டுக் கிளம்பும் போது கூட அந்தக் குழந்தையைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நினைக்கவில்லை.

வீட்டிலிருந்து கிளம்பிய போதே பத்து நிமிடம் தாமதமாகிவிட்டது. கம்பெனியில் ஐந்து நிமிடம் லேட்டானாலும் வெளியே அனுப்பி விடுவார்கள். மாதத்தில் மூன்று நாட்கள் மட்டும் இந்த ஐந்து நிமிடத் தாமதத்தை அனுமதிக்கிறார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு வேலை அதிகமாக இருந்தால் உள்ளே அனுப்பிவிடுவார்கள். ஆனால், அரைநாள் சம்பளம் பிடித்து விடுவார்கள். இரண்டு பஸ்கள் பிடித்து அவசர அவசரமாகப் போய் நிற்கும்போது ஐந்து நிமிடம் தாமதமாகி விட்டாலும், இரண்டு பஸ் மாறிவந்த எரிச்சல் அன்று முழுவதும் இருக்கும். தாமதமான ஐந்து நிமிடம் தவிர அன்று முழுவதும் வேலை செய்தாலும் அரைநாள் சம்பளமே வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. அதைவிட மதியத்திற்கு மேல் வேலைக்குப் போகலாம், ஷிப்மெண்ட் இருந்தால்.

இன்றைக்கு ஷிப்மெண்ட் எதுவும் கிடையாது. மதியத்திற்கு மேல் போகவும் முடியாது. இரண்டு பஸ் பிடித்துப் போயிருந்தாலும், உயரமான சாம்பல் நிறக் கதவைப் பார்த்துவிட்டுத் திரும்பியிருக்க வேண்டும். அந்தக் கதவில்

முத்துராமன்



தலை மட்டும் தெரியும் சின்ன ஜன்னலில் கூர்க்கா எட்டிப் பார்த்து 'போயிட்டு வா' என்றே சொல்லியிருப்பான். கதவில் மாட்டியிருக்கும், "தேவை ஆண், பெண் டெய்லர்கள், ஹெல்பர்கள்" என்ற போர்டைப் பார்த்துவிட்டுத் திரும்பியிருக்க வேண்டும். அதற்கு மேல் வீட்டிற்குப் போகவும் முடியாது. கேட்கப்படும் சில கேள்விகளுக்கு பதில் சொல்வது என்பதும் இயலாத காரியம்.

அவளை யாரும் கேள்வி கேட்கப் போவதில்லை, அப்பாவைத் தவிர. அப்படி ஏதாவது கேட்பதானால் இரண்டு நாட்களாகப் பேசாமல் இருப்பதும் ஒரு முடிவுக்கு வந்துவிடும். தேவையில்லாமல் கோபப்பட்டு எதையாவது பேசிவிட்டு அடுத்த இரண்டு நாட்களுக்குப் பேசாமல் இருப்பது அவருக்கு வழக்கமாகிவிட்டது. இன்று காலையில் எழுப்பாமல் விட்டதும் கோபத்தினால்தான். இப்படி ஒவ்வொரு முறை கோபப்படும்போதும் அவருடைய இயலாமையை நினைத்திருக்க வேண்டும்.

ஆஸ்பத்திரிக்குப் போய் அந்தக் குழந்தையைப் பார்த்துவிட்டு வரலாம் என்று அந்த பஸ்ஸில் ஏறினாள். உட்காருவதற்கு இடம் இருந்தது. புத்தக மூட்டைகளையோ 'டிபன் பாக்ஸ்' திணித்த பைகளையோ வாங்கி வைத்துக் கொள்ளும்படியான கூட்டம் இல்லாத, நசுங்கல் இல்லாத பயணம். தினமும் இது போன்ற கூட்டம் இல்லாத பேருந்தையோ, நசுங்கல் இல்லாத பயணத்தையோ எதிர்பார்க்க முடியாது.

கொதிக்கும் போதே, ஊற்றி எடுத்து வந்திருந்த குழம்பு எவர்சில்வர் டப்பாவைச் சூடாக்கியிருந்ததை உள்ளங்கையில் உணர்ந்ததில் காலையில் சாப்பிடாமல் வந்துவிட்டது நினைவுக்கு வந்தது. இப்படிச் சாப்பிடாமல் ஓடி ஓடி வந்தும் பஸ்ஸைப் பிடிக்க முடியவில்லை. தேவையில்லாமல் ஒரு நாள் லீவு. நாளைக்குப் போனால் ஒவ்வொரு மிஷினாகப் போய் கத்திரியையும், மோட்டா ஊசியையும் தேடிக் கொண்டிருக்க வேண்டும். ஒவ்வொன்றையும் யாராவது தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள். சில சமயங்களில் ஆட்களையே மாற்றி விடுவார்கள். அடுத்த நாள் போய் எல்லோர் தலையையும் உருட்ட வேண்டியிருக்கும். நினைக்கும்போதே சுருண்டு படுத்து விடலாம் போன்ற அலுப்பு.

காலையிலிருந்து சோம்பலாகவே இருக்கிறது. இரத்தம் கொடுத்துவிட்டு வந்த அன்று இவ்வளவு சோம்பலாக இல்லை. ஒருவேளை நேற்று ரெஸ்ட் எடுத்துக் கொண்டதும் அதற்காகத் தானோ! எவ்வளவோ வேலைகள் முடித்திருக்கலாம். யாராவது வந்து எழுப்பும்போதுதான் தூங்கியிருக்கிறோம் என்று தெரிகிறது.

இரத்தம் கொடுத்துவிட்டு வந்த பிறகு அந்த குழந்தையைப் போய்ப் பார்க்கவில்லை. நேற்றே போயிருக்கலாம். ஒவ்வொரு ஞாயிறும் எப்படியோ பொழுது போய் விடுகிறது.

வீட்டில் பொழுது போக்குவதற்கென்று ஒன்றும் இல்லை. ஏதாவது வேலைகள் ஒன்று மாற்றி ஒன்று வந்து விடுகிறது. துணிக்கு சோப்புப் போடும்போது வரும் தண்ணீர் லாரி, தொடர்ச்சியாக இரண்டு குடம் எடுக்க முடியாமல் ஸ்டவ்வில் வைத்த பால் குக்கர், காப்பி குடிக்க விடாமல் வரும் காய்கறி வண்டி, காய்ந்த துணிகளை மடிக்கும்போது தெரியும் சோளியின் கம்புக்கூடு கிழிசல், தைக்க உட்காரும் போது ஏற்படும் இடுப்பு வலி.

இடுப்பு வலிப்பதைப் போல உணர்ந்ததில் நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டாள். இரத்தம் கொடுத்துவிட்டு வந்த அன்று இடுப்பு வலி ஒன்றும் இல்லை. கம்பெனியில்தான் இரத்தம் கொடுப்பது பற்றிப் பேசிக் கொண்டார்கள். "இடுப்பெல்லாம் வுட்டுப் போறா மாதிரியிருக்கும்" என்று சுந்தரி அக்காதான் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அந்த அக்காவின் வீட்டுக்கார

ரம்

மரியா ஜூலிபேரி. லக்னோவைச் சேர்ந்த இளம் பெண். உ.பி. மாநிலம் ரே பரேலியில் உள்ள பைலட் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி முடித்து, பைலட் ஆவதற்கு லைசென்ஸ் பெற்றிருக்கிறார். "என்னுடன் படித்த சில சக மாணவிகள், உண்ணாவிரதம் இருந்து, போராடி பைலட் பயிற்சியில் சேர வீட்டில் அனுமதி பெற வேண்டியிருந்தது. அந்த விஷயத்தில் நான் அதிருஷ்ட சாலி! என் பெற்றோர், ஆர்வத்துக்குத் தடை போடவில்லை" என்கிறார்.



"லக்னோ பிளையிங் கிளப்பில் சேர்ந்து பயிற்சி பெற்று, பிரைவேட் பைலட் லைசென்ஸ் பெற்ற பின்தான், பைலட் பயிற்சிப் பள்ளியில் சேர முடியும். பதினெட்டு மாத பயிற்சிக்குப் பின்தான் கமர்ஷியல் பைலட் லைசென்ஸ் கொடுப்பார்கள். அதன்பின் தான் பயணிகள் விமானம் ஓட்டலாம்."

'இன்று கமர்ஷியல் பைலட் லைசென்ஸ் வைத்திருக்கும் பலர், நல்ல வேலை கிடைக்காமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முக்கியக் காரணம், விமானப் படையில் பணியாற்றியவர்களுக்கு விமானக் கம்பெனிகள் முன்னுரிமை தருவதுதான். நான் பொறுமையுடன் என் வாய்ப்புக்காகக் காத்திருக்க முடிவு செய்து விட்டேன்' என்கிறார் மரியா ஜூலிபேரி.

— சி.எம்.

ருக்கு ஏதோ ஆபரேஷன் செய்தபோது கொடுத்ததாகச் சொல்லியிருந்தார்கள்.

அப்படி ஒன்றும் இடுப்பு வலி ஏற்படவில்லை. அன்று காலையில் கொஞ்சம் வேக வேகமாக அலைந்ததில் கால்வலிதான் அதிகமிருந்தது. இரத்தம் கொடுத்துவிட்டு வந்த பிறகு கொஞ்ச நேரம் அங்கிருந்த நீள பெஞ்சில் உட்கார்ந்து இருந்ததில் கால்வலி கூடத் தெரியவில்லை.

ஆனால், இன்றைக்கு அவ்வளவு அலைய வேண்டியிருக்காது. குழந்தையின் பெயரைச் சொல்லி இதய ஆபரேஷன் என்று சொன்னால் போதும். அந்தக் குழந்தையின் பெயர் ஞாபகத்தில் இல்லையே. என்ன சொல்லிக் கேட்பது?

எப்படி மறந்து போகும். மறக்க வேண்டும் என்று நினைத்த விஷயங்கள் இன்னும் சில சமயங்களில் நினைவில் கருப்பு, வெள்ளையாய் வந்து போகின்றதே.

பழைய வார்டிலேயே போய்க் கேட்டால் சொல்வார்களா? எப்படியாவது பார்த்து விட வேண்டும். யாரிடம் கேட்டால் சரியாகச் சொல்வார்கள்? "இரத்தம் கொடுத்தவனுக்கு எதுக்கு சொல்லணும்" என்று யாராவது நினைத்து விடுவார்களோ? பிரகாஷைக் கேட்டுத் தெரிந்து கொண்டிருக்கலாம். இப்போது அவனும் உடனிருந்தால் நன்றாக இருந்திருக்கும். அவன் இருந்தால் தேடி அலைய வேண்டியதும் இருக்காது. அந்தக் குழந்தையின் பெயர் அவனுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும்.

மலைபோல் குவிக்கப்பட்டிருந்த துணிப் பொதிகளுக்கிடையில் இருந்தபோதுதான் இரத்தம் கொடுக்க வேண்டிய விஷயத்தைச் சொன்னான். அப்போது இரண்டுமுறை அந்தப் பெயரைச் சொல்லிப் பார்த்துக் கொண்டேனே. 'பா' என்று ஆரம்பிக்கும் பெயர். பாரதி இல்லை. பார்கவி? பெயரில் என்ன இருக்கிறது. "பா" for பாப்பா, குழந்தை. அதுவும் பெண் குழந்தை, ஒன்றரை வயது. இதய ஆபரேஷன். சொல்ல மாட்டார்களா என்ன!

"வலதுபுறமா வளைஞ்சு போகணும்" என்று சொன்னவள் கழுத்தில் துப்பட்டாவுக்கு பதில் "ஸ்டெதஸ்" மாட்டிக் கொண்டிருந்தாள். சின்னப் பெண்ணாகத்தான் இருந்தாள். என்ன நினைத்தாளோ? ஒரு "தாங்க்ஸ்" கூட சொல்லவில்லை. வார்டு நம்பரைச் சொன்னவுடன் பதில் சொல்லி முடிக்கும்போதே நடக்க ஆரம்பித்து விட்டாள். ஏதோ தன்னுடைய கடமையைச் செய்வது போல.

சத்தமாக ஒருமுறை நன்றி சொல்லியிருக்க வேண்டும். ஆஸ்பத்திரிக்கு வந்தாலே பேச முடிவதில்லை. நோயாளியாகப் போனாலும், ஏதாவது சொல்ல மறந்து விட்டு அல்லது கேட்க மறந்து போய் இரண்டாம் முறையாக டாக்டரைப் பார்த்து... ஆஸ்பிடலில் மட்டுமில்லை. வெளியிடங்களுக்கு வந்தாலே பேச்சும் குறைந்து போய் விடுகிறது. காலையில் வீட்டைவிட்டுக் கிளம்பும்போது தம்பியிடம் போட்ட சண்டைக்கும், பஸ்ஸில் "பேபி ஆஸ்பிடல் அடுத்தது தானே?" என்று பக்கத்தில் இருந்த பெண்ணி

டம் கேட்டதற்கும் நிறைய வித்யாசம் இருந்தது.

பக்கத்து சீட்டில் இருந்த பெண் "பார்டன்" என்று சொல்லிவிட்டு, இரண்டாம் முறையாகக் கூர்மையாக கவனித்து "யெஸ் கமிங் ஸ்டாப்" என்று இங்கிலீஷில்தான் பதில் சொன்னாள். சென்ற முறை பிரகாஷ் அழைத்து வந்ததால் இறங்குமிடத்தையோ, நுழைவாயில்களையோ, வார்டுகளையோ கவனித்துக் கொண்டதாக ஞாபகம் இல்லை. நீள நீளமான வராண்டாக்களில் எப்படியெல்லாமோ அழைத்துச் சென்றான். கண்களில் படுகின்ற ஒவ்வொரு வார்டும், வராண்டாவும் பழக்கப்பட்ட இடமாகவே தோன்றுகின்றன. சில திருப்பங்களின் போது நின்று "அன்னைக்கு இப்படித்தான் போனமோ?" என யோசிக்க வேண்டியிருந்தது. யாரையாவது கேட்டுத்தான் போக வேண்டும் என்ற நிலையும், காலியான அந்த வராண்டாவும் ஒரே மாதிரியாகத் தோன்றின.

அவள் சொல்லிவிட்டுப் போன வலது புற வளைவு, படிகளில்லாமல் நீண்ட சரிவாக அமைந்திருந்தது. சுவர்களின் மூலைகளில் சில சிவப்புக் கறைகள். ஸ்ட்ரெச்சரையோ, வீல் சேரையோ தள்ளிக் கொண்டு வரும் சத்தம் தெளிவாகக் கேட்டது.

அவளுக்கு பேசாமல் வீட்டுக்கே போய் விடலாம் போலிருந்தது. எவ்வளவு நேரம் தான் ஒவ்வொரு இடமாக அலைந்து கொண்டிருக்க முடியும். எதற்காக இப்படி அலைந்து கொண்டிருக்க வேண்டும். முதன் முறையாக இரத்தம் கொடுத்ததால் இப்படி ஒரு உணர்வா? இரத்தம் கொடுக்கப்பட்டது ஒரு குழந்தைக்காக என்பதாலா?

இரத்தம் கொடுத்த ஒவ்வொருவரும் இப்படியா அலைந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கெல்லாம் பார்க்க வேண்டும் என்றே தோன்றாதா? பார்த்து என்ன செய்ய முடியும். ஏழையாக இருந்தால் "ஒரு அம்பது ரூபா கிடைக்குமா" என்று எதிர்பார்ப்பார்கள்.

சரிவில் ஒரு ஸ்ட்ரெச்சரை வேகமாகத் தள்ளிக் கொண்டு வந்ததால் ஓரமாக ஒதுங்கி நின்றாள். ஸ்ட்ரெச்சரின் பின்னால் கொஞ்சம், தூரத்தில் ஓடி வந்தவன் முகம் இறுகிப் போயிருந்தது. பின்னால் திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடி வந்தான். ஸ்ட்ரெச்சரில் இருந்த உடல் வெள்ளைத் துணியால் போர்த்தப்பட்டிருந்தது. ஓரமாக ஒதுங்கி நின்றவளுக்குக் கஷ்டமாக இருந்தது. கலவையான உணர்ச்சிகளில் கட்டுண்டு சில விநாடிகள் அங்கேயே நின்றிருந்தாள். பிறகு நீண்டிருந்த சரிவில் இறங்கி, திரும்பி நடக்க ஆரம்பித்தாள். ●

மாதம் ஒரு நகரம்

ஸலாம், சேலம்வாசிகளே!



சேலத்துக்கு வருகிறோம்! சும்மா மாம்பழம் சாப்பிட அல்ல! மாநகராட்சியின் செயல்பாடுகளை அலசி ஆராயவும் மற்றுமுள்ள சாதனைகளையும் சோதனைகளையும் கவனிக்கவும்தான்!

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், உடனே எங்களுக்குக் கடிதம் எழுத வேண்டியதுதான். சேலம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளின் பிரச்னைகள், அதிகாரிகள் அல்லது தனியாரின் சாதனைகள், பிற வியப்பூட்டும் விஷயங்கள் — வளர்ப்பானேன்? — 'இந்தச் செய்தி அவசியம் வெளி வர வேண்டும்' என்று நீங்கள் கருதுவதையெல்லாம் உடனே எழுதியனுப்புங்கள்.

உங்கள் கடிதங்களின் அடிப்படையில் செய்தி சேகரிக்க எமது நிருபர்கள், பிப்ரவரி **17,18, 19** தேதிகளில் சேலத்துக்கு வருவார்கள்.

ஆகவே கடிதங்கள் வந்து சேரக் கடைசித் தேதி **16.2.2000**



இருபத்து ஒன்றாம் அத்தியாயம்

பல்லக்கு ஏறும் பாக்கியம்

அந்த ஆண்டில் வழக்கமாக மாரிக் காலம் ஆரம்பிக்க வேண்டிய காலத்தில் ஆரம்பிக்கவில்லை.

இரண்டு தடவை மழை தொடங்குவது போல் தொடங்கிச் சட்டென்று நின்று விட்டது.

காவேரி ஆற்றிலும் அதன் கிளை நதிகளிலும் தண்ணீர்ப் பிரவாகம் வர வரக் குறைந்து வந்தது.

புது நடவு நட்ட வயல்களுக்குத் தண்ணீர் வரத்து இல்லாமல் பயிர்கள் வாடத் தொடங்கின.

"எல்லாம் வால் நட்சத்திரத்தினால் வந்த விபத்து!'' என்று மக்கள் பேசிக் கொள்ளலானார்கள்.

"நாட்டுக்கு எல்லா விதத்திலும் பீடை வரும் போலத் தோன்றுகிறது! இராஜ்யக் காரியங்களில் குழப்பம்; இளவரசரைப் பற்றித் தகவல் இல்லை; அதற்கு மேல் வானமும் ஏமாற்றி விடும் போலிருக்கிறது'' என்பவை போன்ற பேச்சுக்களை வழி நெடுகிலும் சேந்தன் அமுதனும் பூங்குழலியும் கேட்டுக் கொண்டே வந்தார்கள்.

மழை பெய்யாமலிருந்தது அவர்களுடைய பிரயாணத்துக்கு என்னவோ சௌகரியமாகத்தானிருந்தது.

அன்று காலையிலிருந்து வெயில் சுளீர் என்று அடித்தது. பிற்பகலில் தாங்க முடியாத புழுக்கமாயிருந்தது. இராஜபாட்டையில் மரங்களின்

அமரர் கல்கி

குளிர்ந்த நிழலில் சென்றபோதே அவர்களுக்கு வியர்த்துக் கொட்டியது.

"இது ஐப்பசி மாதமாகவே தோன்ற வில்லையே? வைகாசிக் கோடை மாதிரியல்லவா இருக்கிறது?" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு போனார்கள்.

பழுவேட்டரையரின் அரண்மனைப் பல்லக்கு அவர்களைத் தாண்டிச் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு திடீரென்று குளிர்ந்த காற்று வீசத் தொடங்கியது.

சாலை மரங்களின் இலைகள் காற்றில் அசைந்தாடிச் சலசலவென்று சத்தத்தை உண்டாக்கின.

வடகிழக்குத் திக்கில் இருண்டு வருவது போலத் தோன்றியது.

வானத்தின் அடிமுகட்டில் இருண்ட மேகத் திரள்கள் தலை காட்டின.

சிறிது நேரத்துக்குள்ளே அந்த மேகக் கூட்டங்கள் யானை மந்தை மதங்கொண்டு ஓடி வருவது போல் வானத்தில் மோதி அடித்துக்கொண்டு மேலே மேலே வரலாயின.

இளங்காற்று பெருங் காற்றாக மாறியது. பெருங் காற்றில் சிறிய மழைத் துளிகள் சீறிக்கொண்டு வந்து விழுந்தன.

சிறு தூறல் விழத் தொடங்கிக் கால் நாழிகை நேரத்தில் 'சோ' என்ற இரைச்சலுடன் பெருமழை கொட்டலாயிற்று.

காற்றிலும் மழையிலும் சாலை ஓரத்து விருட்சங்கள் பட்ட பாட்டைச் சொல்லி முடியாது. சடசடவென்று மரக்கிளைகள் முறிந்து விழத் தொடங்கின. அப்போது அவற்றில் அடைக்கலம் புகுந்திருந்த பட்சிகள் கீச்சிட்டுக்கொண்டு நாலா திசைகளிலும் பறந்தோடின.

சாலையில் போய்க்கொண்டிருந்த ஜனங்களும் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

காற்று மழையிலிருந்து தப்புவதற்காகச் சிலர் ஓடினார்கள். மரக்கிளைகள் தலையில் விழுந்து சாக நேரிடுமோ என்ற பயத்தினால் மற்றவர்கள் ஓடினார்கள்.

அண்ட கடாகங்கள் வெடிப்பது போன்ற இடி முழக்கத்தைக் கேட்டு அஞ்சி வேறு சிலர் ஓடினார்கள்.

மழை பிடித்துக்கொண்ட சிறிது நேரத்துக்கெல்லாம் பகற் பொழுது சென்று இரவு நெருங்கி வந்தது.

அன்றிரவே தஞ்சாவூர்க் கோட்டைக்குள் பிரவேசித்து விட வேண்டும் என்ற எண்ணத்தைச் சேந்தன் அமுதனும் பூங்குழலியும் கைவிட்டு விட்டார்கள்.

சேந்தன் அமுதனின் நந்தவனக் குடிலுக்கு அன்றிரவு போய்ச் சேர்ந்தால் போதும் என்று தீர்மானித்தார்கள்.

மழைக் கால இருட்டில் ஒருவரையொருவர் தைரியப்படுத்திக் கொண்டு ஜாக்கிரதையாக நடந்தார்கள்.

"பூங்குழலி! நடுக்கடலில் எவ்வளவோ புயல்களையும் பெரு மழையையும் பார்த்தவளாயிற்றே நீ! மலை போன்ற அலைகளுக்கு மத்தியல் படகு விட்டுக்கொண்டு போகிறவள் ஆயிற்றே! இந்த மழைக்கு இவ்வளவு பயப்படுகிறாயே?" என்றான் சேந்தன் அமுதன்.

"நடுக்கடலில் எவ்வளவுதான் புயல் அடித்தாலும் மழை பெய்தாலும் தலையில் மரம் ஒடிந்து விழாதல்லவா? விழுந்தால் இடிதானே விழும்?" – என்றாள் பூங்குழலி.

இவ்விதம் பூங்குழலி கூறி வாய் மூடுவதற்குள் அவர்களுக்கு எதிரே சற்றுத் தூரத்தில் சடசடவென்று மரம் முறிந்து விழும் சத்தம் கேட்டது.

சேந்தன் அமுதன் பூங்குழலியின் கையைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு மேலே செல்வதை நிறுத்தினான்.

"இனி அவசரப்பட்டுக்கொண்டு போவதில் உபயோகமில்லை. சாலை ஓரத்தில் இங்கே சில மண்டபங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றில் சிறிது நேரம் தங்கி மழையின் வேகம் குறைந்த பிறகு மேலே போகலாம்!" என்றான் சேந்தன் அமுதன்.

"அப்படியே செய்யலாம். ஆனால் மண்டபத்தை இந்த இருளில் எப்படிக் கண்டுபிடிப்பது?" என்றாள் பூங்குழலி.

"மின்னல் மின்னும்போது பார்த்தால்

தெரிந்து விடும். இருபுறமும் கவனமாகப் பார்க்க வேண்டும்!'' என்றான் சேந்தன் அமுதன்.

வானத்தையும் பூமியையும் பொன்னொளி மயமாக்கிக் கண்களைக் கூசச் செய்த ஒரு மின்னல் மின்னியது.

''அதோ ஒரு மண்டபம்!'' என்றான் சேந்தன் அமுதன்.

பூங்குழலியும் அந்த மண்டபத்தைப் பார்த்தாள். அதே மின்னல் வெளிச்சத்தில் அவர்களுக்கு முன்னால் சற்றுத் தூரத்தில் ஒரு பெரிய மரம் விழுந்து கிடப்பதையும் பார்த்தாள். விழுந்த மரத்தினடியில் சிலர் சிக்கிக்கொண்டிருப்பது போலத் தோன்றியது.

''அமுதா! விழுந்து கிடந்த மரத்தைப் பார்த்தாயா? அதனடியில்...'' என்றாள்.

''ஆமாம், பார்த்தேன். அந்தக் கதி நமக்கும் ஏற்பட்டு விடப் போகிறது. சீக்கிரம் மண்டபத்துக்குப் போய்ச் சேரலாம்!'' என்று கூறி விட்டு அமுதன் பூங்குழலியின் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு மண்டபம் இருந்த திசையைக் குறி வைத்து விரைந்து சென்றான்.

இருவரும் மண்டபத்தை அடைந்தார்கள். சொட்ட நனைந்திருந்த துணிகளிலிருந்து தண்ணீரைப் பிழிந்தார்கள். துணியைப் பிழிந்த பிறகு பூங்குழலி தன் நீண்ட கூந்தலையும் பிழிந்தாள்.

பிழிந்த ஜலம் மண்டபத்தின் தரையில் விழுந்து சிறு கால்வாய்களாக ஓடியது.

''அடாடா! மண்டபத்தை ஈரமாக்கி விட்டோமே?'' என்றாள் பூங்குழலி.

''மண்டபத்துக்கு அதனால் தீங்கு ஒன்றுமில்லை. ஜலதோஷம், காய்ச்சல் வந்து விடாது! நீ இப்படிச் சொட்ட நனைந்து விட்டாயே?'' என்றான் அமுதன்.

''நான் கடலிலேயே பிறந்து வளர்ந்தவள். எனக்கு இன்னொரு பெயர் 'சமுத்திர குமாரி'. என்னை மழைத் தண்ணீர் ஒன்றும் செய்து விடாது'' என்றாள் பூங்குழலி.

அவளுடைய உள்ளம் அப்போது தஞ்சாவூர்க் கோட்டைக்கு அருகிலிருந்த சாலை ஓர மண்டபத்திலிருந்து நாகைப் பட்டினத்துச் சூடாமணி விஹாரத்துக்குப் பாய்ந்து சென்றது. 'சமுத்திர குமாரி' என்று அவளை முதன் முதலாக அழைத்தவர் அந்தச் சூடாமணி விஹாரத்தில் அல்லவா இருந்தார்?

''பூங்குழலி! என்னுடைய நந்தவனமும் குடிசையும் சிறிது தூரத்திலே தான் இருக்கிறது. மழை விட்டதும் அங்கே போய் விடலாம். என் தாயார் உன்னைச் சரியாகக் கவனித்துக் கொள்ளுவாள்!'' என்று அமுதன் கூறிய வார்த்தைகள் பூங்குழலியின் காதில் அரை குறையாக விழுந்தன.

மறுபடியும் பளிச்சென்று கண்ணைப் பறித்தது ஒரு மின்னல். அதன் ஒளியில் அவர்கள் முன்னம் அரை குறையாகப் பார்த்த காட்சி நன்றாகத் தெரிந்தது. இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

சாலையில் ஏறக்குறைய அந்த மண்டபத்துக்கு எதிரே ஒரு பெரிய ஆலமரம் வேரோடு பறிக்கப்பட்டு விழுந்து கிடந்தது. விசாலமாகப் படர்ந்திருந்த அதன் கிளைகளும் விழுதுகளும் தாறு மாறாக முறிந்தும் சிதைந்தும் கிடந்தன.

அவற்றுக்கடியில் இரண்டு குதிரைகளும் ஐந்தாறு மனிதர்களும் அகப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

அப்படி அகப்பட்டுக் கொண்டிருந்தவர்களை விடுதலை செய்து காப்பாற்றுவதற்காக வேறு சிலர் முயன்று கொண்டிருப்பது தெரிந்தது. அவசரம் அவசரமாக அவர்கள் முறிந்து கிடந்த கிளைகளை அப்புறப்படுத்திக்கொண்டிருந்தார்கள்.

''ஐயோ!'' ''அப்பா!'' ''இங்கே!'' ''அங்கே!'' ''சீக்கிரம்!'' என்பவை போன்ற குரல்கள் மழைச் சத்தத்தினிடையே

மலினமாகக் கேட்டன.

இவற்றையெல்லாம் விட அதிகமாகச் சேந்தன் அமுதன், பூங்குழலியின் கவனத்தை வேறொன்று கவர்ந்தது. விழுந்து கிடந்த மரத்துக்குச் சற்றுத் தூரத்தில் ஒரு பல்லக்கு தரையில் வைக்கப்பட்டிருந்தது. அதன் அருகில் இரண்டு ஆட்கள் மட்டும் நின்றார்கள். மற்றவர்கள் விழுந்த மரத்தினடியில் அகப்பட்டுக்கொண்டவர்களைக் காப்பாற்றுவதில் முனைந்திருந்தார்கள் போலும்.

''அமுதா! பல்லக்கைப் பார்த்தாயா?'' என்று கேட்டாள் பூங்குழலி.

''பார்த்தேன், பழுவூர் இளைய ராணியின் பல்லக்குப் போல இருந்தது.''

''விழுந்த மரம் அந்தப் பல்லக்கின் மேலே விழுந்திருக்கக் கூடாதா?''

''கடவுளே! ஏன் அப்படிச் சொல்கிறாய்? பழுவூர் ராணியைப் பார்த்து அவள் மூலமாக ஏதோ காரியத்தைச் சாதிக்கப் போகிறதாகச் சொன்னாயே?''

''ஆமாம்; இருந்தாலும், அந்தப் பழுவூர் இளையராணியை எனக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை!''

''பிடிக்காவிட்டால், அவள் பேரில் மரம் முறிந்து விழ வேண்டுமா, என்ன?''

''சாதாரணப் பட்டவர்களின் தலையிலேதான் மரம் விழ வேண்டுமா? ராணிகளின் தலையிலே விழக் கூடாதா...? அது போனால் போகட்டும். இப்போது நாம் பல்லக்கினருகில் சென்று பழுவூர் ராணியைப் பார்த்துப் பேசலாமா? கோட்டைக்குள் போவதற்கு அவளுடைய உதவியைக் கேட்கலாமா?''

''அழகுதான்! ராணியைப் பேட்டி காண்பதற்கு நல்ல சமயம்; நல்ல இடம். பல்லக்கின் கிட்டப் போனால் மழைக் கால இருட்டில் திருட வருகிறோம் என்றெண்ணி நம்மை அடித்துப் போட்டாலும் போடுவார்கள்.''

''ராணியை நான் பார்த்து விட்டால், அப்புறம் காரியம் எளிதாகி விடும்...''

''அது எப்படி?''

''என் அண்ணியின் பெயரைச் சொல்வேன். அல்லது மந்திரவாதி ரவிதாஸன் அனுப்பினான் என்பேன்.''

''நல்ல யோசனைதான்! ஆனால் ராணியின் அருகில் நெருங்க முடிந்தால் அல்லவோ...? அதோ பார், பூங்குழலி!''

மீண்டும் ஒரு மின்னல் மின்னியது. அதன் வெளிச்சத்தில் இரண்டு பேர் பல்லக்கைத் தூக்குவது தெரிந்தது. ஆகா! கிளம்பி விட்டார்களா? இல்லை, இல்லை! மண்டபத்தை நோக்கியல்லவா பல்லக்கு வருவது போலக் காண்கிறது?

ஆம்; சிறிது நேரத்தில் பல்லக்கு மண்டபத்தின் முகப்புக்கு வந்து சேர்ந்தது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்கள் அதை இறக்கி வைத்தார்கள்.

''பழுவூர் இளையராணி நம்மைத் தேடிக்கொண்டல்லவா வருகிறாள்?'' என்றாள் பூங்குழலி.

அமுதன் அவளுடைய கரத்தைப் பற்றிக்கொண்டு மண்டபத்தின் உட்புறத்தை நோக்கி நகர முயன்றான். ஆனால் பூங்குழலி அவ்விதம் நகர மறுத்தாள்.

இதற்குள் "யார் அங்கே?'' என்று ஒரு அதட்டும் குரல் கேட்டது. பல்லக்கைச் சுமந்து வந்தவர்களில் ஒருவனின் குரல் என்பதைத் தெரிந்துகொண்டு, ''பயப்படாதே, அண்ணே! உங்களைப் போல் நாங்களும் வழிப்போக்கர்கள்தான். மழைக்காக மண்டபத்தில் வந்து ஒதுங்கியிருக்கிறோம்!'' என்று சொன்னாள் பூங்குழலி.

''சரி, சரி! பல்லக்கின் அருகில் வர வேண்டாம்!'' என்றது அதே குரல்.

''நாங்கள் ஏன் பல்லக்கின் அருகில் நெருங்கப் போகிறோம்? பல்லக்கில் ஏறுவதற்குப் பாக்கியம் செய்திருக்க வேண்டாமா?'' என்றாள் பூங்குழலி.


சேந்தன் அமுதன் "வள்ளுவர் பெருமான்கூட இதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். முற்பிறப்பில் செய்த வினைப் பயனைப் பற்றிக் கூறும்போது...'' என்று தொடங்கினான்.

"போதும் போதும்! வாயை மூடிக் கொண்டு சும்மா இருங்கள்! நீங்கள்

எத்தனை பேர்!''

''நாங்கள் இரண்டு பேர்தான். இன்னும் இரண்டு நூறு பேர் வந்தாலும் இந்த மண்டபத்தில் மழைக்கு ஒதுங்கலாம்...!'' என்றான் அமுதன்.

தான் உண்மையென்று நம்பியதையே அமுதன் சொன்னான். அதே மண்டபத்தின் உட்புறத்தில் தூணின் மறைவில் மூன்றாவது மனிதன் ஒருவன் நின்றது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.



ப ல்லக்குச் சுமந்தவன், "நான் அப்போதே சொன்னேன். மழை வந்ததும் மண்டபத்தில் போய் ஒதுங்கலாம் என்றேன்; கேட்கவில்லை. அதனால் இந்த சங்கடம் நேர்ந்தது!'' என்று தன் தோழனிடம் சொன்னான்.

"இப்படி ஆகும் என்று யார் அப்பா, கண்டது? மழை வலுப்பதற்குள் கோட்டைக்குள் போய் விடலாம் என்று எண்ணினோம். இந்த மட்டும் பல்லக்கின் மேல் மரம் விழாமல் போச்சே!" என்றான் அவன் தோழன்.

இச் சமயம் இன்னொரு பிரகாசமான மின்னல் மின்னியது.

சேந்தன் அமுதன் - பூங்குழலி இவர்களுடைய கண்களும் கவனமும் பல்லக்கின் பேரிலேயே இருந்தது.

ஆகையால் அந்த மின்னல் வெளிச்சத்தில், பல்லக்கின் திரையை விலக்கிக் கொண்டு ஒரு பெண்மணி தாங்கள் நின்ற திசையை உற்று நோக்கிக் கொண்டிருந்ததை அவர்கள் பார்த்தார்கள். அப்படி நோக்கிய பெண்மணியின் முகம் அவர்களைப் பார்த்து இன்னார் என்று தெரிந்துகொண்டு புன்னகை புரிந்ததையும் கவனித்தார்கள்.

மறுவினாடி மண்டபத்திலும் வெளியிலும் இருள் சூழ்ந்தது.

மிக மெல்லிய குரலில் பூங்குழலி "அமுதா பார்த்தாயா?" என்றாள்.

"ஆம், பார்த்தேன்."

"பல்லக்கில் இருந்தது யார்!"

"பழுவூர் இளைய ராணிதானே?"

"பழுவூர் ராணியைப் போலவேதான் இருந்தது. ஆனால் கொஞ்சம் சந்தேகமாக இருந்தது."

"சந்தேகமில்லை; நிச்சயந்தான்."

"எது நிச்சயம்?"

"பழுவூர் ராணி அல்ல; பித்துப் பிடித்த என் அத்தை ராணிதான் பல்லக்கில் இருக்கிறாள்!"

"உஷ்! இரைந்து பேசாதே!"

"இரைந்து பேசாவிட்டால் காரியம் நடப்பது எப்படி?"

"என்ன காரியம்?"

"எதற்காக இத்தனை தூரம் வந்தோமோ, அந்தக் காரியந்தான். அத்தையைக் கண்டுபிடித்து விட்டோம். அவளை விடுவித்து அழைத்துப் போக வேண்டாமா?"

"இப்போது அது முடியாத காரியம், பூங்குழலி! பல்லக்கு எங்கே போய்ச் சேர்கிறது என்று பார்த்துக் கொள்வோம். பிறகு யோசித்து விடுதலை செய்வதற்கு வழி தேடலாம்."

"தும்பை விட்டு விட்டு வாலைப் பிடிக்க வேண்டும் என்கிறாயே? அதெல்லாம் முடியாது. இப்போதே அத்தையை விடுதலை செய்தாக வேண்டும். உனக்குப் பயமாயிருந்தால் நீ சும்மா இரு!"

"விடுதலையாவதற்கு உன் அத்தை சம்மதிக்க வேண்டாமா? பல்லக்கில் ஏறி ஜாம் ஜாம் என்று போய்க்கொண்டிருக்கிறாள். எங்கே போகிறாள், எதற்காக, யார் அவளைப் பிடித்து வரச் செய்தது என்றெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டாமா?"

"பாதாளச் சிறைக்குக் கொண்டு போகிறார்களோ, என்னமோ? அப்புறம் நம்மால் என்ன செய்ய முடியும்?"

"ஏன் முடியாது? பாதாளச் சிறையில் நானே இருந்து வெளி வந்தவன்தான். அரண்மனைகளில் எனக்கும் கொஞ்சம் செல்வாக்கு உண்டு. உன் அத்தையை எப்படியாவது நான் விடுதலை செய்கிறேன். இப்போது நீ சும்மா இரு!"

பூங்குழலியும் அச்சமயம் பொறுமையுடன் சும்மா இருக்கத்தான் வேண்டும் என்று தீர்மானித்தாள். அப்போது அவர்கள் சிறிதும் எதிர்பாராத காரியம் ஒன்று நிகழ்ந்தது.

மூடு பல்லக்கின் விலகிய திரை இன்னும் நன்றாய் விலகுவது போலிருந்தது. அதன் உள்ளிருந்து ஓர் உருவம் வெளியே வந்தது. சத்தம் சிறிதுமின்றிப் பூனை நடப்பது போல் நடந்தது. அடுத்த வினாடி அவர்கள் அருகில் வந்து விட்டது.

இவ்வளவும் நல்ல இருட்டில் நடந்தபடியால், மண்டபத்தின் அடிப்படிகளில் நின்ற காவலர்கள் கண்ணில் படவில்லை.

பல்லக்கிலிருந்து வெளி வந்தவள் ஊமை ராணிதான் என்பதைப் பூங்குழலி அந்த இருளிலும் நன்றாய்த் தெரிந்துகொண்டு விட்டாள்.

ஊமை ராணி அந்த இரண்டு பேரின் கைகளையும் பிடித்து இழுத்துக் கொண்டு அம் மண்டபத்தின் பின் பகுதிக்கு விரைந்து சென்றாள்.

பூங்குழலியைத் தழுவிக்கொண்டு உச்சி முகந்து, அவளைப் பார்த்ததில் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தாள்.

பின்னர், அத்தைக்கும் மருமகளுக்கும் சமிக்ஞை பாஷையில் சிறிது நேரம் சம்பாஷணை நடந்தது.

அந்தக் காரிருளில் அவர்கள் ஒருவருக்கொருவர் எப்படித்தான் பேசிக் கொண்டார்களோ? ஒருவர் கருத்தை ஒருவர் எவ்வாறுதான் தெரிந்து கொண்டார்களோ? அது நம்மால் விளங்கச் சொல்ல முடியாத காரியம்.

பூங்குழலி சேந்தன் அமுதனிடம், "அத்தை சொல்லுவது உனக்குத் தெரிந்ததா? என்னைப் பல்லக்கில் ஏறிக் கொண்டு போகச் சொல்கிறாள். அவளை உன் வீட்டுக்கு அழைத்துப் போகச் சொல்லுகிறாள்!" என்றாள்.

"உன் சம்மதம் என்ன? பூங்குழலி!" என்று அமுதன் கேட்டான்.

"அத்தை சொல்கிறபடி செய்யப் போகிறேன். அவளைப் பிடித்துக் கொண்டு வரச் சொன்னவர்கள் இன்னார் என்று தெரிந்து கொள்வதற்குச் சரியான உபாயம் அல்லவா?"

"யோசித்துச் சொல்லு! பூங்குழலி! உபாயம் சரிதான்! அதில் என்ன அபாயம் இருக்குமோ?"

"அமுதா! நீ கவலைப்படாதே! அத்தை சொன்னபடி செய்வதினால் எனக்கு ஓர் அபாயமும் ஏற்படாது. அப்படி ஏற்படுவதாயிருந்தால், என் இடுப்பில் இந்தக் கத்தி இருக்கவே இருக்கிறது!" என்று சொன்னாள் பூங்குழலி.

அத்தையை மறுபடி ஒருமுறை தழுவிக்கொண்டு விட்டுப் பூங்குழலி அவளைப் போலவே சத்தம் செய்யாமல் நடந்து சென்று, பல்லக்கில் புகுந்து திரையையும் விட்டுக்கொண்டாள்.


இருபத்து இரண்டாம் அத்தியாயம்

அநிருத்தரின் ஏமாற்றம்

முதன்மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் சில தினங்களாகத் தலைநகரிலேயே தங்கியிருந்தார். அவரைக் காண்பதற்கு அரசாங்க அதிகாரிகள், சிற்றரசர்கள், சேனைத் தலைவர்கள், அயல் நாட்டுத் தூதர்கள், வர்த்தகக் குழுக்களின் பிரதிநிதிகள், ஆலய நிர்வாகிகள், தென் மொழி வடமொழி வித்வான்கள் முதலியோர் வந்த வண்ணமிருந்தார்கள். ஆதலின் அவருடைய மாளிகையின் வாசலில் ஜே, ஜே என்று எப்போதும் ஜனக் கூட்டமாக இருந்தது.

அநிருத்தர் தமக்கென்று தனியாகக் காவல் படை வைத்துக் கொள்ளவில்லை. பரிவாரங்களும் மிகக் குறைவாகவே வைத்துக்கொண்டிருந்தார். ஆகையால் பழுவேட்டரையர்களோடு அவருக்குத் தகராறு எழுவதற்குக் காரணம் எதுவும் ஏற்படாமலிருந்தது.

ஆன போதிலும், சின்னப் பழுவேட்டரையர் முணுமுணுத்துக் கொண்டிருந்தார். முதன் மந்திரி தஞ்சை நகரில் தங்க ஆரம்பித்ததிலிருந்து கட்டுக்காவல் குறைந்து போயிருந்தது. முதன் மந்திரியைக் காண வேண்டுமென்ற வியாஜத்தில், கண்டவர்கள் எல்லாம் கோட்டைக்குள் நுழைந்து கொண்டேயிருந்





தார்கள். சக்கரவர்த்தியின் அரண்மனையை அடுத்து முதன் மந்திரியின் மாளிகை இருந்தபடியால், அரண்மனை வட்டாரத்திலும் ஜனக்கூட்டம் அதிகமாகிக்கொண்டிருந்தது. முதன் மந்திரியின் பெயரைச் சொல்லிக்கொண்டும் அவருடைய இலச்சினையைக் காட்டிக்கொண்டும் அநேகம் பேர் அங்கே வந்து அவரைப் பார்த்து வண்ணமிருந்தார்கள்.

இதையெல்லாம் ஓரளவு கட்டுப்படுத்த வேண்டும் என்று சின்னப் பழுவேட்டரையர் விரும்பினார்.



ஆனால் நேரில் முதன்மந்திரியிடம் போய்ச் சண்டை பிடிப்பதற்கு வேண்டிய துணிச்சல் அவருக்கு இல்லை. பெரிய பழுவேட்டரையரும் இருந்தால், இருவருமாக யோசித்து ஏதேனும் செய்யலாம். இந்தச் சமயம் பார்த்துப் பெரிய பழுவேட்டரையர் கடம்பூருக்குப் போய் விட்டதனால், சின்னவரான காலாந்தக கண்டருக்கு ஒரு கை ஒடிந்தது போல் இருந்தது.

கோட்டைக்குள் ஜனக் கூட்டத்தைச் சேர்த்துக் கட்டுக் காவலுக்கு ஊறு விளைவிப்பது போதாது என்று, முதன் மந்திரி அநிருத்தர் அடிக்கடி ஏதாவது சின்னப் பழுவேட்டரையரிடம் உதவி கேட்கும் பாவனையில் அவருக்குக் கட்டளை அனுப்பிக்கொண்டிருந்தார்.

சில நாளைக்கு முன்பு கோடிக் கரைக்கு அனுப்புவதற்குச் சில வீரர்கள் வேண்டும் என்று கேட்டார். காலாந்தக கண்டரும் ஆட்களைக் கொடுத்து உதவினார். பிறகு, நேற்றைக்கு, உயர்குலத்துப் பெண்மணி ஒருவரைத் திருவையாற்றிலிருந்து அழைத்து வர வேண்டுமென்றும், அதற்குப் பழுவூர் அரண்மனையின் மூடு பல்லக்கு ஒன்றும், சிவிகை தூக்கிகளும் வேண்டும் என்றும் சொல்லி அனுப்பினார். சின்னப் பழு வேட்டரையர் இந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றினார். ஆனால் மனத்திற்குள், "இந்தப் பிரம்மராயன் ஏதோ சூழ்ச்சியில் ஈடுபட்டிருக்கிறான். அவ்விதம் மூடு பல்லக்கில் வைத்து வரவழைக்கக் கூடிய உயர் குடும்பத்துப் பெண்மணி யார்? எதற்காக இங்கே வருகிறாள்? இதை எப்படியும் கண்டுபிடிக்க வேண்டும். இத்தகைய சந்தர்ப்பத்தில் தமையனார் இங்கே இல்லாமற் போய் விட்டாரே?" என்று அவர் மனசு சஞ்சலப்பட்டது.

முதன் மந்திரி அநிருத்தரின் மாளிகைக்கு மூடு பல்லக்கில் வந்தது யார் என்று தெரிந்து கொள்ள இன்னொரு மனிதனும் ஆவல் கொண்டிருந்தான். அவன் வேறு யாரும் இல்லை; அநிருத்தப் பிரம்மராயரின் அருமைச் சீடனான ஆழ்வார்க்கடியான்தான்.

பெருமழை பெய்த அன்றைக்கு மறு நாள் காலையில் அநிருத்தப் பிரம்மராயர் ஸ்நான பானம், ஜபதபம், பூஜை புனஸ்காரம் ஆகியவற்றை முடித்துக்கொண்டு மாளிகையின் முன் முகப்புக்கு வந்து சேர்ந்தார். தம்மைக் காண்பதற்கு யாரார் வந்து காத்திருக்கிறார்கள் என்று சேவகனைப் பார்த்துக்கொண்டு வரச் செய்தார். காத்திருந்தவர்களில் ஆழ்வார்க்கடியான் ஒருவன் என்று தெரிந்ததும், அவனை உடனே கூட்டி வரும்படி ஆக்ஞாபித்தார்.

ஆழ்வார்க்கடியான் தன் குருநாதரின் முன்னால் விரைந்து வந்து பய பக்தி வினயத்துடன் நின்றான்.

"திருமலை! போன காரியம் என்ன ஆயிற்று?" என்று அநிருத்தர் கேட்டார்.

"குருவே! மன்னிக்க வேண்டும். தோல்வியடைந்து திரும்பினேன்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"ஒருவாறு நான் எதிர்பார்த்ததுதான். ஆதித்த கரிகாலரைச் சந்திக்க முடியவில்லையா?"

"சந்தித்தேன், ஐயா! தாங்கள் சொல்லச் சொன்ன செய்திகளையும் சொன்னேன். ஒன்றும் பயனில்லை. இளவரசரைக் கடம்பூர் அரண்மனைக்குப் போகாமல் தடுக்க முடியவில்லை..."

"இளவரசர் இப்போது கடம்பூரில்தான் இருக்கிறாரா?"

"ஆம், குருவே! சம்புவரையரின் மாளிகையில் அவர் பிரவேசித்ததைப் பார்த்துவிட்டுத்தான் வந்தேன். இளவரசருக்குச் சம்புவரையர் இராஜோபசார வரவேற்பு அளித்தார். சுற்றுப்புறத்து மக்கள் காட்டிய உற்சாகத்தையோ வர்ணிக்க முடியாது."

"அதெல்லாம் எதிர்பார்க்கக் கூடியதுதான். கடம்பூர் மாளிகைக்கு இன்னும் யார், யார் வந்திருக்கிறார்கள்!"

"இளவரசருடன் பார்த்திபேந்திரனும் வந்தியத்தேவனும் வந்திருக்கிறார்கள். இங்கிருந்து பெரிய பழுவேட்டரையர் இளைய ராணியுடன் வந்திருக்கிறார். இன்னும் நடு நாட்டையும் திருமுனைப்பாடி நாட்டையும் சேர்ந்த பல சிற்றரசர்களையும் அழைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன்..."

"திருக்கோவலூர் மலையமான்...?"

"மணிமுத்தா நதி வரையில் இளவர

சருடன் வந்து திரும்பிப் போய்விட்டார்!"

"அந்த வீரக் கிழவன் சும்மா இருக்க மாட்டான். இதற்குள் சைனியம் திரட்டத் தொடங்கியிருப்பான். தெற்கேயிருந்து கொடும்பாளூர்ப் பெரிய வேளான் பெரிய சைன்யத்துடன் வருவதாகக் கேள்விப் படுகிறேன். இந்த ராஜ்யத்துக்குக் கேடு ஒன் றும் வராமல் கடவுள்தான் காப் பாற்ற வேண்டும். திருமலை! நீ வரும் வழியில் சோழ நாட்டு மக்கள் என்ன பேசிக் கொண் டிருக்கிறார்கள் என் பது ஏதேனும் காதில் விழுந்ததா?"

"சின்ன இளவர



சருக்கு நேர்ந்த கடல் விபத்தைப் பற்றியே அதிகம் பேசிக் கொண்டிருக்கிறார்கள். பழுவேட்டரையர்கள் மீது ஒரே கோபமாயிருக்கிறார்கள். சிலர் தங்களையும் சேர்த்துக் குறை கூறுகிறார்கள்..."

"ஆம், ஆம்; குறை கூறுவதற்கு அவர்களுக்கு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. திருமலை! சீக்கிரத்தில் இந்த முதன் மந்திரி உத்தியோகத்தை விட்டு விட எண்ணியிருக்கிறேன்..."

"குருவே! தாங்கள் அப்படிச் செய்தால் எனக்கும் விடுதலை கிடைக்கும். ஆழ்வார்களின் பாசுரங்களை நாடெங்கும் பாடி யாத்திரை செய்து ஆனந்தமாய்க் காலங் கழிப்பேன். எப்போது உத்தியோகத்தை விட்டு விடப் போகிறீர்கள், ஐயா!"

"இராஜ்யத்திற்கு விபத்து நேராமல் பாதுகாக்கக் கடைசியா ஒரு முயற்சி செய்து பார்க்கப் போகிறேன். அது முடிந்ததும் விடப் போகிறேன்..."

"அது என்ன முயற்சி, குருவே!"

"அந்த முயற்சியில் மிக முக்கியமான முதற்படி ஏறியாகி விட்டது. திருமலை! உன்னால் முடியாது என்று நீ கைவிட்டு விட்ட ஒரு காரியத்தில் நான் வெற்றி பெற்று விட்டேன்..."

"அதில் வியப்பு ஒன்றுமில்லை, ஐயா! அது என்ன காரியமோ?"

"ஈழத் தீவில் பித்துப் பிடித்தவள் போல் அலைந்து திரிந்துகொண்டிருக்கும் ஓர் ஊமை ஸ்திரீயைத் தேடிப் பிடித்து அழைத்து வரச் சொன்னேன் அல்லவா? உன்னால் அந்தக் காரியம் முடியவில்லை என்று திரும்பி வந்து கூறினாய் அல்லவா?" என்று அநிருத்தர் கேட்டார்.

"ஆம், ஐயா! அந்த ஊமை ஸ்திரீ..."

"நேற்றிரவு நம் அரண்மனைக்கு அவளைக் கொண்டு வந்தாகி விட்டது."

"ஆகா! அதிசயம்! அதிசயம்! இதை எப்படிச் சாதித்தீர்கள்?"

"சின்ன இளவரசர் தப்பிப் பிழைத்தாரா இல்லையா என்று தெரிந்து கொள்ள அந்த ஊமைப் பெண் கோடிக் கரைக்கு வருவாள் என்று எதிர்பார்த்தேன். வந்தால் அவளைப் பிடித்துக் கொண்டு வரும்படி ஆட்களை அனுப்பியிருந்தேன். நல்லவேளையாக, அவள் அதிக தொந்தரவு கொடுக்காமலே வந்து விட்டாள். இந்த வேடிக்கையைக் கேள், திருமலை! திருவையாற்றிலிருந்து அவளை மூடு பல்லக்கில் வைத்து அழைத்து வரச் செய்தேன். இதற்காகப் பழுவூர் இளைய ராணியின் மூடு பல்லக்கையே அனுப்பி வைத்தேன்..."

"ஐயா! நேற்று மாலை பெரும் புயலும் மழையும் அடித்ததே!"

"ஆம்; அதனால் வழியில் தடங்கல் ஏற்பட்டது. எனக்குக் கூடக் கவலையாகத் தானிருந்தது. நேற்று நள்ளிரவு நேரத்துக்குப் பல்லக்கு வந்த பிறகுதான் நிம்மதியாயிற்று."

"ஓகோ! நள்ளிரவு ஆகி விட்டதா? தாங்களும் அத்தனை நேரமும் விழித்திருந்து வரவேற்பு அளித்தீர்களா?"

"விழித்திருந்தேன். ஆனால் வரவேற்பதற்கு நான் போகவில்லை. வீட்டுப் பெண்களை விட்டே வரவேற்கச் செய்தேன். வெறி பிடித்தவளாயிற்றே, என்ன தகராறு செய்கிறாளோ என்று கவலையாகத்தானிருந்தது. நல்லவேளையாக, அப்படி ஒன்றும் நடக்கவில்லை. நன்றாகச் சாப்பிட்டு விட்டு, உடனே உறங்கி விட்டாள். திருமலை! உண்மையைச் சொல்லப் போனால், இன்னமும் அவளைப் பார்க்கும் விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் பயமாய்த்தானிருக்கிறது. நீ இச்சமயம் வந்தது நல்லதாய்ப் போயிற்று...!"

"குருவே! நானும் அந்தப் பெண்மணியைப் பார்ப்பதற்கு மிக்க ஆவலாயிருக்கிறேன்..."

"அப்படியானால், வா! அந்தப்புரத்துக்குப் போகலாம். உன்னை ஏற்கெனவே அவளுக்குத் தெரியும் அல்லவா? நீ சின்ன இளவரசருக்கு வேண்டியவன் என்பதும் தெரியும். ஆகையால் உன்னிடம் சிறிது சமுகமாக இருக்கக் கூடும்."

குருவும் சீடனும் மாளிகையின் பின் கட்டுக்குச் சென்றார்கள். தாதிமார்களிடம் நேற்றிரவு வந்த பெண்மணியை அழைத்து வரும்படி அநிருத்தப் பிரம்மராயர் கட்டளையிட்டார்.

தாதிமார்கள் அந்த ஸ்திரீயை அழைத்துக்கொண்டு வந்து நிறுத்தினார்கள்.

அநிருத்தர் அவளைப் பார்த்துத் திகைத்துப் போய் நின்றார்.

ஆழ்வார்க்கடியானின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

(தொடரும்)

கே. பாலச்சந்தர் வழங்கும்

ஊஞ்சல்



பைரவியும் விஷ்ணுவும் எதிரெதிர் வீட்டில் வசிப்பவர்கள். இரண்டு குடும்பங்களும் நல்ல நட்பு. விதவைத் தாயுடன் வசிக்கும் விஷ்ணு ஏர் இந்தியாவின் உயர் அதிகாரி. பைரவியோ மத்திய குடும்பத்தைச் சேர்ந்த டைப்பிஸ்டாக பணிபுரிபவள். அவளை விட குறைவாக சம்பாதிக்கும் தந்தையும், 12 வயதில் ஒரு தம்பியும். பைரவி விஷ்ணுவை மனதாரக் காதலிக்கிறாள். ஆனால் விஷ்ணுவோ, பாடகியான பல்லவியை பெற்றோர் சம்மதத்துடன் காதலித்து நிச்சயதார்த்தமும் நடக்கிறது.

பைரவிக்கு அதிர்ச்சி! விஷ்ணுவை எக்காரணத்திற்காகவும் இழக்கத் தயாராயில்லை அவள்! ஒரு முடிவுக்கு வருகிறாள் – உடனே பல்லவியுடன் நெருங்கிப் பழகி அவளுடைய தீவிர நட்புக்கு ஆளாகிறாள்! இப்பொழுது தன்னுடைய திட்டத்தை செயல்படுத்த தொடங்குகிறாள். பல்லவியையும், விஷ்ணுவையும் பிரிப்பதற்கு!

அநாமதேய கடிதங்கள், நம்பக்கூடிய கிசுகிசு, விஷ்ணுவின் பேச்சுக்கள் அடங்கிய குறிப்பிட்ட கேசட் – இது போல எத்தனையோ முயற்சிகள் மூலம் அவள் விஷ்ணுவை பல்லவியிடமிருந்து பிரிக்க பார்க்கிறாள். ஏனென்றால் அவள் எக்காரணத்திற்காகவும் விஷ்ணுவை இழக்கத் தயாராயில்லை!

ஆனால் பைரவியின் ஒவ்வொரு முயற்சியும் முறியடிக்கப்படுகிறது! யாரால்?

அவள் விஷ்ணுவை அடைந்தாளா? அல்லது விஷ்ணு தடைகளைத் தாண்டி பல்லவியை மணந்தானா?

விஷ்ணுவை யார் அடைந்தார்கள்?

இந்த இழையில்தான் கதையின் ஓட்டம்! விறுவிறுப்பு!
இது ஒரு இளமையான சங்கீதக் காதல் கதை!
காணத் தவறாதீர்கள்! உங்கள் விஜய் டிவியில்!

கதை, திரைக்கதை & வசனம் : தேவிபாலா

இயக்கம் : சுந்தர் கே. விஜயன்

நடிகர்கள் : எஸ்.பி.பி., சரண், ஷாலினி & ஸ்ரீதுர்கா.

vijay

விஜய் டி.வியில் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் இரவு 8.30 மணிக்கு

- ADVT -

மண்டபத்துக்குள்ள வச்சு நடிகர் நடிகைகளுக்கு விருது கொடுத்து பார்த்திருப்பீங்க. நட்ட நடுத் தெருவிலே வச்சு விருது குடுக்கிறதைப் பார்க்கணும்னா மதுரைக்கு வாங்க!

'அமுதசுரபி கலை மன்ற'த்தைச் சேர்ந்தவங்க வருசா வருசம் சினிமா நடிகர் நடிகைகளை அழைத்து வந்து விருது குடுக்குறாங்க...

இந்த வருசம் 'சிறந்த இளம் புதுமுக இயக்குனரா' சரண், '20-ம் நூற்றாண்டின் தலைசிறந்த நடிகையா' சுஜாதா! (அப்படியானா, ஏன் போன வருசம் சுவலட்சுமிக்கும் அதுக்கு முந்துன வருசம் தேவயானிக்கும் விருது குடுத்தீங்கன்னு யாருமே கேட்கலை. ஒருவேளை அது 19-ம் நூற்றாண்டுன்னு நினைச்சிட்டாங்களோ?)

'சிறந்த புதுமுக நடிகரா' மனோஜ் (தாஜ் மஹால் பாத்தா கொடுத்தீங்க?) 'சிறந்த இயக்குனர்'- 'இயக்குனர் திலகம்' வி. சேகர் - விருது வாங்குனாங்க.

சிறந்த நடன இயக்குனர் விருதை வாங்காம ஊட்டியில படப்பிடிப்புல இருந்த ராஜுசுந்தரம் கடிதம் அனுப்பியிருப்பதாச் சொன்னாங்க.

அந்தக் கடிதத்துல 'அமுதசுரபி வெள்ளி விழாவோ ஏதோ ஒரு விழாவுல சிம்ரனோட வந்து கலந்துக்குவேன்னு' எழுதியிருக்கிறதா வாசிச்சாங்க! (இனி கிசுகிசு எழுத வேண்டாம். மாப்பிள்ளைதான் ஒத்துக்கிட்டாரே!)

அதே மாதிரி இன்னொரு விஷயத்தையும் 'டொம்'முனு சத்தம் வராம போட்டு உடைச்சாங்க. அதாவது சேகர் தன்னோட படத்து கதை வசனத்தை பழனிமலை அடிவாரத்துலதான் எழுதுவாராம். அப்படி எழுதறப்ப பக்கத்து வீடுகள்ல இருக்கறவங்க சமைச்சு கொண்டு வந்து தருவாங்களாம்... தயங்கித் தயங்கி சேகரே சொன்னார்.

தம் பங்குக்கு சரணும் ஒரு புது விஷயத்தை 'ஓப்பன்' பண்ணினார். பாரதி ராஜா புதல்வன் மனோஜை வச்சு 'அல்லி அர்ஜுனா'ங்கிற படத்தை சரண் டைரக்ட் செய்யப் போறாராம். அல்லி அர்ஜுனான்னா என்னா அர்த்தமுனு தெரியுமானு மனோஜ் கூடியிருந்த மக்கள்கிட்டே கேட்டார்.

பதில் வராது



விருது கூடம்!

போகவே, 'அல்லி நகரத்திலிருந்து அர்ஜுனன் மாதிரி புறப்பட்டுருக்கேன். அதனால வச்ச குறி தப்பாது'னு சொல்லிட்டு, 'கை தட்டுங்க' என்றார் மனோஜ்!




• மனோஜ்





• சரண்



• வி. சேகர்

"தாஜ்மஹால் படம் தோல்வி பற்றி?" என்று விருது வழங்கிய குருப் கேட்க, மனோஜ் சமாளித்து பதில் சொல்ல, நமக்கொரு சந்தேகம். தோல்விப் படத்தில் நடித்ததற்கு விருது கொடுப்பானேன்? தோல்வி, தோல்வி என்று மேடையிலேயே சொல்லிச் சொல்லி வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவானேன்?

விருதுக் குழுவுக்கு கே.எஸ். கோபாலகிருஷ்ணன் மீது என்ன கோபம் என்று தெரியவில்லை. அவரிடம் இருந்த 'இயக்குனர் திலகம்' பட்டத்தையே வி. சேகருக்குக் கொடுத்தார்கள்!

வி. சேகர் பேசியபோது, நடிகர்களை வாங்கு வாங்கென்று வாங்கினார். "சினிமாவை சினிமாவாகப் பாருங்கள்.. அரசியலுக்கு சினிமாவிலிருந்து ஆட்களை எடுக்காதீர்கள்" என்று வாரி வாரி அறிவுரைகள் வழங்கினார். "காமராஜர் வீடு எங்கே இருக்குன்னு கேட்டா செந்தில் வீட்டுக்கு அடுத்தாப்புல இருக்குனு சொல்றாங்க" என்று வருத்தப்பட்டார். தாம் மலேரியா இன்ஸ்பெக்டரா வேலை பார்த்தபோது தாய்மார்கள்கிட்டே குழந்தை பிறந்த தேதி கேட்டால், 'பாலும் பழமும்' படம் வந்தப்ப பிறந்துச்சு என்ற ரீதியில் பதில் சொல்வாங்களாம்!

"ஜீன்ஸ், முதல்வன் மாதிரி நான் ஏன் படம் எடுக்கணும்? அதுக்குத்தான் ஷங்கர் இருக்காரே... ஒரே ஆள் எல்லா கடையும் வைக்க முடியாது. ஒருத்தன் பொரி கடலை வித்தா, இன்னொருத்தன் புளி, பருப்பு விக்கிற மாதிரி தான் இதுவும்" என்றார் சேகர் போகிற போக்கில்!

'அவர்கள்' படத்தில் மனைவியாகவும், 'அன்புக்கு நான் அடிமை' படத்தில் அண்ணியாகவும் 'உழைப்பாளி' படத்தில் அம்மாவாகவும் ரஜினிகாந்துடன் நடித்தது பற்றி சுஜாதாவிடம் கேட்டபோது அது லேடிஸோட தலையெழுத்து என்றார்!

எக்கச்சக்கமாக சிந்திக்க வெக்கற சமாசாரமில்லியா இது?

— 'குகம்பன்'

3



கேஷவ் வீட்டிலிருந்து எழுந்து வந்த ஹோமகுண்டப் புகை ஜன்னல் வழியாக நுழைந்து சுவாதிக்குக் கமறலை ஏற்படுத்தியது.

சாஸ்திரிகள் மந்திரம் சொல்கையில் சற்றே இடைவெளி கிடைத்தபோது "பீமலா, பண்டிட்ஜி பாவம் மூணு நாளா உடம்பு சரியில்லாமல் படுத்துக்கிட்டிருக்கார். ஜன்னலை மூடு. புகை அங்கே போயிட்டிருக்கு பார்" என்று உத்தரவிட்டான் கேஷவ்.

ஜன்னலை மூட வந்த பீமலாவின் கண்களில் காலியாக இருந்த ஒய்வு நாற்காலி கண்ணில் பட்டது. "கோவிலுக்கா?" என்று கேட்டாள்.

புரிந்துகொண்டு "இல்லை தீதி, அப்பா பேங்க்குக்குப் போயிருக்கார்" என்றாள் சுவாதி. அவருக்குக் கவலை ஏற்கெனவே துளிர்விட்டிருந்தது.

"என்னடா முன்னா, அப்பா போய் ரொம்ப நேரமாச்சே. இன்னும் வரல்லியே?" என்று திகில் உணர்வு வெளிப்படக் கேட்டாள்.

தன்னுடனேயே இருக்கும் அவனுக்கு மட்டும் என்ன அதிகப்படி விவரம் தெரிந்திருக்க முடியும் என்பது கூட அப்போது அவளுக்கு உறைக்கவில்லை. "அப்படியொன்றும் நேரமாகலே அக்கா. இப்ப வந்துடுவாரு" என்று அவன் எந்த ஆதாரமும் இல்லாமல் சொன்னால்கூட ஆறுதலாக இருக்கும் போலிருந்தது. அப்பா என்பது அவளைப் பொறுத்தவரை உறவு மட்டுமில்லை, பாதுகாப்பு வளையம். அவளுக்கென்றிருக்கும் ஒரே அரண்.

டேராடூனில் வசித்தபோது அருகே உள்ள தப்கேஷ்வருக்கு தன் வயதொத்த சில

அருண் சரண்யா

தோழிகளுடன் அவ்வப்போது போவதுண்டு. அந்தப் பகுதியில் அமைந்த படேபகவான் குருஜி ஆஸ்ரமம் அப்பாவுக்குப் பிடித்த இடம். அங்கு செல்வதாகக் கூறினால்தான் அனுமதி சுலபமாகக் கிடைக்கும். அந்த ஆஸ்ரமம் சுவாதிக்கும் பிடிக்கும். என்றாலும் தப்கேஷ்வர் ஆலயம் அதைவிட அதிகமாகப் பிடிக்கும்.

துரோணர் தவம் செய்த தலமாம். படு அமைதி. ஓவென்று படர்ந்து வரும் நதிகூட அந்த அமைதியைப் பங்கப்படுத்தாது. குகை போன்ற ஒரு பகுதிக்குள் கொஞ்ச தூரம் நடந்து சென்றுதான் அங்குள்ள சிவன் கோயிலை அடைய முடியும். அப்போது தலைக்கு மேலே உள்ள குகைப் பாறைகளின் மீது பாய்ந்து சென்று சற்றுத் தள்ளி விழும் மழையின் வேகமும், அதன் நீர்த்திவலைகள் உடல் மீது தெறிக்கும்போது உண்டாகும் ஆனந்தமும் சொர்க்க அனுபவம்.

ஒருமுறை அங்கு பிக்னிக் சென்றிருந்த போது சுவாதியின் டீச்சர் அவளைச் சற்று ஒதுக்குப்புறமாக அழைத்துச் சென்று கேட்டாள்.

"சுவாதி, நீ புத்திசாலிதான். பாடங்களிலே நிறைய மதிப்பெண் வாங்கறே. ஆனாலும் உன்கிட்டே ஏதோ ஒண்ணு குறைவா இருக்கு. அது உனக்குப் புரியுதா?"

"தெரியல்லியே மிஸ். குழப்பமா இருக்கு" என்றாள் அவள் அப்பாவித்தனத்துடன்.

"இதுதான் உன்னிடம் இருக்கும் குறை

பற



பாடு சுவாதி. பாடங்களில் வரும் கேள்வி பதில்களையெல்லாம் நான் வகுப்பிலே சொல்லிக் கொடுப்பதால், நீ பரீட்சையிலே நல்ல மார்க் வாங்கறே. ஆனால் பாடத்திலே இல்லாத ஒரு கேள்வியைக் கேட்டால் விழிக்கறே. உனக்கு அப்ளிகேஷன் ஆஃப் மைண்ட் இல்லே. இந்தக் குறையை நீ சரி செய்துக்கணும். இது சம்பந்தமாக உன் அப்பாவை சந்திச்சுப் பேசட்டுமா?" என்றாள்.

பதில் கூறத் தெரியாமல் திகைக்க, "என்ன திரும்பவும் குழப்பமா?" என்று கேட்டுச் சிரித்தாலும் அதற்கு அடுத்த நாளே சுவாதியின் வீட்டுக்கு அந்த டீச்சர் வந்து விட்டாள்.

"சார், உங்க மகளுக்கு மனசளவில் ஒரு ஆறுதல் தேவைப்படுது. எப்போதும் யாரோட கையையாவது பிடிச்சுக்கிட்டு நடக்கணும்னே அவ நினைக்கிறா. தானாகச் செயல்படணும். தானே முடிவெடுக்கணும் இறதெல்லாம் அவளாலே முடிவதில்லை" என்று அவள் சொன்னவுடனேயே, "அது நல்லதுதானே. பெண்ணுக்கு எதற்கு தான் தோன்றித்தனம்?" என்ற பதில் பளிச்சென்று வந்தது அப்பாவிடமிருந்து.

டீச்சருக்கு இந்தப் பதில் அதிர்ச்சியையும், அதிருப்தியையும் தந்திருக்க வேண்டும். "அப்படியா? அப்போ சுவாதி மாறணும்னா உங்க கிட்டேயே சில மாறுதல்கள் தேவைப்படும்னு நினைக்கிறேன்" என்று டீச்சர் கூற, அப்பாவின் முகம் அந்நியமாய் மாறியது. "போய் காப்பி கலந்துக் கிட்டு வா'' என்று சுவாதியை உள்ளே அனுப்பினார்.

முழுப் பேச்சு வார்த்தையும் சுவாதியின் காதுகளில் விழவில்லையென்றாலும் அப்பா அவ்வப்போது உரத்த குரலில் பேசிய சில

பகுதிகள் விழுந்தன. "என்ன செய்ய, அவ ஆணாப் பிறக்கல்லியே!", "உங்களை விட எனக்கு அதிகம் தெரியும்", "டீச்சர், உங்க எல்லை பள்ளிக்கூடத்தோட முடிஞ்சிடுச்சு."

காப்பி தம்ளர்களோடு கூடத்துக்கு வந்த போது அப்பா மட்டும்தான் இருந்தார். இனி பள்ளிக்குப் போக வேண்டாமென்று சொல்லி விடுவாரோ என்ற கவலை கூட அப்போது எழுந்தது.

அப்போது அந்தக் கவலை. இப்போது அப்பா வங்கியிலிருந்து இன்னமும் திரும்ப வில்லையே என்ற கவலை.

திடீரென்று வாசலில் ஏதோ சத்தம். 'அப்படியா? அப்படியா? எங்கே?' என்று பதற்றத்துடன் கேஷவ் யாரையோ விசாரித்துக் கொண்டிருந்தார். பிறகு அவரும் பீமலா தீதியுமாகத் தன் வீட்டுக்குள் நுழைந்ததைப் பார்த்ததும் சுவாதிக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. அவர்கள் வீட்டில் திவசம் முடிந்து சாஸ்திரிகள் கிளம்பியாகி விட்டது என்றாலும் இவர்கள் இருவரும் இன்னும் சாப்பிட்டிருக்க மாட்டார்களே, அதற்குள் எதற்காக இங்கே வருகிறார்கள் என்ற சந்தேகம் எழுந்தபோதே, பீமலா சுவாதியைத் தரதர வென்று இழுத்துக்கொண்டு போய் வாசலிலிருந்த ஆட்டோவில் ஏற்றினாள். "சீக்கிரம் ஏறுங்கள்" என்று கணவனை அவசரப் படுத்தினாள். "முன்னாவையும் வீட்டையும் நான் பார்த்துக்கறேன் சுவாதி" என்றவள், மூச்சு வாங்க வாசலில் நின்று கொண்டிருந்த ஒருவனிடம் "பண்டிட்ஜிக்கு பாங்கிலே தானே சிகிச்சை கொடுத்துக்கிட்டிருக்காங்க?" என்று கேட்டபோது பகிரென்றது. "அப்பாவுக்கு என்ன ஆச்சு?" என்று அவள் கேட்க, பாதிக் கேள்வியிலேயே ஆட்டோ கிளம்பிவிட்டது.

'**அ**ப்பா, உங்களுக்கு எதுவும் ஆகியிருக்கக் கூடாது. எனக்குப் படிப்பு வேண்டாம். பறக்க வேண்டாம். நீங்கள் வேண்டும். பழைய அப்பாவாக மாறி எனக்குக் கதை சொல்ல வேண்டும்." தவிப்பு எல்லைகளைத் தொட்டுத் தாண்டியது.

அப்பா கதை சொல்வது சுகமான அனுபவம். அவர் பணியாற்றிய கல்லூரியில் கூட 'சுவாரசியமான ஆசிரியர்' என்ற புகழ் அவருக்கு உண்டு.

கதை என்றால் ராஜாராணி கதை அல்ல. தனது கருத்துக்களை சர்க்கரை தடவி மகளின் மனதில் ஏற்றுவதற்கிசைவான கதைகள் மட்டுமே தேர்ந்தெடுக்கப்படும்.

அன்று நாத்திகவாதி ஒருவனை மதத் தலைவர் ஒருவர் தன் கூர்மையான பதில்களால் அசர வைக்கும் கதை.

"கடவுள்னு ஒருத்தன் இருந்தால் அவர் ஏன் நம் கண்களுக்குத் தெரியல்லேன்னு கேட்டான் அந்த நாத்திகன். உடனே குருஜி பதிலுக்குக் கேட்டார். "காற்றைப் பார்த்திருக்கிறாயா? ஏன், உன் முதுகைப் பார்த்திருக்கிறாயா? இதனால் காற்று இல்லையென்றாகி விடுமா? அல்லது நீ முதுகில்லாதவனா?"

சுவாதிக்கு இந்தப் பதிலடிகள் பிடித்துப் போக, கூடவே சிரிப்பும் பிறந்தது.

அதை ரசித்தபடியே கதையைத் தொடர்ந்தார் சந்திரமோகன். "எப்பவாவது உனக்குக் கூடத் தோன்றியிருக்கலாம், எல்லா இடங்களிலும் கடவுள் இருந்தால் அவனுக்கு உருவம் எதற்கு, கோவில் எதற்குன்னு? இல்லையா?"

பல்கலைக் கழக ஆராய்ச்சித் தாள்களில் கடைப்பிடிக்கப்படும் அதே உத்தி. 'சிலர் இப்படி ஒரு சந்தேகத்தைக் கிளப்பலாம்' என்று ஆராய்ச்சியாளர் கேட்டால் "இதற்கு ஒரு நல்ல விடை என்னிடம் தயாராக இருக்கிறது. எனவே நானே இந்தக் கேள்வியை எழுப்புகிறேன்" எனும் சாமர்த்தியம்.

சுவாதி அறியாமையுடன் பார்க்க, "கடவுளுக்கு ஒரு உருவம் கொடுத்தால்தான் பலராலும் மனதை அந்த உருவத்தின்மீது நிலைப்படுத்தி தியானிக்க முடியும்.



"ஐயோ... இந்த அநியாயத்தை எங்கே போய் சொல்றது...!"

"ஏங்க இப்படி பதறீங்க?"

" 'ஐ.எஸ்.ஐ. ஏஜெண்ட் ஆபீஸ்' னு பாகிஸ்தான்காரங்க டெல்லியில புதுசா ஓர் ஆபீஸ் திறந்திருக்காங்க!"

— புளியறை கணேசன்

அதனால்தான் கடவுளைச் சிலையாகவும், ஓவியமாகவும் வடித்திருக்கிறார்கள்."

கண இடைவெளியுமின்றிக் கேட்டுவிட்டாள் சுவாதி. "அப்ப ஏம்ப்பா அம்மாவின் போட்டோவைக்கூட எனக்குக் காட்டவே மாட்டேங்கறீங்க?"

சந்துரு அதிர்ந்தார். தான் சொல்ல வந்த விஷயத்தை இவ்வளவு புத்திசாலித்தனமாக தனக்கெதிராக மகள் திருப்புவாளென்பது அவர் எதிர்பாராதது. இப்படித் தயாரற்ற தருணங்களில் இந்தப் பெண்ணிடம் திடீரென்று புத்திசாலித்தனமும் அடங்காமையும் பீறிட்டு விடுகின்றன.

"தெய்வத்தை நினைக்கத்தான் உருவ வழிபாடு. ஆனால் உங்கம்மாவை மறந்து விடுவதுதான் நல்லது. நீயோ நானோ நினைக்கவும் தகுதியில்லாதவ அவ" என்றவர், சற்றே கடுமையுடன் "கதை போதும். சாப்பிடலாம்" என்றபடி எழுந்து விட்டார்.

'இப்படியே தன்னை அடக்கி விடுகிறார்' கண்களில் உருவான நீரை உள்ளங் கையால் அகற்றியபடி சமையலறைக்குள் சென்றாள். "முன்னா தட்டு எடுத்து வைடா" என்று குரலெழுப்பினாள்.

அவ்வப்போது கொஞ்சம் ஒத்துழையாமை இயக்கத்தில் ஈடுபடுவது முன்னாவுக்கு வழக்கம்தான். என்றாலும் 'டா' போட்டுக் கூப்பிடும்போது சுவாதி அக்காவுக்குக் கோபமோ வருத்தமோ மிக அதிகமாக உள்ளது என்பதைப் புரிந்துகொண்டபடியால் வேகமாகச் சென்று தட்டுக்களை எடுத்து வைத்தான் முன்னா.

வங்கிக் கிளை நெருங்கியது. "இதுதான். இங்கே நிறுத்திக்கோ" என்றான் கேஷவ். ஆட்டோ நிற்குமுன்பே சுவாதி குதித்தாள்.

சரியாக வாரப்படாத கூந்தல் அல்லது கண்களில் தோன்றிய கலக்கம் அல்லது படபடப்பான நடை - ஏதோ ஒன்று வங்கி ஊழியர்களுக்கு உணர்த்தியிருக்க வேண்டும். தானாகவே "லாக்கர் ரூம் கீழே இருக்கு" என்றனர் மூன்று பேர் ஒருமித்து.

பாதாள அறைக்குள் சுவாதி நுழைந்த போது வங்கி மேலாளர் யாரிடமோ சொல்லிக்கொண்டிருந்தார். "லாக்கரைத் திறந்தவுடனேயே மனிதர் மயக்கம் போட்டுட்டார். இந்த நிலையில் இவரை மருத்துவமனைக்கு அனுப்பினேன்னு வச்சுக்குங்க, நாளைக்கே இவர் வந்து "லாக்கரில் அந்த நகையை வச்சிருந்தேன். இந்தப் பத்திரத்தைப் பத்திரப்படுத்தியிருந்தேன்"னு சொன்



" ஒரு நபருக்கு ஒரு பதவிங்கறதை என்னோட வீட்டுக்காரர் தப்பா புரிஞ்சுக்கிட்டார்டி!"

"என்ன சொல்றார்?"

" 'புருஷன் பதவி மட்டுந்தான் வச்சுக்குவேன்... சமையல்காரன் பதவியை உதறிடப்போறேன்'கறார்!"

- புளியரை கணேசன்

னால் நாங்க என்ன செய்ய? அதுதான் டாக்டரை இங்கேயே வரவழைச்சு, நடந்ததுக்கு சாட்சிக்காகவும் இரண்டு பேரை ஏற்பாடு செய்துட்டேன்."

அப்பா படுத்துக்கொண்டிருந்தார். வியர்த்திருந்தது. கண்களை மூடிக்கொண்டிருந்தார். "லேசான மாரடைப்பு. நர்ஸிங் ஹோமில் சேர்த்து விடுவதுதான் நல்லது" என்று டாக்டர் கூறினார்.

லாக்கரைப் பூட்டி சாவியை சுவாதியிடம் கொடுத்தார் மேனேஜர், "நீ அவர் பெண் சுவாதிதானே?" என்று கேட்டு உறுதி செய்து கொண்டு. "நல்லவேளை, உங்க ரெண்டு பேர் பேரிலும் சேர்ந்துதான் லாக்கர் கணக்கைத் துவக்கியிருக்கார்" என்றார் முணுமுணுப்பாக.

நர்ஸிங் ஹோமுக்கு ஆளனுப்பி, அங்கிருந்து அனுப்பப்பட்ட ஆம்புலன்ஸில் அவரை மருத்துவமனைப் பணியாட்கள் ஏற்றிக் கொண்டிருந்தனர். மனதைச் சற்றே திடப்படுத்திக்கொண்டு லாக்கர் அறையிலிருந்து சுவாதி கிளம்பியபோதுதான் கவனித்தாள், கீழே விழுந்திருந்த ஒரு கடிதத்தை. அப்பாவுக்கு வந்ததுதான். லாக்கருக்குள் அதை வைத்திருக்கிறார் அப்பா. ஏன்? சென்னையிலிருந்து கோமளவல்லி என்ற பெண்மணி அதை அனுப்பியதாக அறிவித்தது கடித உறை.

(தொடர்ந்து பறக்கும்)



காதலர்தின
சிறப்புச்
சிறுகதை

ஏளனம்

அவர்கள் அந்த இருட்டு ரெஸ்டாரன்ட்டின் மூலையில் இருவர் மட்டும் உட்கார முடிகிற டேபிளில் அமர்ந்திருந்தார்கள். சுற்றி நிகழ்வது எதுவும் தெரியாதபடி கறுப்புக் கண்ணாடி அணிந்த ஜன்னல்கள் மறைக்க, மெலிதான ஏஸியின் கும்ம்ம்ம். மேஜை மேல் ஒரு ரோஜாப் பூ வைத்திருக்க, அது நிஜமா, செயற்கையா என்று யோசிக்கிற நிலையில் இருவருமே இல்லை. எங்கோ மெலிதாய் இசை கேட்டுக் கொண்டிருக்க, லேசாய் மெழுகுவர்த்தியளவு வெளிச்சம் மட்டும் விரவியிருந்தது. சர்வர் அநாயாசமாய் சுமந்து வந்தவற்றை அழகாக அடுக்கிவிட்டு விலகிக் கொள்ள, பாலா ஒரு வெங்காயத்தை எடுத்துக் கடித்து விட்டு ஜில் தண்ணீரை லேசாய் ருசி பார்த்தான்.

ப்ரியாதான் முதலில் பேசினாள்.

"பாலா... உன்கிட்டே ஒண்ணு கேட்கணும்."

"ம்ம்... எதிர்பார்த்தேன்" பாலா சிரித்தான்.

"சிரிக்காதே பாலா, ஐ'ம் ஸீரியஸ்!"

"நீ ஸீரியஸா இருக்கிறதுக்காக நான் சிரிக்கக் கூடாதுன்னு சொன்னா எப்படிம்மா?" சிரிப்பை நிறுத்தவில்லை அவன்.

"நான் சொல்லி எது கேட்டிருக்கே நீ?" அவள் முகம் திருப்பிக் கொள்ள நினைத்த போது பாலா கைகட்டி, முகத்தை பாவமாய் செய்து கொண்டு, 'ஸாரி மேடம், சொல்லுங்க, என்ன கேட்கணும்?'' என்றதற்கு அவள் சிரித்து விட்டாள்.

"இப்படிப் பேசிப் பேசிதான் என்னை ஏமாத்தறே!"

பாலா இன்னொரு வெங்காயம் எடுத்துக் கொண்டான். "அது சரி... ஏதோ கேட்கணும்னு சொன்னியே, என்ன சொல்லு?"

ப்ரியா அப்போதுதான் நினைவு வந்தது போல மீண்டும் கோபமானாள். "நேத்து ராத்திரி எங்கே போயிருந்தே?"

பாலா ஒரு விநாடி தயங்கினான். பிறகு மெல்ல, "சரியா ஞாபகம் இல்லை" என்றான்.

"நான் சொல்லட்டுமா? ஃப்ரண்ட்ஸோட சேர்ந்து பாருக்கு போய் எக்கச்சக்கமா குடிச்சுட்டு பைக்ல திரும்பி வந்திருக்கே. வரும் போது கீழே விழுந்து தலையிலே லேசா காயம். ஹாஸ்டல் வாட்ச்மேனோட பெரிய சண்டை. ஹாஸ்டலுக்குள்ளே போய் ஒரு மணி நேரம் சரியான அதம் பண்ணியிருக்கே. பலரும் கதவுகளை எட்டி உதைச்சே சேதம் பண்ணியிருக்கே. ஒருத்தரைத் தூங்க விடலை. எல்லாரையும் கண்டபடி கெட்ட வார்த்தைகள்ல திட்டிட்டு, மொட்டை மாடியிலே, வெறுந்தரையிலே படுத்துத் தூங்கியிருக்கே. சரிதானா?"

பாலா லேசான ஆச்சர்யத்துடன் அவளைப் பார்த்தான். ஆனாலும் ஒன்றும் பேசவில்லை.

"சொல்லு பாலா, நான் சொன்னது சரிதானா?"

"..............."

"நிஜம் சில சமயம் கசக்கும்னு சொல்வாங்க. இதெல்லாம் பொய்யா இருக்கக் கூடாதான்னு எனக்குள்ளேயும் ஒரு நப்பாசை இருந்தது. இப்போ உன்னோட பதில் சொல்ல முடியாத முகத்தைப் பார்த்ததும் எல்லாம் தெளிவாயாச்சு."

"ப்ரியா..." ஏதோ பேச வந்தவனைத் தொடர விடாமல் அவளே பேசினாள். "இதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும்னு நினைக்கறியா? ஹரி சொன்னான். நீ எப்படி நினைக்கிறியோ தெரியலை. ஆனா எனக்கு இது ரொம்ப வெட்கமா இருக்கு பாலா!

லாவண்யா

அவன் வந்து இதைச் சொன்னப்போ, என்னாலே அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே முடியலை. பூமிக்குள்ளே அப்படியே புதைஞ்சு போயிட மாட்டோமான்னு இருந்தது."

"ப்ரியா, நான் சொல்றதைக் கொஞ்சம் கேளு, ப்ளீஸ்."

"என்னை முழுசா பேச விடு பாலா! நான் இன்னைக்கு பேசலைன்னா அப்புறம் என்னைக்கும் பேச முடியாம போயிடுமோன்னு பயமா இருக்கு. கள்ளச் சாராயம் குடிச்சுட்டு தெருவிலே விழுந்து கிடக்கறவனுக்கும் உனக்கும் இன்னிக்கு பெரிய வித்தியாசம் என்னன்னு கொஞ்சம் யோசிச்சுப் பார்த்தியா? என்ன, அவன் பாட்டிலோட குடிக்கறான். நீ கிளாஸ்ல ஊத்தி அடிக்கிறே. அவன் அழுக்கு லுங்கி கட்டியிருக்கான், நீ பேண்ட் சட்டை. அவ்ளோதான் வித்தியாசம். உனக்கு அறிவுரை சொன்னா பிடிக்காதுன்னு தெரியும். ஆனா, எனக்கு வேற வழி தெரியலை. வேண்டாம் பாலா! நான் சொல்றதைக் கேளு. இது ரொம்ப தப்பு. இது விஷம். உன்னை மட்டும் இல்லாம, சுத்தியிருக்கிற, உன்னையே நம்பியிருக்கிற உறவுகளையும், நீ நேசிக்கிறவங்களையும் கொஞ்சம் கொஞ்சமா கொல்ற ஸ்லோ பாய்ஸன். இதை ஒரு கொடூரமான கனவா நினைச்சு மறந்துடு பாலா. நேத்து ராத்திரியோட எல்லாம் முடிஞ்சதா இருக்கட்டும். ப்ளீஸ்."

எவ்வளவோ முயன்றும் முடியாமல், கடைசி வரிகளில் அவளுக்கு அழுகை வந்து விட்டது. மேஜை மேலிருந்த கைக்குட்டை எடுத்து அவசரமாய் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சில நிமிடங்களுக்கு ஒரு நீளமான அமைதி இருவரிடையே நிலவியது இருவருக்குமே சற்றே நிம்மதியாய் இருந்தது.

"ப்ரியா, பேசி முடிச்சாச்சா? இல்லை இன்னும் எதுனா அட்வைஸ் பாக்கியிருக்கா?"

அவள் எதுவும் பேசவில்லை.

"எனக்கு சந்தோஷப்படறதா, இல்லை வருத்தப்படறதான்னு தெரியலைம்மா. ஒரு பக்கம், என் மேலே இத்தனை அக்கறையா, நான் எப்பவும் நல்லாயிருக்கணும்னு நினைக்கிற ஒருத்தர் இருக்கிறதை நினைச்சா சந்தோஷமா இருக்கு. கொஞ்சம் பெருமையாக் கூட உணர்றேன். ஆனா, இன்னொரு பக்கம், என் காதலி என்னை இன்னும் சரியாப் புரிஞ்சுக்கலையேன்னு நினைக்க, நினைக்க ரொம்ப கஷ்டமா இருக்கு."

"பாலா.." ஒரு கையை நீட்டி அவள் பேச வந்ததைத் தடுத்தான். "நீ பேச வந்ததையெல்லாம் பேசிட்டே. நானும் சிலது சொல்லணும். தயவுசெஞ்சு அதுவரைக்கும் என்னை டிஸ்டர்ப் பண்ணாதே."

"என்ன வார்த்தையெல்லாம் சொல்லிட்டேன்னு யோசிச்சுப் பாரு ப்ரியா! சாக்கடையிலே புரள்ற குடிகாரனோடவெல்லாம் என்னை ஒப்பிட்டுப் பேசிட்டே. பேசினது எல்லாமே குறைவில்லாத அன்பாலே, காதலாலே வந்த வார்த்தைகள்னு எனக்குத் தெரியும்.

"ஒரு விஷயம் நீ தெளிவா புரிஞ்சுக்கணும் ப்ரியா! நான் ஆல்கஹாலுக்கு அடிமை இல்லை. ஆகவும் மாட்டேன். அது எப்படிப்பட்ட விஷயம், எனக்கு அது என்ன பண்ணும்னு எனக்குத் தெளிவா தெரியும். மனசுக்குள்ளே கட்டுப்பாடு இருக்கிறவனை எந்தப் பழக்கமும் எதுவும் பண்ணிட முடியாது. நேத்து பசங்களோட சும்மா போனேன். இப்படி குடிக்கறானுங்களே, இதிலே அப்படி என்னதான் இருக்குன்னு பார்ப்போமேன்னு கொஞ்சம் குடிச்சேன்; அவ்வளவுதான். நீ நினைக்கிற மாதிரி தளும்பத் தளும்ப இல்லை! நேத்து யார் யார் கதவைத் தட்டி கலாட்டா பண்ணினேன், என்னென்ன சொல்லி கத்தினேன் எல்லாம் வரிசையா சொல்லட்டுமா? சும்மா குடிச்சேன், சும்மா கத்தினேன். ரொம்ப நாளா மொட்டை மாடியிலே தூங்கணும்னு ஆசை, போய் தூங்கிட்டேன். அவ்வளவுதான்.

"நான் சொல்றதெல்லாம் உண்மைன்னு



''நேற்று கிரிக்கெட்டில் பெட் கட்டியதில் 1000 ரூபாய் நஷ்டம்.''

''அது எப்படி?''

''இந்தியா ஜெயிக்கும் என்று 500 ரூபாய் பந்தயம் கட்டினேன். ஆனால் தோற்று விட்டது.''

'':500 ரூபாய் தானே தோற்றாய். 1000 என்றாயே?''

''இரவு 'ஹைலைட்ஸ்' காட்டும்போது மறுபடியும் 500 ரூபாய் கட்டினேன்!''

(– இன்டர் நெட்டிலிருந்து இறக்கிய ஜோக்)

ராஜலக்ஷ்மி முரளீதரன்

உன்கிட்டே சத்தியம் பண்ணவோ, சாட்சி கூட்டிட்டு வந்து நிருபிக்கவோ நான் தயாராயில்லை. நம்பறதும், நம்பாம இருக்கிறதும் உன் இஷ்டம். ஆனா ஒண்ணு மட்டும் ஞாபகம் வெச்சுக்கோ. காதலுக்கு minimum qualificationனே நம்பிக்கைதானே."

தண்ணீர் தம்ளர் எடுத்து பாதி தொண்டைக்கும், பாதி உடம்பிலுமாய் ஊற்றிக் கொண்டான். அவன் கைகள் நடுங்குவது அவனுக்கே தெரிந்தது.

ப்ரியா வேறு ஏதோ திசையில் பார்த்துக் கொண்டே பேசினாள்.

"கொலைகாரனுக்குக் கூட அவன் குற்றத்தை நியாயப் படுத்த எதுனா காரணம் இருக்கும். எல்லோரும், எல்லா கெட்ட பழக்கத்தையும் இப்படித்தான் ஆரம்பிக்கிறாங்க."

பாலா கோபமாய் அவள் முகம் தொட்டுத் திருப்பினான். "ஏய்... எது பேசறதாயிருந்தாலும் நேரே பேசு, என்கிட்டே பேசு. யார்கிட்டயோ பேசற மாதிரி முணு முணுக்காதே."

அவள் சுதாரித்துக் கொண்டு, "பின்னே என்ன பாலா? எவ்வளவு அக்கறையா உனக்காகப் பேசிக்கிட்டிருக்கேன். அதைக் கொஞ்சம் கூட மதிக்காம ஏதேதோ சொல்லி சமாளிக்கத்தான் பார்க்கறியே தவிர, 'நான் செஞ்சது தப்பு. இனிமே செய்ய மாட்டேன். ஸாரி'ன்னு ஒரு வார்த்தை சொல்லத் தோணுதா உனக்கு? ஏதோ அட்வைஸ் செஞ்சது என் தப்புங்கிற மாதிரி இருக்கு உன் பேச்சு..." இதையெல்லாம் யோசிக்கிறப்போ, ஏன்டா... பேச்சை பாதியில் நிறுத்திக் கொண்டாள்.

"சொல்லு ப்ரியா, சொல்லு! ஏன் நிறுத்திட்டே? தைரியமா சொல்லிடு. என்ன சொல்ல வந்தே? இதையெல்லாம் யோசிக்கிறப்போ, ஏன்டா இவனை காதலிச்சோம்னு தோணுது, இல்லையா?"

"..................."

உன்னைப் பொறுத்தவரை காதலன் என்கிறவன் நீ சொல்றதைத் தட்டாம கேட்கணும். நீ அட்வைஸ் பண்ணதும், 'ஸாரி... நான் தப்புப் பண்ணிட்டேன். என்னை மன்னிச்சுடு'ன்னு சொல்லிட்டு, அந்த விநாடியே அந்தப் பழக்கத்தை விட்டுடணும். நாலு பேர்கிட்டே, 'நான் குடிச்சு சீரழிஞ்சு போக

ரயில் நிலையத்திலிருந்து வெளியில் வந்த அந்தப் பெண்மணியிடம் டிக்கெட் பரிசோதகர் டிக்கெட் கேட்டபோதுதான், அவர் டிக்கெட் வாங்கவில்லை என்பது தெரிந்தது. அவசரத்தில் டிக்கெட் வாங்க மறந்து விட்ட அந்தப் பெண்மணி, விதிப்படி பத்து பவுண்டு அபராதம் செலுத்தினார். அந்தப் பெண்மணியின் பெயர் செரி. பிரிட்டிஷ் பிரதமர் டோனி பிளேயரின் மனைவி!



– சி.எம்.

இருந்தேன். இவதான் என்னைக் காப்பாத்தினா'ன்னு பெருமையா சொல்லணும். ஒரு மாதிரி நாடகத்தனமான காதல்தான் நீ எதிர்பார்க்கிறது. இல்லையா? நான் இப்படியெல்லாம் செஞ்சிருந்தேன்னா உடனே உனக்கு உச்சிகுளிர்ந்திருக்கும். என் பக்க நியாயத்தை நாலு வார்த்தை பேசினதும், வந்த வழியே திரும்பிப் போகலாமான்னு யோசிக்கத் தோணுது, இல்லையா?

"பாலா, I am sorry" தவறு செய்து விட்ட முகபாவனையுடன் நிமிர்ந்தவளை ஆறுதல் படுத்தி, அவள் கண்ணீரைத் துடைத்து விட்டான்.

"நீ ஸாரி கேட்க வேண்டிய அவசியமே இல்லை ப்ரியா! இது நல்லதுக்குத்தான். என்னோட பலம், பலவீனம் உனக்கும், உன்னோட ப்ளஸ், மைனஸ் எனக்கும் புரியறது ரொம்ப அவசியம். இவ்வளவுதான் இவன், இது நடந்தா சந்தோஷப்படுவான். இப்படி ஆனா துக்கப்படுவான், இப்படிப் பேசினா கோபப்படுவான். இந்த விஷயங்கள் பிடிக்காது – எல்லாமே புரியணும். இப்பவே புரியணும்."

ஒரு சிறு இடைவெளி விட்டு, கமறுகிற குரலில், "தெளிவில்லாம காதலிக்கிறதை விட, தெளிவா பிரிஞ்சிடறது மேல்!" என்றான்.

அவள் இன்னும் நிமிரவில்லை. பாலா எழுந்து கொண்டான். "எழுந்திரும்மா, போலாம்" இருவரும் பேசாமல் மௌனமாய் நடந்தார்கள். வெளிச்சம் தூரே தெரிந்தது.



இது வரை கண்டிராத மாயா ஜால தந்திரக் காட்சிகள் நிறைந்த ஜாலியான தொடர்.

சித்தர் மலையில் 2000 ஆண்டுகளாக வாழும் ஜிங்கலன் என்ற சித்தர் கர்ணனின் கவசத்தையும், ஆயுதங்களையும் தகுந்த ஒருவரிடம் ஒப்படைப்பதற்காக பாதுகாத்து வருகிறார். மூன்று குள்ளர்களும் அந்த மலையில் வசிக்கிறனர். அருகில் உள்ள மிதிலாபுரத்தில் மாரகன் என்ற மந்திரவாதி தனது மந்திர சக்தியினால் மக்களை துன்புறுத்தி வருகிறான். அவனிடம் பிடிபடும் ஒரு குள்ளன் உயிருக்குப் பயந்து சித்தரிடம் உள்ள கவசத்தைப் பற்றி அவனிடம் கூறிவிடுகிறான். அதைக் கைப்பற்ற வரும் மாரகனுக்கும், சித்தருக்கும் நடைபெறும் மந்திர தந்திரப் போரில், சித்தர் அருகில் உள்ள பாண்டவபுரத்தை சேர்ந்த அப்பாவி சுயம்புவால் காப்பாற்றப்படுகிறார். சுயம்புவின் நல்ல உள்ளத்தை அறிந்த சித்தர், அவனுக்கு மந்திர தந்திரங்கள் கற்றுக் கொடுப்பதுடன், கவசத்தையும் அளிக்கிறார். சுயம்பு கவசம் அணிந்த உடன் மறையும் 'மாயா' என்ற வீரனாகி அநீதியை எதிர்த்து தனது போராட்டத்தை தொடர்கிறான்.

சித்தர் மலைக்கு மூலிகைகள் பற்றி எழுத வந்த பத்திரிகை நிருபர் நிவேதிதா சுயம்புவின் அப்பாவித்தனத்தால் ஈர்க்கப்படுகிறாள். ஆனால் சுயம்புதான் மாயா என்று அறியாமல் மாயாவை நேசிக்கிறாள். நிவேதிதாவை நேசிக்கும் சுயம்பு தனது காதலை வெளிப்படுத்த முடியாமல் தவிக்கிறான். விடை சின்னத்திரையில்.

நடிப்பு : நாகேந்திர பிரசாத் (பிரபு தேவாவின் தம்பி) ஸ்வர்ணா, காந்திமதி.

இயக்கம் : பி.ஆர். விஜயலக்ஷ்மி

vijay

புதுமை என்றென்றும்

விஜய் டி.வியில் அக். 27 முதல் ஒவ்வொரு புதன்கிழமையும் இரவு 8.00 மணிக்கு

- ADVT -





கூடி வழிபட ஒரு கோயில்!

ஏழு கோடி ரூபாய் செலவில் ஐந்து ஆண்டுகளில் கட்டி முடிக்கப்பட்ட ஸ்ரீ ராமகிருஷ்ணர் சமய சமரசக் கோவிலுக்கு பிப்ரவரி 7 அன்று மஹாகும்பாபிஷேகம்! சென்னை மயிலையில் ராமகிருஷ்ணமடத்தின் வளாகத்திற்குள் கம்பீரமாகக் காட்சியளிக்கும் இந்தக் கோவிலின் கர்ப்பகிரகத்தில் மலர்ந்த தாமரையின் நடுவே ஏழு அடி உயரம் கொண்ட பளிங்குக் கல்லினால் ஆன பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் அமர்ந்திருக்கிறார். சுமார் ஏழாயிரம் அடி பரப்பளவில் காட்சியளிக்கும் இந்தப் பிரார்த்தனைக் கூடத்தின் உள்ளே ஆயிரம் பேர் உட்கார்ந்து கொள்ளலாம்!

ராமகிருஷ்ணருக்கான எந்த ஆலயமாக இருந்தாலும் அதற்கு அடி நாதமாக அவர்கள் எடுத்துக் கொள்வது பேலூரில் உள்ள ராமகிருஷ்ணர் ஆலயத்தைத்தான். காரணம் அதை வடிவமைத்தது சாட்சாத் விவேகானந்தர்தான். (அவரது திட்டத்தை நனவாக்கியவர் ஸ்வாமி விஞ்ஞானந்தா.) அதேபோல் பி.ஜி. பால் என்பவரும் அவருடைய மகன்களும்தான் ராமகிருஷ்ணரின் உருவச் சிலையை மடத்தின் எல்லா கோயில்களிலும் உருவாக்குபவர்களாம்.

எதற்கு இத்தனை செலவில் இப்போது இப்படி ஒரு கோவில் என்று சென்னை ராமகிருஷ்ணா மடத்தின் தலைவர் கௌதமானந்தரைக் கேட்டோம்.

"பெரும்பாலான கோவில்களில் தனித்தனியாகச் சென்று இறைவனை வணங்குகிறார்களே தவிர, கூட்டு வழிபாடு என்பது அரிதாகவே இருக்கிறது. இந்த ஆலயம் முக்கியமாக அதற்காகதான். இங்கு அர்ச்சனை, தீபாராதனை போன்றவையெல்லாம் கிடையாது. தினமும் மாலை நாற்பது நிமிடங்களுக்கு பஞ்ச ஆரத்தி என்பதை பகவானுக்கு காட்டு



உண்ணாவிரதம் எப்படியிருப்பார்கள்?

சாப்பிடாமலிருப்பார்கள். ஷாமியானா போட்டு அமர்ந்திருப்பார்கள். ஜெயலலிதா வாயிருந்தால் ஏர்–கூலர், திண்டுகள் சகிதம் சுகமாகவுமிருப்பார்.

ஒரு மாறுதலுக்கு, அண்ணாமலை பல்கலைக் கழக மருத்துவக் கல்லூரி மாண வர்கள் நின்றுகொண்டே ஒருநாள் உண்ணா விரதம் இருந்திருக்கிறார்கள்.

எதற்கு?

ரயில்கள் உள்ள 'அன்ரிஸர்வ்டு' பெட்டி களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தச் சொல்லி பலமுறை கேட்டும் ரயில்வே நிர்வா கம் செவி சாய்க்காததால்!

'அன்ரிஸர்வ்டு' பெட்டிகளில் ஜன நெரிசல் அதிகம். பாத்ரூம் நாறும். நிறைய சுகாதாரக் கேடுகள்; தொற்று நோய் அபாயம். "இதைத் தவிர்க்கவே அதிகப் பெட்டிகள் கோரிப் போராடுகிறோம்" என்கிறார்கள், மாணவர்கள்.

வோம். துணி, சாமரம், பூ, சங்கு தீர்த்தம், விளக்கு போன்றவற்றை பஞ்சபூதங்களாக எண்ணி அந்த நேரத்தில் வணங்குவோம். அவ்வளவுதான்.

"சிலர் இவ்வளவு செலவழித்து ஓர் ஆலயம் எழுப்புவதற்கு பதில் ஏழைகளுக் காக ஏதாவது செய்யலாமே என்று கேட் கிறார்கள். ஏற்கெனவே இலவச மருத்துவ மனை, நூலகம் போன்றவற்றை நாங்கள் நடத்தி வருவது ஒருபுறமிருக்க, இதுபோன்ற தியான மண்டபங்களில் கிடைக்கும் மனநிம் மதியும், இங்கு தினமும் நடக்கவிருக்கும் ராமகிருஷ்ணரின் அமுத மொழிகள் தொடர்பான உபன்யாசங்களைக் கேட் பதன் மூலம் உண்டாகும் நல்லொழுக்க விதைகளையும், ஆளுக்கு நான்கு பேர் என்கிற விதத்தில் பிறரிடம் பகிர்ந்து கொண் டாலே போதும், சமுதாயத்திற்கு லாபம் தானே?"


"கும்பாபிஷேகத்தையொட்டி பல்வேறு ராமகிருஷ்ணா மடங்களைச் சேர்ந்த 450 சன்யாசிகள் இங்கு கூடுகிறார்கள். பௌத் தர்களிடையே மட்டும்தான் இவ்வளவு பெரிய எண்ணிக்கை கூடியது வழக்கம். இப்போது அந்தப் பெருமை எங்களுக்குக் கிடைத்துள்ளது" என்றார் சுவாமி கமலாத் மானந்தா.

கோவில் கருவறையின் இருபுறங்களிலும் சாரதா தேவி, விவேகானந்தர் ஆகியோரின் திருவுருவப் படங்கள். கட்டடத்தின் பல சிறப்புகளை நமக்கு விளக்கினார் இந்தக் கோவிலுக்கு வடிவம் தந்த வெங்கட்ரமணா ரெட்டி. ஆந்திர அரசின் நிர்மாண இயக் குனராக ஸ்ரீசைலம், அஹோபிலம், பத்ரிநாத் ஆகிய பல கோவில்களின் திருப்பணிகளில் முக்கியப் பங்கு வகித்தவர் இவர்.

முகமண்டபத்தின் பிரதான கதவின் இரண்டு பகுதிகளிலும் பல கலை நுணுக் கங்கள். இவற்றில் இந்து, இஸ்லாம், கிறிஸ் தவம், பௌத்தம், ஜைனம், சீக்கியம் ஆகிய மதச் சின்னங்கள் தென்படுகின்றன. அஜந்தா குகைக் கோயிலின் முகப்பை மாதிரியாகக் கொண்டு ஜன்னல் அமைந் துள்ளது. கோவிலின் தரைப் பகுதி ரோமில் உள்ள தூய பீட்டர் மாதா கோவிலின் தரை அமைப்பு போன்றதாம்! குஜராத், ராஜஸ் தான் மாநிலங்களில் உள்ள ஜெயின் சமயக் கோவில்களில் காணப்படும் தூண்களில் உள்ள கலை நுணுக்கங்கள் இங்குள்ள தூண் களிலும் உள்ளன. விஜய நகரப் பேரரசு, மொகலாயப் பேரரசு காலகட்டங்களின் வேலைப்பாடுகளை உணர்த்தும் பகுதிகளும் உண்டு.

கும்பாபிஷேகத்தையொட்டி, ராமகிருஷ் ணரின் அமுத மொழிகளும், உபதேசங்களும் மலிவு விலையில் வெளியிடப்பட உள்ளன. சிறப்பு தபால் உறை வெளியீட்டு விழாவும் உண்டு!

— ஜி.எஸ்.எஸ்.



வாடகைக்கு வாங்கிய வீடியோ கேசட்டை ஜனவரி 1ந் தேதி திருப்பித் தரச் சென்ற ஒரு நியூயார்க்வாசிக்கு பயங்கர ஷாக். 100 வருடம் தாமதமாகத் திருப்பிக் கொடுத்ததாக கடையின் கம்ப்யூட்டர் அவருக்கு அபராதமாகப் போட்ட தொகை சுமார் 40,15,000 ரூபாய்! எல்லாம் Y2k கோளாறுதான்!

– ஆதாரம்: எகனாமிக் டைம்ஸ்
தகவல்: ராஜலட்சுமி முரளீதர்



அண்ணா நகரைச் சேர்ந்த ரியல் எஸ்டேட் அதிபர் கிருஷ்ணமூர்த்தி, இன்று தமிழக அரசியலைக் கலக்கிக் கொண்டிருக்கிறார்!

எஸ்.கே. எனப்படும் கிருஷ்ணமூர்த்தி அ.தி.மு.க., ம.தி.மு.க., பி.ஜே.பி., தி.மு.க. என்று ஸீஸனுக்கு ஏற்ப மாறி, மாறி தொடர்பு வைத்திருப்பவர். தலைவர்களின் பிறந்த நாளின் போது மாலைப் பத்திரிகைகளில் தாராளமாக விளம்பரங்கள் அள்ளி விடுபவர். அரசியல் செல்வாக்கு காரணமாக, 'பார்ட் டைம் தொழிலாக'க் கட்டைப் பஞ்சாயத்தும் உண்டு.

இந்த எஸ்.கே., நிதி நிறுவன அதிபர் ஒருவரிடம் வீட்டை அடகு வைத்து பத்து லட்சம் வாங்கினார்; ஆனால் அடகு வைத்த வீட்டை, கடன் தந்தவருக்குத் தெரியாமலேயே மலேசியாவைச் சேர்ந்த ஒருவருக்கு விற்று விட்டார் என்பது புகார். கடன் தந்த அந்த நிதி நிறுவன அதிபர் இதைப் பற்றி போலீஸுக்குச் சொல்லவே, விவகாரம் சூடுபிடிக்கத் துவங்கியது. போலீஸ் அதிரடியாக எஸ்.கேயின் வீடியோ கடையைச் சோதனை போட்ட போது, மூன்று புகைப் படங்கள் போலீஸுக்குக் கிடைத்தன. பூகம்பத்தைக் கிளப்பின. நீதிபதி தங்கராஜ் (டான்ஸி வழக்கில் ஜெ.வை விடுவித்தாரே! அவரேதான்) எஸ்.கே. மற்றும், ஓய்வுபெற்ற போலீஸ் அதிகாரி செல்வரத்னம், ஒரு வழக்கறிஞர் ஆகியோருடன் மலேசியா மற்றும் சிங்கப்பூர் போனபோது எடுத்த படங்கள்தான் அவை.

எஸ்.கே. விவகாரம்; ஏனிந்தத் தடுமாற்றம்?

இப்படங்கள் கிடைத்ததும் விவகாரம் சூடு பிடித்தது. ஒரு சர்ச்சைக்குரிய நபருடன் நீதிபதிக்குத் தொடர்பு இருப்பது அதிர்ச்சியை உண்டாக்கியது.

"டான்ஸி வழக்கில் எப்படிப்பட்ட தீர்ப்பு வரும் என்பதை மோப்பம் பிடிக்கத் தவறிய போலீஸ், ஆட்சியாளர்களிடம் நன்றாக டோஸ் வாங்கியது. அதன் காரணமாகவே இந்த விவகாரத்தில் முந்திரிக் கொட்டைத் தனமாய் போட்டோக்களை வெளியிட்டு, ஆளும் கட்சியினருக்குத் தெம்பூட்டப் பார்த்தது. ஆனால், ''இது பூமராங் ஆகும் வாய்ப்பும் இருக்கிறது'' என்றார் ஆளும் கட்சிக்கு வேண்டிய ஒரு மூத்த பத்திரிகையாளர்.



"இதுபோன்ற படங்களை வெளியிட்டு நீதித்துறையைப் பயமுறுத்தி ஜெ.வுக்கு எதிரான தீர்ப்பைப் பெற ஆளும் கட்சி முயற்சிக்கிறது'' என்று சொல்கிறார்கள் ஜெ.வின் தோழமைக் கட்சித் தலைவர்கள். எது எப்படியோ, போலீஸ் இந்தப் படங்களை அவசரப்பட்டு வெளியிட்டிருக்க வேண்டாம் என்பதே பரவலான அபிப்பிராயம்! காரணம், கோர்ட்டில் சொல்லப்படும் தீர்ப்பைக் கொச்சைப்படுத்த ஜெ.வுக்கு ஒரு வாய்ப்பாக இந்த விவகாரம் அமைந்து விட்டது என்பதுதான்.

ஆனால் ஜெ. பத்திரிகையாளர் கூட்டத்தில் கலைஞர் மற்றும் வைகோவுடன் எஸ்.கே இருக்கும் படத்தை வெளியிட்டிருக்கிறார். அவரது நோக்கம் நமக்குப் புரிகிறது. எஸ்.கே. நீதிபதியின் நண்பர் மட்டுமல்ல, தி.மு.க., ம.தி.மு.க தலைமைகளின் நண்பரும் கூட என்று நிரூபிக்க முயன்றிருக்கிறார்.

இவ் விஷயத்தில் ஆளும் கட்சியின் தலைமை கொஞ்சம் நிதானத்தைக் காட்டியிருக்கலாம் என்கிறார்கள் நடுநிலையாளர்கள்.

— கௌசி



ஸ்மைல்

"குருக்களே! என்ன இன்னிக்கு முருகனுக்கு ஸ்பெஷல் அலங்காரம்?"

"வேலன்'ஸ் டே'ன்னு சொன்னாங்களே!"

"! ! !"

♥

"அந்த லேடீஸ் ஹாஸ்டல் வார்டன், காதலர் தினத்துக்கு சிறப்புச் சலுகை அறிவிச்சிருக்காங்க."

"என்னது?"

"அஞ்சு ரூபா கொடுத்தா நீ சொல்ற பொண்ணுகிட்ட கிரீட்டிங் கார்டை அவங்க சேர்த்துடுவாங்க. அதுவே, அம்பது ரூபா கொடுத்தா, பொண்ணே வெளில வந்து கார்டை வாங்கிக்க பர்மிட் பண்ணுவாங்களாம்."

♥

"மறுபடியும் மாநகராட்சி கூட்டத்துல என்ன தகராறு?"

"மக்கள் பிரச்னை ஏதுமில்லை. யாரோ, ஒரு பெண் கவுன்சிலருக்கு காதலர் தின கார்டு கொடுத்துட்டாங்களாம்."

♥

அரசியல்வாதி காதலன்:

"பல நாட்கள் நடத்திய உரத்த சிந்தனை, பல்வேறு தரப்பினரோடு நடத்திய விவாதம், விருப்பு-வெறுப்பற்று எதிர்காலம் பற்றி நான் தீர்மானித்திருக்கிற திட்டங்கள், இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் காதல் மீது நான் வைத்திருக்கும் நம்பிக்கை காரணமாக

ப்ளீஸ்!



இன்று உன் காதலை ஏற்றுக் கொள்கிறேன்!'''

''!!!????''

♥

"இந்த ஆளைக் காதலிக்கறதா, வேணா மான்னு டவுட்டா இருக்குடி."

"ஏன்?"

"லவ் லெட்டரை 'ஆஞ்சநேயர் துணை'ன்னு போட்டு ஆரம்பிக்கிறாரு."

♥

''வசனகர்த்தாவோட பொண்ணைக் காதலிச்சது தப்பாயிடுச்சு...''

''ஏன்...?''

''அவர் எழுதித்தர டயலாக்கைத்தான் பேசணும்னு கண்டிஷன் போடறார்...''

♥

''காதலர் தினத்துக்குப் புதுமையான போட்டியா...?''

''ஆமாம்! அன்னிக்கு முழுக்க சேர்ந்திருந்தும் சண்டை போடாத காதல் ஜோடிக்குப் பரிசு!''

♥

தாத்தா 1: "என் ஏழு வயசுப் பேரன் காதல் கதை சொல்லு தாத்தான்னு ரொம்ப நச்சு பண்றான்."

தாத்தா 2: "நீங்க வேற! என் ஏழரை வயசுப் பேரன் 'நான் எழுதிருக்கற லவ் ஸ்டோரியைப் படி தாத்தான்னு' ஒரே லொள்ளு!"

● எஸ். கதிரேசன், பேரணாம்பட்டு.

? 'மார்ச் மாதம் நடைபெற இருக்கும் நடிகர் சங்கத் தேர்தலுக்கு வோட்டுப் போட ஒரு நடிகை என்கிற முறையில் ஜெயலலிதா வருவார்' என ராதாரவி கூறியுள்ளாரே?

! அற்புதம்! அரசியலிலும் ஜெ. நடித்துக் கொண்டுதான் இருக்கிறார் என்பதை ராதாரவி எத்தனை அழகாகச் சொல்லியிருக்கிறார்!

● மு. ரா. பாலாஜி, ராபர்சன்பேட்டை. ❑

? இன்றைய அ.தி.மு.கவில் நம்பர் டூ வீரமணிதானே...?

! சத்தமாச் சொல்லாதீங்க; மூப்பனார் கோபிக்கக்கப் போறார்!

● க. நா. இராஜேஸ்வரன்,
மேட்டுப்பாளையம்.

? ரஜினிக்கு பத்மபூஷண் விருது வழங்கப் பட்டிருப்பது குறித்து...?

! மானாவாரியாக வாரி வழங்கப்படும் பத்மஸ்ரீ, பூஷண்கள், கலைமாமணிகள், டாக்டர் பட்டங்கள் போன்றவற்றுக்கு மதிப்பு என்றோ போய் விட்டது. ரஜினியின் மெய்யான, மேன்மையான விருது அவர் மக்களின் இதயங்களில் இடம்பெற்றிருப்பதுதான்.

இன்றைய அ.தி.மு.க.வில்



• மக்கள்பூஷண்!

● ஸ்ரீவித்யா காளிதாஸ்,
சிதம்பரம் – 2.

? டான்சி மற்றும் நிலக்கரி இறக்குமதி வழக்குகளில் ஜெ உயர்நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்ட பின்னரும் வாரிப் பணத்தை வாரி இறைத்து தமிழக அரசு மேல்முறையீடு செய்து வருவதாக சேடப்பட்டி முத்தையா குற்றம் சாட்டியுள்ளாரே?

! என்னய்யா செய்வது! சட்டத்தின் இடுக்குகளில் புகுந்து கோடி கோடியாகப் பணம் பண்ணுவோரை லட்ச லட்சமாகச் செலவழித்துத்தான் மடக்கி - ஒடுக்க வேண்டியிருக்கிறது.

● ஏ. முத்துலட்சுமி, மதுரை – 16.

? பா.ம.க., ராஜீவ் கொலையாளிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் ம.தி.மு.க. தனி ஈழம் வேண்டும் என்றும் கேட்கும் போது, நாங்கள் ராமர் கோவில் கட்டுவோம் எனக் கூறுவதில் எந்தத் தவறும் இல்லை என இல. கணேசன் கூறுகிறாரே...?

! இரண்டு தவறுகள் மூன்றாவது தவறை நியாயப்படுத்தி விடாது. இதை கணேசன் உணர வேண்டும். இடைத் தேர்தலில் தி.மு.க.வுக்கு உதவும்படியாகச் செயல்படாவிட்டாலும் உளறிக் கொட்டி இடைஞ்சல் பண்ணாமலாவது இருக்கலாம், கூட்டணிக் கட்சியினர்.

● ப. லக்ஷ்மி நரசிம்மன், கோவை – 11.

? இந்திய விமானக் கடத்தல்காரர்கள் ஆப்கனிஸ்தானில் இல்லை என்று தலிபான் அமைச்சர் வாகில் அகமது கூறியிருக்கிறாரே?

! 'ஆப்கானிஸ்தானில் இல்லை' என்கிறார் தலிபான் அமைச்சர். பாகிஸ்தானில் இல்லை என்கிறார் முஷாரஃப். பிறகு எங்கேதான் போனார்கள்? பயங்கரவாதிகளை வைத்து ஆடப்படும் இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டில் கண்ணைக் கட்டிக் கொண்டிருப்பவர்கள் முட்டிக் கொள்ளத்தான் போகிறார்கள்.

● மு. மாரிமுத்து, மதுரை – 3.

? திருச்சி – 2 சட்டசபை இடைத் தேர்வில் போட்டியிடும் அ.தி.மு.க. வேட்பாளர் ரத்தினவேலு, ப. சிதம்பரத்தைத் தாக்கிய வழக்

• நெடுஞ்செழியனுக்கு....



• ...பிறகு



• ரோஷம் எங்கே?



❑ ரூ. 50 பரிசு பெறுபவர் :
அ. சங்கரன்,
17, ராகவேந்திரா எக்ஸ்டென்ஷன்,
ராமமூர்த்தி நகர், பெங்களூர் - 560 016.

✱ ரூ. 25 பரிசு பெறுபவர் :
மு. ரா. பாலாஜி, S/o ராதாகிருஷ்ணன்,
சொர்ணாகுப்பம் எக்ஸ்டென்ஷன்,
ராபர்ட்சன்பேட் அஞ்சல்,
கோலார்தங்கவயல் 563 122.

இல் முதல் குற்ற வாளி... தற்போது அ.தி.மு.க. - த.மா.கா. கூட்டணி! ப.சி. நிலை குறித்துத் தங்கள் கருத்து என்ன...?

! சொக்கருக்கு உள்ள ரோஷம் கூட ப.சிக்கு இல்லையே என்ற வருத்தம்தான்!

● ஜி.ஜி. சரவணன், சிதம்பரம் - 1.

? கே.ஆர். நாராயணன் தமது குடியரசு தின உரையில் 'விரக்தியாக'ச் சிலவற்றைக் குறிப்பிட்டுள்ளாரே கவனித்தீரா?

! இன்றைய அரசியல் - பொருளாதார நிலை குறித்து விரக்தி எந்த இந்தியக் குடிமகனுக்கு இல்லை? அதன் பிரதிபலிப்புத்தான் குடியரசுத் தலைவரின் பேச்சு. நிலைமையைப் புரிந்து கொண்டு மத்திய - மாநில அரசுகள் அநாவசியங்களில்

நம்பர்லே..?

நேரத்தை வீணாக்காமல், முன்னேற்றத்தில் முழுமூச்சுடன் முனைந்தால் நல்லது.

● கு. சரவணன், பாளையங்கோட்டை.

? சினிமா நடிக - நடிகைகள் டி.வி. தொடர்களில் நடிக்கக்கூடாது என்று தமிழ்த் திரைப்பட வர்த்தக சபை தடை விதித்துள்ளதால் இனிமேல் தனியார் தொலைக்காட்சிகளின் கதி என்ன...?

! ஒன்றும் ஆகிவிடாது தனியார் தொலைக் காட்சிக்கு! மேல்நாட்டில் சினிமா தயாரிப்பாளர்கள் சின்னத் திரையை ஒதுக்காமல் அணைத்துக் கொண்டு போய், இருதரப்பிலும் பயனடைகிறார்கள். அந்த யுக்திதான் இங்கும் பயன்தரும். சின்னத் திரையை ஓரங்கட்ட நினைத்தால் சினிமாத் துறைக்குத்தான் இறுதியில் நஷ்டம் ஏற்படும்.

● புளியரை கணேசன், சென்னை - 30.

? த.மா.கா. எம்.எல்.ஏ. சொக்கர் ராஜினாமா வரவேற்கத்தக்கதுதானே...?

! இன்று நிமிர்ந்து நிற்கும் சொக்கரின் முதுகெலும்பு நாளை வளைந்து கொடுத்து விடாது என்று நம்புவோம்.

● அ. சங்கரன், பெங்களூர் - 16. ✱

? அறந்தாங்கி தொகுதியை எம்.ஜி.ஆர். அ.தி.மு.கவுக்கு கலைஞர் அளித்தது கூட்டணி தர்மத்தைக் காட்டுகிறதா? அல்லது அவருடைய முன்ஜாக்கிரதையைக் காட்டுகிறதா...?

! திருநாவுக்கரசு பலமுறை வென்ற தொகுதி என்பதால் அவர் கட்சிக்காரர் நிச்சயம் ஜெயிப்பார் என்ற நம்பிக்கையில் செய்யப்பட்ட காரியம். கலைஞரின் ராஜதந்திரம் அவரைக் கைவிடாதிருக்கட்டும்...!

● எம். ராஜேந்திரன், லால்குடி.

? சமீபத்தில் தங்களால் ஜீரணிக்க முடியாத விஷயம்/செய்தி...?

! தீபாமேத்தாவின் வாட்டர் திரைப்படத்தின் கதையும் அதுவிடுக்கும் செய்தியும் எனக்கு ஒப்புதல் இல்லை. ஆனால் ஒரு கலைப் படைப்பை உருவாக்கும் உரிமையை நான் மதிக்கிறேன். ஜனநாயக இந்தியாவில் அடிப்படை உரிமையான கருத்துச் சுதந்தரத்துக்கு பிஜேபி அரசின் ஆதரவோடு அடிக்கடி ஆபத்து வருவதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

● வி. சிவா, மதுரை - 16.

? புகழ்பெறும் புகைப்படக் கலைஞர் நாகராஜராவ் மரணம் பற்றி...?

! "கறுப்பு - வெள்ளையில் கவிதைகள் படைத்தவர்" என்று கூறுமளவுக்கு அக்கலையை உயர்த்தியவர் ஸ்டில்ஸ் நாகராஜ ராவ்.



• விரக்தி உரை!



• 'இடைஞ்சல்' நியாயம்!



• ஸ்டில் மன்னர்!



• அஜீரணம்!







ஃப்ரன்ஸ் காஃப்கா ஒரு ஆஸ்திரிய ரைட்டர். உயிரோட இருக்கறவரைக்கும் யாரும் இவரை அவ்வளவா கண்டுக்கலை. அமர ராணப்புறம்தான் காஃப்காவோட வேல்யூ புரிஞ்சி, லிட்ரரி ஃபீல்டு அவரைக் கொண் டாட ஆரம்பிச்சது. நிறையக் காதலிகள், அப்பா வோட எப்பவும் தகராறு, யாரோடவும் ஒத்துப் போக மாட்டார் அது இதுன்னு எழுத்துக்கள் பிரபலமான அதே காலகட்டத்துலதான் இவரோட பர்ஸனல் லைஃபும் பிரபலமாச்சு. தட் இஸ், ஆஃப்டர் ஹிஸ் டெத்.

காஃப்காவோட 'உருமாற்றம்'ங்கற குறு நாவல் சமீபத்துல எனக்குப் படிக்கக் கிடைச் சுது. (ட்ரான்ஸ்லேஷன் – சிவகுமார்; ஸ்நேகா வெளியீடு)

ஒரு சேல்ஸ் ரெப்போட கதை அது. நாளெல்லாம் அலைஞ்சி திரிஞ்சிட்டு, ஒரு நாள் ராத்திரி வந்து படுக்கிறவன், மார்னிங் முழிச்சுப் பார்க்கும்போது தான் ஒரு மெகா சைஸ் கரப் பான்பூச்சியா மாறியிருக்கறதைப் பார்த்து ஷாக் ஆயிடறான்.

தென், பேரன்ட்ஸ், சிஸ்டர், கம்பெனி ஆஃபீஸர்ஸ் எல்லாரும் அவனை எப்படி நடத்தறாங்க; அவனோட லைஃப்ல அடுத்த யிருக்கார்ங்கறது, பிரமிப்பூட்டற விஷயம். பை த வே, ட்ரான்ஸ்லேஷனும் நெருடாம இருக் கறதைச் சொல்லிடணும்.

ஒரு சின்ன பிட் நியூஸ். காஃப்காவுக்கும் அவங்கப்பாவுக்கும் டேர்ம்ஸ் சரியில்லைன்னு சொன்னேனில்லை? ஏதோ ஒரு சந்தர்ப்பத்துல, "போடா, பூச்சி!"ன்னு அப்பா அவரைத் திட்டினதோட வெளிப்பாடுதான் இந்த நாவல்னு சொல்றாங்க. தாங்க்ஸ் டு ஹிஸ் ஃபாதர்!

* * *

இருந்தால் ஓஷோ என்ன செய்திருப்பார்?

ஒவ்வொரு நிமிஷமும் எப்படி நகர்றதுங்கறது தான் கதை.

'பூச்சியா மாறுவது'ங்கறது மூலமா ஆத்தர் எதை மீன் பண்றார்னு விளக்க வேண்டாம்னு நினைக்கறேன். பட், இது மாதிரி ஒரு ராவான சப்ஜெக்டை இத்தனை விறுவிறுப்பா எழுதி

நீங்க உல்லாசியா இருக்க விரும்பறீங்களா?

1. ஆபீஸ்ல எந்தத் தலைபோற 'வேலை இருந்தாலும் சூரியன் மறையறதுக்கு ரெண்டு மணி நேரம் முன்னால வீட்டுக்குப் போயிடுங்க.

2. கதவு, ஜன்னலையெல்லாம் ஹாயா திறந்து போட்டுட்டு கொஞ்ச நேரம் படுத்துப்

புரளவும்.

3. காப்பிக்கு பதிலா ஐஸ்க்ரீம், வீட்டு சாப்பாட்டுக்குப் பதிலா தாபா ஐட்டம்ஸ், டிவிக்கு பதிலா வால்பூம் அதிகப்படுத்தி ஜாஸ்னு லைஃப் ஸ்டைலை இஷ்டத்துக்கு மாத்திக்கங்க.

4. விஷயமே இல்லாம ஃப்ரெண்ட்கிட்ட தினம் அரைமணி டெலிபோன்ல பேசணும்.

5. அழகா பாத்துப் பாத்து ரோஜாப்பூ வாங்கி கடிச்சி சாப்பிடுங்க.

6. நிறைய ஹேர் இருந்தா மொட்டை அடிச்சிக்கங்க. முடி குறைவா இருந்தா, தொப்பியைத் திருப்பிப் போட்டுக்கங்க.

– இந்த மாதிரி ஏறுக்கு மாறா ஒரு மூணு மாசம் வாழ்ந்து பார்த்தப்புறம் நீங்க இப்படி மாறிடுவீங்க :

1. டெய்லி ஷேவ் பண்ணிக்கறது.

2. வீவ் நான்ல, நெக்ஸ்ட் வீக் பத்தி பிளான் பண்றது.

3. வீட்டுல தோட்டம் போடலாமான்னு யோசிக்கறது.

4. ஒரு வாக்மன் வாங்கறது.

5. டீசன்டா ட்ரெஸ் பண்ணிட்டு, டயத்துக்கு ஆபீஸ் போய் ஒழுங்கா வேலை



சுமி சூப்பர் மார்க்கெட்

பார்க்கறது.

6. பத்து செகண்டுக்கு மேல போன்ல பேசாம இருக்கறது.

இதென்ன உடான்ஸ்? மக்களைக் கெடுக்கற வழின்னு நினைக்கறவங்க சும்மானாச்சும் ஒருவாட்டி இதை ட்ரை பண்ணிப் பார்க்கலாம்.

அரதப்பழசான ஒரு 'க்ளாமர்' மாகஸின்ல படிச்சிட்டு நான் ட்ரை பண்ணிப் பார்த்தேன். நல்லாவே ஒர்க் அவுட் ஆகுது. (லாஸ்ட் வீக் எழுதாம இருந்ததுக்கு இதுவும் ஒரு காரணம்னு சொல்ல மாட்டேன்.)

* * *

இந்திரா காந்தியைக் கொன்ன பியாந்த் சிங் தூக்கிலிடப்பட்டதும் விண்ணுலகம் போனான். அங்க பிந்தரன்வாலேவை மீட் பண்ணி, "என் ஒர்க்கை நீட்டா செஞ்சு முடிச்சிட்டேன்"னான்.

பிந்தரன்வாலே, "ரொம்ப சந்தோஷம். இங்க என்ன பண்றதா உத்தேசம்?"னு கேட்டார்.

பியாந்த் சிங், "எனக்குத் தெரிஞ்ச ஒரே வேலை, மெய்க்காப்பாளனா இருக்கறதுதான். உங்களுக்கு இருக்கட்டுமா"ன்னு கேட்டதும் பிந்தரன்வாலே என்ன பண்ணியிருப்பார்னு கண்ணை மூடிட்டு ஒரு செகண்ட் யோசிச்சிங்கன்னா, வாய் விட்டு சிரிக்கலாம்.

சிரிச்சிட்டு, குஷ்வந்த் சிங்குக்கும் நம்ம ஷண்முகசுந்தரம் அங்கிளுக்கும் ஒரு மானசிக தாங்க்ஸ் சொல்லிடுங்க!

— சுமி







– பிள்ளை

சமையல் அறையில் ஒரு 'நியூவேவ்!'



மைக்ரோவேவ் ராடார் ஒன்றின் அருகே நின்றுகொண்டிருந்த 'பெர்ஸி ஸ்பென்ஸர்' என்ற ஆராய்ச்சியாளர், தம் பாக்கெட்டில் இருந்த சாக்லெட் உருகுவதை கவனித்தார். டக்கென்று அவர் மூளையில் ஒரு பல்பு எரிந்தது. 'மைக்ரோ அலைகளால் சாக்லெட்டை உருக வைக்க முடியுமென்றால், அவற்றைக் கொண்டு ஏன் சமைக்கக் கூடாது?' முதல் முயற்சியாக மக்காச் சோளத்தின் மீது மைக்ரோ-வேவைச் செலுத்த, சுடச்சுட பாப்கார்ன் நிமிடங்களில் உருவானது. கடகடவென ஆராய்ச்சிகள் தொடர, மைக்ரோவேவ் ஓவன்கள் சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் மார்க்கெட்டில் அறிமுகமாயின.

நம்மூரில் இப்போதுதான் சூடுபிடித்திருக்கிறது இதன் விற்பனை. ஏன் இத்தனை தாமதம்? இந்தக் கேள்விக்கு விடை தெரிய வேண்டுமானால், இதன் மூலம் உணவு பதமாகும் அடிப்படையைப் பற்றி நாம் அறிய வேண்டும்.



• கிரண்குமார்

மைக்ரோ அலைகள் கண்ணுக்குத் தெரியாதவை. (புற ஊதாக் கதிர்களைப் போல). ஒரு குறிப்பிட்ட அலைவரிசையில் உருவாகும் இவை மின்சக்தியை வெப்பமாக மாற்றுகின்றன. வழக்கமாக எரிவாயுவைப் பயன்படுத்தி சமையல் செய்யும்போது, உணவு வெளியிலிருந்து பதமாகிறது - அதாவது நீர் முதலில் கொதிக்க வைக்கப்பட, இதனால் அரிசி சாதமாக மாறுகிறது. ஆனால் மைக்ரோ அலைகளுக்குத் தண்ணீர் போன்ற இடைப்பட்ட சமாசாரங்கள் தேவையில்லை. இதன் காரணமாகவே எரிபொருளும் பாதிக்குப் பாதி மிச்சமாகிறது என்பது ஒரு சிறப்பம்சம்.

ஆனால் மைக்ரோ அலைகளை உலோகங்கள் அனுமதிப்பதில்லை. அதாவது நாம் வழக்கமாக சமையலுக்குப் பயன்படுத்தும் எவர்சில்வர், பித்தளைப் பாத்திரங்களை மைக்ரோ ஓவனில் பயன்படுத்தினால் பலனிருக்காது. எனவே போரோசில் பாத்திரங்கள் தேவைப்பட்டன. (மைக்ரோ அலைகளை அனுமதிக்கும் இந்த வகை ஸ்பெஷல் ப்ளாஸ்டிக் பாத்திரங்களை போரோசில் நிறுவனம் தயாரித்ததால் அந்தப் பெயர். இப்போது வேறு பல நிறுவனங்களும் இவற்றைத் தயாரிப்பதால், அதற்கேற்றபடி பெயரும் மாறும்). இந்த வகைப் பாத்திரத்தின் விலை 150 – 600 ரூபாய். மைக்ரோ ஓவனின் விலையே அதிகம் என்பதோடு இந்த வகைப் பாத்திரங்களுக்காக வேறு செலவு செய்ய வேண்டும். தவிர



மேலைநாடுகளில் உணவுப் பழக்கங்களே வேறு. பிரெட், சான்ட்விச், கட்லெட் போன்றவற்றிற்கெல்லாம் மைக்ரோ ஓவன்கள் ஏற்றவைதான். என்றாலும் நம் நாட்டு சமையல் (அதுவும் தென்னிந்திய சமையல்) அலாதியாயிற்றே. பூரி, வடை போன்று எண்ணெய்யில் பொரித்தெடுக்கும் ஐயிட்டங்களை இதில் தயாரிக்க முடியாது.

இவ்வளவு தடைக்கற்களை மீறி இன்று இதன் விற்பனை கொடிகட்டிப் பறக்கிறது. எப்படி? பிபிஎல் நிறுவனத்தைத் தொடர்பு கொண்டோம். அதன் மார்க்கெட்டிங் அதிகாரி கிரண்குமார் விளக்கம் அளித்தார்.

“கூட்டுக் குடும்பங்கள் பிரிந்ததும், பெண்கள் வேலைக்குச் செல்வதும் மைக்ரோ ஓவனின் அவசியத்தை உணரச் செய்துள்ளன. வேகமாக சமைக்கலாம் என்பதோடு உணவுப் பொருளில் உள்ள சத்துக்கள் இந்த வகையில் வெளியேறாமல் பார்த்துக் கொள்ளப்படுகிறது. சமைக்க தண்ணீர் தேவையில்லை என்பதால், தண்ணீர் சிந்தி அலங்கோலமாகும் நிலையெல்லாம் இல்லாமல் போகிறது. தவிர குறைந்த இடமே இதற்குப் போதும். எல்லாவற்றையும் விட முக்கியமான விஷயம், மிகக் குறைந்த அளவு எண்ணெயே மைக்ரோ ஓவன் சமையலுக்குப்



போதுமானது. எண்ணெய் உடலுக்குத் தீங்கு விளைவிக்கிறது என்ற பின்னணியில் பார்க்கும்போது மைக்ரோ ஓவனின் சிறப்பை மக்களால் உணர்ந்து கொள்ள முடிகிறது. தவிர நம் ஊர்ச் சமையலுக்கு ஏற்ற மாதிரி இங்கு மைக்ரோ ஓவன்கள் வடிவமைக்கப்படுகின்றன. தனித்தனி 'சிப்'களை ஓவன் உள்ளே பொருத்தி விடுகிறோம். எந்த வகையில் உணவு பதமாக வேண்டுமோ, அதற்கான பொத்தானை அழுத்தி விட்டால் போதும், நிமிடங்களில் சமையல் ரெடி. எரிவாயுவும் மிச்சமாயிற்றே!”

— ஜி.எஸ்.எஸ்.



லியாண்டரின் இரண்டாவது காதலி!

இளம் டென்னிஸ் ஸ்டார் லியாண்டர் பயஸ் – கனடாவைச் சேர்ந்த விக்கி லவீ இருவரது லவ் ஸ்டோரி இது. (லியாண்டரின் முதல் காதலி டென்னிஸ் என்பதை மறக்க வேண்டாம்!)

கனடா நாட்டில், டொரான்டோவில், டென்னிஸ் போட்டிக்குப் போயிருந்தபோது, லியாண்டருக்கு அங்கே செக்யூரிடியாக இருந்த இளம் பெண்தான் விக்கி லவீ. அப்போதுதான் முதல் தடவையாக லியாண்டருக்கும், விக்கி லவீக்கும் அறிமுகம். அந்தச் சமயத்தில் விக்கியுடைய குடும்பத்தாரைச் சந்திக்கவும், அவர்களுடன் சில நாட்கள் தங்கியிருக்கவும் லியாண்டருக்கு வாய்ப்புக் கிடைத்து. அதன் பின், இரண்டு பேரும் சென்ற பிப்ரவரியில் ஒன்றாக ஆஸ்திரேலியா சென்றார்கள். மே மாதம் சென்னையில் டென்னிஸ் போட்டிகள் நடைபெற்றபோது, முதல் தடவையாக விக்கி, இந்தியாவுக்கு வந்தார்.

"சென்ற வருட அமெரிக்க ஓப்பன் டென்னிஸ் போட்டியின்போதுதான், எனக்கும், விக்கிக்கும் இடையிலான உறவு வெறும் நட்பு இல்லை; காதல் கெமிஸ்டிரி எங்கள் இரண்டு பேருக்கும் இடையே ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டோம். நியூயார்க்கிலிருந்து மாண்ட்ரியல் (கனடா) போய் ஒரு வாரம் ஒன்றாகக் கழித்தோம். அந்த ஒரு வாரப் பழக்கத்தில், 'இது, ஒரு சில வருடங்களுக்குள் முடிந்து போகிற உறவு இல்லை. ஆயுள் முழுக்கவும் நீடிக்கப் போகிற ஒன்று' என்று முடிவுக்கு வந்தோம். எங்கள் இருவருக்கும் கலாசார

ரீதியில் நிறைய வித்தியாசம் உண்டு. ஆனாலும், எங்களுக்கு இடையில் ஏற்பட்டுள்ள 'காதல்' அங்கே ஒரு பாலம் கட்டி எங்களை இணைத்து விட்டது!" என்கிறார் வியாண்டர்.

கனடா தேசத்து மக்கள் இனிமையானவர்கள் என்பதற்கு விக்கி ஓர் உதாரணம் என்கிறார் வியாண்டர்.

விக்கியும் ஒரு அதலெட்தான். கராத்தேவில் மூன்றாவது டிகிரி பெல்ட் வாங்கினவர். 95ம் வருடம் ஹாலந்தில் நடந்த உலக கராத்தே சாம்பியன்ஷிப் போட்டியில் கலந்துகொண்டு, இரண்டாவது இடம் பெற்றவர். அவரது அதலெடிக் பின்னணி காரணமாக, வியாண்டரின் டென்னிஸ் முன்னேற்றத்துக்கு முழுமையாக ஒத்துழைப்புத் தர



அவரால் முடிகிறது. இல்லையென்றால் வருடத்தில் நாற்பது வாரங்களுக்கு உலகம் சுற்றிக் கொண்டிருக்கும் டென்னிஸ் பிளேயருடைய வாழ்க்கையை அனுசரித்துக்கொண்டு போவது ரொம்பக் கஷ்டம்!

"எங்கள் இரண்டு பேருடைய ராசியும் ஒன்றுதான் (ஜெமினி) எங்கள் இரண்டு பேருக்கும் நகைச்சுவை உணர்வு அதிகம். எந்தவிதமான சவால்கள் என்றாலும், அதை எதிர்கொள்ளும் மனோபாவம் இரண்டு பேருக்குமே இயற்கையாகவே அமைந்திருக்கிறது. இரண்டு பேருடைய குடும்பங்களுக்கிடையிலும் இப்போது ஆரோக்கியமான உறவு நிலவுகிறது. அது எங்கள் அதிருஷ்டம்தான்!" என்கிறார் வியாண்டர்.

விக்கிக்கு, ஒரு நவீன உடை ஷோரூம் ஆரம்பிக்கும் ஆசை இருக்கிறது. வியாண்டரின் ஃபிட்னஸ் புரோகிராமை நிர்ணயித்து, அவரது திறமையான ஆட்டத்துக்கு வழி வகுத்துக் கொடுக்கிறார் விக்கி.

"உடற்பயிற்சியை ஒத்தி வைத்து விடத் தோன்றும் சோம்பலான சமயங்களில், என்னை உற்சாகப்படுத்தி, உடற்பயிற்சி செய்யத் தூண்டுவது விக்கிதான்" என்கிறார் வியாண்டர்.

"எங்கள் காதல் எங்களுக்கு மட்டுமே உரியது. அதைப் பொது இடங்களில் வெளிப்படுத்துவதற்கு எங்களுக்கு விருப்பமில்லை" என்கிறார்கள் இருவரும். போன வருடத்து காதலர் தினத்தன்று இரண்டு பேரும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் சாப்பிட்ட டின்னர், மற்றும் வியாண்டர் பரிசளித்த காது வளையம் இவை இரண்டும் இனிய ஞாபகம் என்கிறார் விக்கி.

விக்கியின் சொந்த ஊர் கியூபெக். (கனடா) மிக அழகான ஊர். மலை, ஆறு என்று இயற்கையழகுக்குக் குறைவே இல்லை. அங்கே கடலும் உண்டு. இந்த ஜோடி ஹவாய் போனபோது டால்பின்களுடன் நீச்சலடித்து விளையாடியது மறக்கவே முடியாத இனிய அனுபவமாம்.

அதெல்லாம் சரி! கல்யாணம் எப்போது?

அதைப்பற்றியென்ன? இது காதல் காண்டம்!

தொகுப்பு: **மௌலி**

மனிதர்களைக் தேடி...


"நான் வி.ஐ.பிக்களைப் புகைப்படம் எடுப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை. என் கவனமெல்லாம் எனக்கு அறிமுகமில்லாத, முகவரி தெரியாத மிக மிகச் சாதாரண மனிதர்கள் மீதுதான். தெருவோரக் குழந்தைகள் மீது எனக்கும் காதல். என் காமிராவுக்கும் காதல்" - என்கிறார் பத்மஸ்ரீ விருது பெற்ற புகைப்பட நிபுணர் சத்யன். தமது கறுப்பு - வெள்ளைப் படங்களின் கண்காட்சியைச் சமீபத்தில் சென்னை மியூசிக் அகாடமியில் நடத்தினார்.



"நவீன உலகம் கலர் கலர் என்று ஆலாய்ப் பறந்து கொண்டிருக்கையில், டிஜிடல் அற்புதங்கள் நேற்றைய புதுசை இன்றைக்குப் பழையதாக்கிக் கொண்டு போகும் வேகத்தில், நான் நேசிப்பது கறுப்பு வெள்ளையைத்தான்" என்கிறார் சத்யன்.

ஆறு ரூபாய்க்கு ஒரு





பாக்ஸ் காமிரா வாங்கியபோது சத்யன் பள்ளிக்கூட மாணவன்.

"அந்தக் காலத்தில் புதுசாகப் படமெடுப்பவர்களுக்கு ஊக்கம் கொடுத்து வந்த பத்திரிகை 'இல்லஸ்ட்ரேடட் வீக்லி ஆஃப் இந்தியா'தான். வெள்ளைக்கார எடிட்டர். நான் என் பாக்ஸ் காமிராவில் எடுத்த படங்களையெல்லாம் பிரிண்ட் போட்டு 'வீக்லி'யின் 'ஸ்நாப் ஷாட்' பகுதிக்கு அனுப்பி வைத்தேன். அதில் ஒன்று பிரசுரமான போது தலைகால் புரியாமல் குதித்தேன்! அதற்குப் பத்து ரூபாய் சன்மானம் கிடைத்தபோது வானத்தில் பறந்தேன்!

போட்டோ எடுத்தால் பத்திரிகைக்குத் தரலாம். பிரசுரமா






னால் சன்மானமும் வரும் என்கிற விவரங்கள் அப்போதுதான் தெரிய வந்தது'' – சின்னக் குழந்தை போல் சிரிக்கிறார்.

காமிரா கலை கொஞ்சம் பிடிபட்ட போது குழந்தைகள் மீது ஏற்கெனவே இருந்த ஒரு ஈர்ப்பு மேலும் அதிகமானது.

எழுபதுகளின் தொடக்கத்தில் டில்லியில் சத்யன் ஒரு கண்காட்சி நடத்தினார். முழுக்க முழுக்கத் தான் எடுத்த குழந்தைகளின் படங்கள். இந்தப் படங்கள் யூனிசெஃப் அமைப்பைக் கவர, 'எங்களுக்குப் புகைப்பட ஆலோசகராக இருங்களேன்' என்று அழைப்பு விடுத்தது அந்த ஐ.நா. அமைப்பு.



மூன்று ஆண்டுகள் கழித்து ஒரு பெரிய திருப்புமுனை. இந்தியப் பிரிவுக்கு அதிக நிதி வேண்டும் என்று யூனிசெஃப் தன் தலைமை அலுவலகத்துக்கு கோரிக்கை விடுக்க, இந்தியக் குழந்தைகளின் நிலைமையை நேரில் காண அந்த அமைப்பின் டைரக்டர் ஜெனரல் இந்தியா வந்தார். அப்போது அஸ்ஸாமில் வெள்ளம். ஒரிஸ்ஸாவில் பஞ்சம். பல நூறு குழந்தைகள் அவதிப்பட்டன. டைரக்டர் ஜெனரலோடு அந்த இடங்களில் போய்ச் சுற்றிப் பார்த்து குழந்தைகளின் பரிதவிப்பைத் தன் காமிராவால் 'சுட்டு' அவர் ஊர் கிளம்பும்போது ஒரு ஆல்பமாகக் கொடுத்தார். பிரித்துப் பார்த்த டைரக்டர் ஜெனரல் 'அதிக நிதியுதவிக்கு நான் மேற்கொள்ளும் முயற்சிகளை இந்த ஆல்பம் சுலபமாக்கி விட்டது' என்றாராம். அந்த டைரக்டர் ஜெனரலின் பெயர் ஹென்றி



லெபோரிஷ். ரேடியம கண்டுபிடித்த மேடம் க்யூரியின் மாப்பிள்ளை!

இவர் எடுத்த புகைப் படங்களை வெளியிடாத புகழ் பெற்ற சர்வதேசப் பத்திரிகைகள் எதுவும் இல்லை.


''வி.ஐ.பிக்கள் யாரையுமே நீங்கள் படமெடுத்ததில்லையா?''

"நானாகப் போவதில்லை. ஜெய்ப்பூர் மகாராணி காயத்ரி தேவி முதன் முதலாகத் தேர்தலில் நின்றபோது, மகாராணி ஒருவர் மக்களிடம் போய் தெருவில் நின்று வோட்டுக் கேட்டது ரொம்பவும் பரபரப்பான நிகழ்ச்சியாகப் பேசப்பட்டது. புகழ்பெற்ற 'லைஃப்' பத்திரிகை மகாராணியின் தேர்தல் பிரசாரத்தைத் தனக்கென 'கவர்' செய்ய என்னை அமர்த்தியது. நான் எடுத்த அந்தப் படங்கள் 'லைஃப்' இதழில் ஐந்து பக்கங்கள் வெளியாயின. மகாராணி அவற்றை மிகவும் ரசித்ததாகக் கேள்விப்பட்டேன்."

"இளம் புகைப்படக்காரர்களுக்கு ஏதேனும் அட்வைஸ்?"

"இரண்டு தருகிறேன். ஒன்று, திறமையின் உச்சிக்குப் போய் விடுங்கள். அங்கு போகும் வரை சளைக்காதீர்கள். இன்னொன்று, திறமைக்கு உச்சி என்று எதுவுமே இல்லை என்பதையும் கூடவே கவனத்தில் வைத்திருங்கள்."

இந்த எழுபத்தாறு வயதிலும் மனிதர்களைத் தேடி தெருத் தெருவாகத் திரிந்து கொண்டிருக்கிறார் சத்யன்.



படம் : இந்திராணில் சௌத்ரி.

• சத்யன்

— ராணிமைந்தன்

புகைப்படங்கள் : **சத்யன்**

மும்பை மசாலா

'கை' விட மாட்டோம்!

'கடிகார'த்துடன் (தேசியவாத காங்.) 'கை' கோத்துக்கொண்டு விலாஸ் ராவ் தேஷ்முக் நூறு நாட்களை ஓட்டி விட்டாரே!

மாபெரும் வெற்றிதான் – ஒன்று, கடிகாரம் ஓடாது; அல்லது கை ஒடித்து விடும் என ஆர்வத்துடன் எதிர்பார்த்தவர்களுக்கு அல்வா கொடுத்து விட்டார். ஆனால், கொலாபாப் பகுதி காங். எம்.எல்.ஏ பத்ராவாலாவின் மரணத்தை ஒட்டி நடக்கவிருக்கும் இடைத்தேர்தலில் – இதென்ன? காங்கிரஸ்காரர்கள் தங்கள் தரப்பில் ஆனி சேகரை நிறுத்துகிறார்கள்; தே.வா.காவும் தங்கள் சார்பில் போட்டியிட ஒருவரை நிறுத்தப் போகிறதாமே? கூட்டணிக் கட்சிகளை (மொத்தம் 10) கலந்தாலோசிக்காமல் விலாஸ்ராவ் முடிவெடுத்து விட்டதாக தே.வா.காகாரர்கள் முணுமுணுக்கிறார்கள். மரித்தவர் காங்கிரஸ்காரர் என்பதால், காங்கிரஸ்காரரைத் தானே நிறுத்த வேண்டும் என வாதாடுகின்றனர் காங்கிரஸார். இடைத் தேர்தலில் அடித்துப் பிடித்துக் கொண்டாலும், ஆட்சிக்கு எந்த ஆபத்துமில்லை என்று வழக்கம் போல் ஜோடி சேர்த்துக்கொண்டு போஸ் கொடுக்கிறார்கள் தேஷ்முக்கும் புஜ்பல்லும்! ஹூம், அல்வா கசக்கிறதே?



தண்ணீர் பிடுகிறதா?



• ஷபானா

பார்த்தால் பசி தீருமா?

குண்டடிபட்ட ராகேஷ் ரோஷன் வீட்டுக்கு வந்து, மறுபடியும் ஆஸ்பத்திரிக்குச் சென்று 'பைபாஸ்'ஸெல்லாம் செய்துகொண்டு, ஸெக்யூரிட்டியுடன் பாதுகாப்பாகத் திரும்பி விட்டார். பாலிவுட்காரர்களுக்கு அடிக்கடி அண்டர்வர்ல்டிடமிருந்து, வெற்றிப் படங்களின் 'ஓவர்ஸீஸ் ரைட்ஸை'த் தருமாறு மிரட்டல்கள் வருவது அதிகரித்து விட்டதால், காவல் துறை இருபது பேருக்குப் பாதுகாப்பு தர முன் வந்திருக்கிறது. இதில் திலீப் குமார், மனீஷா கொய்ராலா, அமிதாப்

• நந்திதா

எல்லாரும் அடக்கம் முன்பும் பலமுறை இப்படிப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருக் கிறதாம்; ஆனால் இந்தச் சேவையை இல வசமாக அனுபவிக்கப் பார்க்கிறதாம் பாலி வுட்! செக்யூரிட்டிவாலாக்களுக்கு பணமே கொடுக்காமல் டேக்கா கொடுத்துவிட்டு, 'இனிமேல் எங்களுக்கு இவர்கள் தேவை



சேகர் கபூரின் 'எலிசபெத்' திரைப்படம் ஆஸ்கார் வரை போனது என்றாலும், இந்தியாவில் ரிலீஸ் ஆவதில் சில சிக்கல்கள் (வேறென்ன, சென்ஸார்!) இங்கே படம் வெளி வருமா என்பது பெரிய கேள்விக்குரியாக இருந்தது. இப்போது, பிரச்னை தீர்ந்து விட்டது. இம்மாதமே எலிசபெத் மகாராணியைத் திரையில் பார்க்கும் பாக்கியம் இந்திய ரசிகர்களுக்குக் கிடைக்கப் போகிறது. முதலில் பெருநகரங்களில் மட்டும். அப்புறம் மற்ற ஊர்களில் ரிலீஸ்!

— சி.எம்.

யில்லை' என்று சொல்லி விடுவார்களாம். மறுபடியும் ஏதாவது பிரச்னை என்றால் அரண்டு, திரும்பவும் செக்யூரிட்டி கேட் பார்களாம்! ஹூம், மூன்று மணி நேரம் திரையில் தொடர்ந்தாற்போல் இந்த முகங் களைப் பார்ப்பதற்கே காசு கொடுக்க வேண்டியிருக்கிறதே, நான் முழுதும் பார்க்க அனுமதிக்கிறோமே (அதுவும் மேக்கப்பில் லாமல்) என்று செக்யூரிடிகளிடமிருந்து பைசா வசூலிக்காமல் விட்டார்களே, அதுவே பெரிசுதான்!

வெந்நீர்

திடீரென்று, ஷபானா ஆஸ்மியும் நந்திதா தாஸூம் காசிக்குப் போய் மொட்டை போட்டுக் கொள்ளப் போவதாக ஒரு செய்தி வந்து கலக்கியது; மும்பையில் இல்லாத ப்யூட்டி பார்லரா என்று எல்லோரும் பதறியே விட்டோம். அப்புறம்தான் தெரிந்தது– அது தீபா மேத்தாவின் 'வாட்டர்' படத்துக்காகவென்று! காசியில் வாழும் விதவைகளின் அவலக் கதையாம் அது! முதலில் ஆஹா ஓஹோவென்று ஒத்துழைப்புத் தருவதாகக் கூத்தாடிய உ.பி அரசு, இப்போது 'ஜகா' வாங்குகிறதாம். 'வாட்டர்தானே? 'ஜில்'லென்றிருக்கும்' என நினைத்திருப்பார்கள் போலும்! ஸ்க்ரிப்டைப் படித்ததும் 'நெருப்பாய்ச் சுடுகிறதே' என்று (பழைய Fire அனுபவத்தில்) அரண்டு விட்டார்களாம். படம் நன்றாக முடிய வேண்டும் என்று பேசாமல் யூனிட்டே திருப்பதி போய் மொட்டை போட்டுக் கொள்ளலாம்!

கடாத்மியம்!

வெங்கா பாய்ஸூக்கும் வெங்காயத்துக்கும் சம்பந்தமில்லைதான். ஆனாலும் ஐந்து லட்சம் பிரதிகள் விற்ற பாப் ஆல்பத்தைப் பாடிய இந்தப் பிரபல 'டச்' பாப் பாடகர்கள் அண்மையில் மும்பை வந்திருந்த போது, ப்ரெஸ் கான்ஃபரன்ஸூக்கு வந்திருந்த சொற்ப பத்திரிகையாளர்களும் 'கிடக்கு வெங்காயம்...' ஸ்டைலில்தான் சுரத்தேயில்லாதிருந்தனர். என்னதான் 'W2K' பெப்ஸி மிலெனியம் கான்ஸர்ட், ஆய் ஊய் என்று அலட்டிக் கொண்டாலும் நம் கலாசாரத்தோடு ஒட்டாத இசை எல்லாம் அதிக ஆர்வத்தைக் கிளப்பத்தான் மாட்டேனென்கிறது.

அதுவே நம் கர்நாடக இசையை எடுத்துக் கொள்ளுங்கள். பக்கவாத்யங்களில் கடத்துக்கு இப்படி ஒரு திடீர் மவுசு ஏற்படும் என யார் நினைத்தார்கள்? முலுண்டு, காட்கோபர், டோம்பிவிலி போன்ற இடங்களில் கச்சேரி செய்த நித்யஸ்ரீக்கு கடம் வாசித்த சுகன்யா ராம்கோபாலே எதிர்பார்த்திருக்க மாட்டார்; தனக்கு மும்பையில் இப்படி ஒரு வரவேற்பு இருக்குமென்று! அவர் கடத்தைத் தட்ட, ஆடியன்ஸ் கையைத் தட்ட, ரசிகர்களின் உள்ளத்தையே 'கட'த்தி விட்டார் அம்மணி!

— ஜெயஸ்ரீ ராஜ்

ஜீ.... பூம்.... பா.

குழந்தைகளை குதூகலப் படுத்த, யூடிவி தயாரித்து அளித்துள்ள தொடர் ஜீ.... பூம்.... பா. இது விஜய் டிவியில் ஜனவரி 23 முதல் ஞாயிறு தோறும் இரவு 8.00 மணிக்கு ஒளிபரப்பாக உள்ளது.



குழந்தைகளின் உலகம் வித்தியாசமானது. அதில் அவர்கள் எண்ணிய வண்ணம் நடக்கிறது. நினைத்த பொருட்கள் அவர்களுக்கு கிடைக்கின்றன. அருணின் பெற்றோர்கள் இருவரும் தங்கள் வேலைப் பளு காரணமாக அருணுடன் அதிக நேரம் செலவிட முடியவில்லை. அருண் தான் ஒதுக்கப்பட்டுள்ளதாக நினைத்து தனிமையில் வளர்கிறான். இந் நேரத்தில் அவனுக்கு ஒரு மேஜிக் பென்சில் கிடைக்கிறது. ஜீ.... பூம்.... பா. அருண் அந்த பென்சிலால் வரையும் உருவங்கள் உயிர் பெற்று வருகின்றன. வாழ்க்கை வண்ண மயமாகிறது அருணுக்கு. அருணுக்கு மட்டுமல்ல அனைத்து குழந்தை களுக்கும்தான்.



சமந்த்ராஜ் இயக்கத்தில் மலர்கிறது ஜீ... பூம்.... பா... தொடர்.

vijay
புதுமை என்றென்றும்

விஜய் டி.வியில் ஜனவரி 23 முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இரவு 8.00 மணிக்கு

- ADVT -



குறையொன்று

55

பகவத் குணங்கள் ஆறு : ஞான, பல,' ஐச்வர்ய, வீர்ய, சக்தி, தேஜஸ்.

பகவானுக்கிருக்கிற ஞானம் குறைவில்லாத ஞானம். எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கும்படியான ஞானம். அவன் பலமானது எல்லாவற்றையும் தாங்கிக் கொள்ளக்கூடியதான பலம்! நித்ய விபூதி என்று சொல்லக்கூடிய வைகுண்டம், லீலா விபூதி எனச் சொல்லக்கூடிய அண்ட சராசரங்கள் – எல்லாம் அவனுடைய ஐச்வர்யம். வீர்யம் என்பது எல்லாவற்றையும் சிறந்த முறையிலே செயல்படுத்தக்கூடிய சாமர்த்தியம். எம்பெருமான்தான் எல்லாவற்றையும் நியமிக்கிறான். சர்வத்தையும் பிரேரேபம் பண்ணுகிறான். அந்தந்த காரியங்களில் அவையவைகளை ஈடுபடுத்துகிறான். – அது வீர்யம்... தேஜஸ் என்பது...?

உபநிஷத் சொல்கிறது – 'அவனிருக்கிற இடங்களிலே சந்திர சூர்யாதிகளெல்லாம் நிலை சொல்ல முடியுமா! அந்தப் பெருமையை அடைய முடியுமா?' என்று கேட்கிறது. சூரியன் பிரகாசிக்கிறான் என்றால் அது அவனுடைய தேஜஸினாலே. சந்திரன் பிரகாசிப்பதும் அவனுடைய தேஜஸினாலே! – என்று உபநிஷத் அவனை ஜோதி ஸ்வரூபமாக, தேஜஸ்வியாக விவரிக்கிறது.

சக்தி என்பதும் பகவத் குணம். சமஸ்த்தத்தையும் தன் தடங்கையின் கீழே அடக்கக்கூடியவன் எம்பெருமான். அதுவே அவன் சக்தி. அப்படிப்பட்ட விசேஷ குணங்களுடையவனை ஈச்வரனே கொண்டாடுகிறார் : தீபத்திலிருந்து தோன்றிய தீபமாய், பிரதான தீபமாய் விஷ்ணு இருக்கிறான் என்று வழிகாட்டுகிறார்.

கண்டாகர்ணன் என்று ஒருத்தன் இருந்தான். அவனுக்கு நாராயணனைக் கண்டால் பிடிக்காது. ஆனால் ஈச்வரனிடத்தில் அபார பக்தி. அந்த பக்திக்கிரங்கி அவர் நேரே வந்து நர்த்தனமாடும்படியான பக்தி! சமகம் மொத்தத்தையும் கணம் சொல்லிப் பாருங்கள் – நாம் சொன்னால் ஈச்வரன் வரமாட்டான். ஆனால், அந்த கண்டாகர்ணன் 'நம சோமாய' என்று சொன்னாலே ஓடி வந்து

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்


விடுவான். அப்படியானால் அவனுக்கு எத்தனை பக்தி! அசஞ்சல பக்தி அது! ஆனால் நாராயணனைத் கண்டால் மட்டும் பிடிக்காது!

கண்டாகர்ணன் என்று அவனுக்கு ஏன் பெயர் தெரியுமோ...? காதிலே பெரிய மணி தொங்குமாம். (கண்டா – மணி. கர்ணம் செவி) யாராவது விஷ்ணு பக்தர்கள் தென்பட்டால், 'நாராயணா, விஷ்ணு' என்று அவர்கள் சொல்லிவிடப் போகிறார்களே என்று பயந்து கொண்டு தலையை ஆட்டிக் கொண்டே இருப்பான்! டணால்! டணால்! என்று மணி அடிக்கும்! நாராயண சப்தம் கேட்காது– அவ்வளவு தீவிரமாக இருந்தான் அவன். அவனை ஈச்வரனே திருத்திப் பணிகொண்டார். ஈச்வரனே அவனை ஆட்கொண்டு, 'இந்த மாதிரி விஷ்ணு த்வேஷம் – நாராயண த்வேஷம் கூடாது. ரொம்ப உன்னைக் கெடுக்கும்; என்னிடத்திலே மட்டும் பக்தி பண்ணி பிரயோஜனமில்லை. விஷ்ணுவை நீ ஆச்ரயிக்க வேண்டும்...' என்று உபதேசம் பண்ணினார். ஈச்வரனே உபதேசம் பண்ணிய பிற்பாடு அவன் திருந்தினான்.

ஒரு தேவதையினுடைய சக்தியை நிர்ணயம் பண்ணுவதற்கு நமக்கு அதிகாரம் கிடையாது என்பதை எடுத்துக்காட்ட இந்தக் கதையைச் சொன்னேன்.

ஒருத்தர் ரொம்ப விஸ்தாரமாக தினமும் பூஜை பண்ணுகிறார். அஹோராத்ரம் பூஜை! பூஜைக்கு முடிவே கிடையாது. பிராதஸ் காலம் ஐந்து மணிக்கு ஆரம்பித்து விட்டால் பூஜை வேறு விதமாக முடிந்தால்தான் உண்டேயொழிய இவர் முடிக்கவே மாட்டார்! ஆனால் வீட்டிலோ தரித்திரம் சொல்லி முடியாது! பரம தாரித்ரியத்தோடு அவஸ்தைபடுகிறார்.

ஒரு பூஜையும் பண்ணாதவரைப்



பார்த்தால் சௌக்கியமாக இருக்கிறார் இவர். அஹோராத்ரம் பூஜை பண்ணுகிறவர் – பரம தரித்திரத்தில் இருக்கிறார். இந்த கிருஹத்துக்கு ஒருவர் வந்தார். வந்து தாரித்ரியத்தைப் பார்த்தார். 'ஏன் இப்படி அவஸ்தைப்படுகிறீர்? உள்ளே அந்த மூர்த்தி இருக்கிறதே – நீர் பூஜை பண்ணும் மூர்த்தி. அதையெல்லாம் எடுத்து மூட்டை கட்டும்! தூக்கி நடுவாசலில் போட்டு விடும்! நான் சில மூர்த்திகளைக் கொடுக்கிறேன். அவற்றை வைத்துக் கொண்டு பூஜை பண்ணும். உமக்கு க்ஷேமம் ஏற்படும். தாரித்ரியம் நீங்கும் என்று சொல்லி விட்டார்.

உடனே அவர் வார்த்தையை நிஜம் என்று நினைத்து இவரும், தாத்தா தாத்தாவுக்குத் தாத்தா காலத்திலேயிருந்து பிராசீனமாக பூஜை பண்ணி வந்த விக்ரஹங்களையெல்லாம் மூட்டை கட்டினார். தூக்கி தூரப் போட்டு விட்டார். இவர் கொடுத்ததை வைத்துக் கொண்டு பூஜை பண்ண ஆரம்பித்து விட்டார்!

என்ன ஆயிற்று...? இன்னும் தாரித்ரியம் அதிகமாகி விட்டது!

இந்தக் கதையை விவரிக்கிற வித்யாரண்யர், இந்த இடத்திலே ஒரு கேள்வி கேட்கிறார் :

புதிதாக வந்த தெய்வத்தை வைத்துப் பூஜை பண்ணுகிறாரே, இது பலனைக் கொடுக்கக்கூடாதா? இன்னும் ஏன் தரித்திரத்திலே அவர் அவஸ்தைபட வேண்டும்? நூதன தெய்வம் ஏன் பலன் தரவில்லை?

இந்த நூதன தெய்வம் என்ன நினைக்கிறதாம்...? 'தாத்தா, முப்பாட்டன் காலத்திலேயிருந்தே இந்த கிருஹத்திலே இருக்கிற தெய்வத்துக்கே நாதியில்லை. ஒருத்தர் சொன்னார் என்று தூக்கி நடுத் தெருவிலே போட்டு விட்டான்! நாம் இன்று வந்திருக்கிறோம். நம்மை என்றைக்குத் தூக்கி வெளியிலே போட்டு விடுவானோ?' என்று நினைக்கிறதாம்!

கஷ்டம் என்பது இவன் ஜன்மாந்திரத்திலே பண்ணிய பாப விசேஷத்தினாலே சம்பவிக்கிறது. அப்படி நினைக்காமல் தெய்வத்தினாலே அது ஏற்படுகிறது என்று நினைக்கலாமா?... அந்த பரமாத்மா மேலே தோஷத்தைச் சொல்லலாமா...!

எம்பெருமான் என்ன பண்ணுகிறான்...? நமது காரியங்களுக்கு சாட்சியாக நிற்கிறான். நாம் பண்ணுகிற கர்மாவிலே பரமாத்மாவுக்குச் சம்பந்தம் கிடையாது. – வடிகட்டின

அருள்வாக்கு

நன்றாகப் படித்தறிந்த ஒருத்தர் நாலு பேருக்காவது அதைப் படிப்பிக்காமல் போனார் என்று ஏற்படவே கூடாது. நன்றாகக் கற்று வித்வானாகிற எவனும் அப்புறம் தான் கற்றதை மற்றவர்களுக்கும் கற்றுக் கொடுத்து ப்ரசாரம் செய்தேயாக வேண்டுமென்பது ஆன்றோர் விதித்த விதி. தன்மட்டில் கற்றவனாயிருந்து பயனில்லை; கற்பிப்பவனாயிருந்து கல்வியின் பயன் வருங்கால ஸமுதாயத்துக்கும் போகும்படிச் செய்ய வேண்டும்.

மனுஷ்யனுடைய வாழ்க்கையில் ப்ரஹ்மசர்யம், க்ருஹஸ்தம், வானப்ரஸ்தம், ஸந்யாஸம் என்று நாலு ஆச்ரமம் உள்ளது

வேதாந்த விஷயம் இது. இதை – வடிகட்டின இந்த வேதாந்த விஷயத்தை- மனத்திலே எழுதிக் கொள்ள வேண்டும்.

அது எப்படி...? பகவான் தானே நம்மை இயக்குகிறான்; ஒவ்வொன்றையும் பண்ண வைக்கிறான் என்று கேட்கலாம். உத்தங்கர் என்பவர் இதை கிருஷ்ணனிடமே கேட்டார் : "பஞ்ச பாண்டவர்கள் நல்லவர்களாகவே இருந்தார்கள். கௌரவர்கள் அந்த நூறு பேரும் துஷ்டர்களாகவே இருந்தார்கள். ஹே கிருஷ்ணா! நான் உன்னைக் கேட்கிறேன். இவர்களையும் நீ நினைத்தால் நல்லவர்களாகவே ஆக்கியிருக்கலாம் அல்லவா! அவர்களைக் கெட்டவர்களாகவும் இவர்களை நல்லவர்களாகவும் ஏன் வைத்தாய்...? நீதானே காரணம்? நீ நினைத்தால் பண்ணியிருக்க முடியாதா...?" என்று கேட்டார்.

பகவான் 'சந்தியாவந்தனத்துக்கு நேரமாகி விட்டது' என்று பதில் சொல்லாமலே புறப்பட்டுப் போய் விட்டான்!

அப்படியானால் அவர் கேட்ட கேள்விக்கு அவனுக்குப் பதில் தெரியாது என்று அர்த்தமா? இல்லை! 'நீயே புரிந்து கொள்' என்று அர்த்தம்.

ஏனென்றால் பகவான் என்ன பண்ணுகிறான்? நம் முன்னே பலதையும் வைத்து நாம் எதைத் தேர்ந்தெடுக்கிறோம் என்று பார்க்கிறான்.

சில கிருஹங்களிலே குழந்தைக்கெதிரே பொருள்களை வைத்து வேடிக்கைப் பார்ப்பார்கள். அது கத்தியை எடுத்துக் கொண்டால் பெரிய வீரனாக வரும்; பேனாவை எடுத்தால் பெரிய எழுத்தாளனாகும், புத்தகத்தை எடுத்தால் மகா



என்றால், கல்வி கற்பிப்பதிலும், நாலு ஸ்டேஜ்கள் உண்டு. அதீதி, போதம், ஆசரணை, ப்ரசாரணை என்று இந்த நாலுக்குப் பேர். அதீதி என்றால் படிப்பது. முதலில் நன்றாகப் படிக்க வேண்டும். அப்புறம் போதம், அதாவது படித்ததை நன்றாகப் புரிந்து கொண்டு அதிலே நல்ல அறிவு பெறுவது. மூன்றாவதாக ஆசரணை. முதலிரண்டும் இப்போதுங்கூடப் பல ஸப்ஜெக்ட்களில் நடந்துவிடுகின்றன. ஆனால் இந்த மூன்றாவது விஷயத்தில்தான் கோளாறாக இருக்கிறது. அது என்ன? ஆசரணை என்றால் அறிவிலே இறக்கிக் கொண்டதை நம்முடைய வாழ்க்கையிலே இழைத்து, நடைமுறையில் நடத்திக் காட்டுவது என்று அர்த்தம். கற்றபின் அதற்குத் தக நிற்பது ஆசரணை.

இந்த மூன்றோடு மட்டும் வித்வானின் லக்ஷணத்தை முடிக்காமல், 'முடிவாக ப்ரசாரணை' என்றும் ஒரு நாலாவது லக்ஷணம் சொல்லியிருக்கிறது. இதுதான் தான் கற்ற கல்வி தன்னோடு போகாமல் அதை நாலு பேருக்குக் கற்றுக் கொடுப்பது. ப்ரசாரம் செய்வது ப்ரசாரணை.

- ஜகத்குரு காஞ்சி காமகோடி
ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி
சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

வியாபகனாக – வித்யாமானாக வருவான். இப்படியெல்லாம் குழந்தை எதிரில் நாம் எதையெதையோ வைத்து, அது எதை எடுக்கிறது என்பதைப் பார்ப்போம். அந்த மாதிரிதான் பகவான் நம் எதிரிலே பல விஷயங்களைக் காட்டி என்ன பண்ணுகிறோம் என்று பார்க்கிறான். நமக்குப் பிரதம ப்ருவ்ருதி எது? – முதலில் எதை எடுக்கிறோம் என்று பார்க்கிறான். நம் கிட்டே அவன் வருவதில்லை. தூர, ஒதுங்கி நின்று பார்க்கிறான். நாம் கெட்டதை எடுத்தோமானால் திருத்தி, மறுபடியும் நல்ல கதிக்குக் கொண்டு வருகிறான். நல்லதையே எடுத்தால், அவர்களுக்குக் கூடவே இருந்து சகாயம் பண்ணி, உயர்ந்த கதியைக் கொடுக்கிறான். இது பகவானுடைய விளையாட்டு! நாமெல்லாம் அவனுடைய விளையாட்டுப் பொருள். லீலைக்காக அவன் எதிரிலே இருக்கக்கூடிய வஸ்துக்கள். நம் எதிரிலே அவன் பலவற்றையும் வைத்து விளையாடிப் பார்க்கிறான். தூரத்தே இருந்தபடி பார்க்கிறான்! அந்தந்தக் கர்மவினைக்கு ஏற்ப பலனைக் கொடுக்கிறான்.

துஷ்டர்களை துஷ்டர்களாகவே இருக்கச் செய்து கெடுத்து விடுவதில்லை பரமாத்மா! அவர்களையும் ரக்ஷித்தே திருகிறான். வாலிக்கு எதிரில் பரமாத்மா வராமலே போயிருக்கலாம். மறைந்து நின்று பாணப் பிரயோகம் பண்ணியவன் அப்படியே போயிருக்கலாம். ஆனால், அவன் அப்படியே போயிருப்பானேயானால் என்ன ஆகியிருக்கும்...?

அப்படியே அவன் போயிருப்பானேயானால், வாலியின் மனத்திலே ஒரு தப்பு எண்ணம் இருந்திருக்கும். 'இந்த ராமன் நம்மைக் கொன்று விட்டானே! ஒரு பாவமும் அறியாத நம்மைக் கொன்று விட்டானே!' என்று ராமன் பேரிலுள்ள கோபத்துடனேயே மாண்டு போயிருப்பான். தோஷத்துடன் மரணம் அடைந்திருப்பான். அவ்வாறு அவன் போயிருந்தால் அவனுக்கு நரகம்தான் வந்திருக்கும்.

ஆனால் பகவான் நேரே வந்து தோன்றி, வாலியைத் தன்னை அடையும்படிச் செய்தான்.

'மூவன் நீ, முதல்வன் நீ முற்றும் நீ மற்றும் நீ
பாவம் நீ தர்மம் நீ பகையும் நீ உறவும் நீ'


என்றார் கம்பர். அப்படி கம்பராமாயணத்திலே பகவானை ஸ்தோத்திரம் பண்ணுகிறான் வாலி! பிராணன் போகிற நேரத்திலே வந்து எனக்கு நல்ல கதியைக் கொடுத்தாயே! என்று மனமுருகி எம்பெருமானை அவன் ஸ்தோத்திரம் பண்ணுவதனாலே, பரமாத்மா அவனுக்கு நல்லதே பண்ணினான்.

இப்படித்தான் பரமாத்மா துஷ்டர்களாக இருந்தவர்களையெல்லாம் திருத்தி நல்லது பண்ணினானேயொழிய, அவன் யாரையும் கெடுக்கவில்லை. அப்படிப்பட்ட எம்பெருமான் சரணாரவிந்தத்தை நாம் ஆச்ரயித்தோமானால் நம்மிடத்திலேயிருக்கிற தோஷத்தையெல்லாம் போக்கி, சிறந்த ஞானத்தைக் கொடுக்கிறான்!

ஆகவே, சக்தியை ஆராய நமக்கு உரிமையில்லை! எம்பெருமானை ஆராதிப்பது மட்டுமே நம்முடைய கடமை.


(தொடரும்)

நடக்குமென்பா




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

அந்தஸ்து ஆகான்னு ஒசரும்னா, செய்யற காரியங்கள் ஓஹோன்னு ஜெயிக்கும். இதுவரைக்கும் போக்குக் காட்டிக் கிட்டிருந்த காரியங்கள்கூட இப்ப உங்க சொல் படி நடக்க ஆரம்பிக்கும். சிலருக்குப் புது பதவிகள், விருதுகள் வர்ற சான்ஸும் இருக்கு. புதுசு புதுசா ஏதானும் பொருள்களும் வாங்கு வீங்க. நல்ல காரியங்களில் கலந்துக்கற சான்ஸ் சில பேருக்குன்னா, தர்ம காரியங்கள் செய்யற சான்ஸும் சிலருக்கு இருக்கு.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

உங்க தன்னம்பிக்கை காரணமா எந்தக் காரியத்தையும் துணிச்சலா செஞ்சு, வெற்றியும் அடைவீங்க. மத்தவங்க பாராட்டும் தாராளமா கிடைக்கும். புது ஆளுங்க தொடர் பும் அனுகூலம் தர்றதாவே இருக்கும். விளை யாட்டுலேர்ந்து வழக்கு வரைக்கும் வெற்றி உங்க பக்கமாத்தான் இருக்கும். அசையாச் சொத்துக்கள் வாங்குவீங்க. இல்லேன்னாலும் குடும்பச் சொத்தால லாபம் கிடைக்கலாம்.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர் பூசம் 3-ம் பாதம் வரை)*

இதுவரைக்கும் ஏதாவது பிரச் னைங்க இருந்திருந்தா இந்த வாரம் தீர்ந்திடும். நண்பர்கள், சொந்தக்காரங் கன்னு பலரும் உதவிக்கு ஓடி வருவாங்க. சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடி வரும். வியாபாரிங்களுக்கு வளர்ச்சி தெரியும். உத்தியோகஸ்தர்களுக்குப் புர மோஷனுக்கான சான்ஸ் இருக்கு. சிலருக்குப் பயணத்தால லாபம் கிடைக்கும்னாலும் பய ணத்துல உஷாராயிருக் கணும்.



கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

மனசுல ஒருவித சஞ்சலம் இருந்துக் கிட்டே இருக்கற வாரம் இது. குடும்பத் துலயும் ஏட்டிக்குப் போட்டியா உங்க ளோட வாதம் பண்ணிக்கிட்டிருப்பாங்க. அலைச்சலும் அதனால மனச்சோர்வும் இருக்கும். உடல்நிலை கூட பாதிக்கப் பட லாம். பண விஷயமும் ரொம்ப சாதாரண மாத்தான் இருக்கும்கிறதால சிக்கனம் ரொம்ப அவசியம். சிலருக்கு வீண் வம்புல மாட்டிக்கற சூழ்நிலையும் ஏற்படலாம்.




சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க புத்திசாலித்தனம் யாரை யும் பளிச்சினு கவர்ந்திழுக்கற உங்க முக வசீகரம்... அப்புறம் என்னங்க! உங்க வாழ்க்கையில் தெரிவது முன்னேற்றப் படிகள்தான். பண நடமாட்டம் தாராளமாவே இருக்கும். சிலருக்குப் புதிய பட்டங்கள், பதவிகள் வந்து சேரும். உத்தியோகஸ்தர்களுக்கு அமோகமான வாரம். குடும்பத்தில் சுப காரி யங்களுக்கான சான்ஸ் கூடி வரும்.



கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

எடுத்த காரியங்களை எப்பாடு பட்டாவது முடிச்சுக் காட்ற சாமர்த்தியம் இருக்கு உங்ககிட்டே. பண விஷயம் சுமாராத் தான் இருக்கும்னாலும் மத்தவங்க உதவி தாராளமாவே கிடைக்கும். உத்தியோகஸ்தர் கள் கேண்டீன் பக்கமே கதின்னு கிடந்தா, மேலதிகாரிகளோட கோபத்துக்கு ஆளாக வேண்டியதுதான். சமயத்துல தண்ணியில்லாக் காட்டுக்கும் (சென்னையும் அப்படித்தான் ஆகப் போவுது) தூக்கியடிக்கலாம்.



துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

உங்க திறமை பளிச்சிடும் வாரம். குடும்பத்தில் பொதுவாவே சந்தோஷச் சூழல் தான்னாலும் சுப காரியங்கள் நடக்கறதுக்கான சூழல் மேலும் சந்தோஷத்தைத் தரும். கடன் தொல்லை இருக்கறவங்களுக்கும் ரிலீஃப் கிடைக்கும். காரணம், தாராள பணப் புழக் கம்தான். சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகளும் காத்திருக்கு. கடிதங்கள் சந்தோஷத் தூதுவர் களா இருக்கும்.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

எல்லாமே சுபமா நடக்கற வாரம் இது. உத்தியோகஸ்தர்களுக்கு அதிகாரி களோட பாராட்டு உறுதி. உங்க பேச்சில்கூட இதுவரைக்கும் இருந்த சிடுசிடுப்பு காணாம போய் இனிமை கூடும். விருந்துபசாரம், உல்லா சம்னு குடும்பச் சூழலே குஷி மூடைக் கொடுக் கும். வெளி நாட்டுத் தொடர்புள்ளவங்களுக்கு




மேஷ ராசிக்காரரான சுதா ரகுநாதனுக்கு இது சூப்பர் நேரம்! விருது ஏதோ வரப் போவுதாமில்லே?

ஆதாயம் கூடும்.



தனுசு : (மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)

இது அந்தஸ்து உயரும் வாரம். பொருளாதாரத்தில் நல்ல அபிவிருத்தி தெரியும். வழக்கு விவகாரங்களில் நல்ல திருப்பம் ஏற்படும். போட்டி பந்தயங்களிலும் வெற்றி கிடைக்கும். ஆனாலும் பேச்சில் நிதானமும் செய்கையில் பொறுமையும் அவசியம். எதிர்பாராத செலவுகள் வர சான்ஸ் இருக்குன்றதால, சிக்கனம் தேவை. புது ஆளுங்ககிட்ட உஷாரா பழகலேன்னா கைப் பொருள் இழக்க வேண்டி வந்திடும். செய்யும் தொழிலில் அதிக கவனமும் அவசியம்.



மகரம் : (உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)

கிரகங்களின் சஞ்சாரம் சரியா இல்லாததால, சில பிரச்னைகள் எட்டிப் பார்க்கவே செய்யும். வீண் அலைச்சலும் வந்து சேரும். உடல் நலனில் அதிக அக்கறை காட்டணும். எதையுமே இந்த வாரம் அலட்சியப் படுத்தக் கூடாது. குடும்பத்தில்கூட சண்டை சச்சரவுகள் வர்றதுக்கு சான்ஸ் இருக்கறதால எதிலும் நிதானம் அவசியம். புதுக் காரியம் ஏதும் செய்ய வேண்டியிருந்தா ஒரு முறைக்கு நூறு முறை யோசிக்க வேண்டியது அவசியம்.



கும்பம் : (அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)

உங்க புத்திசாலித்தனம் பிரகாசிக்கற வாரம் இது. பொது நலம், பிறருக்கு உதவின்னு தாராளமா செலவு பண்ணுவீங்க. உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு டிரான்ஸ்ஃபர் உறுதி. புது ஆளுங்ககிட்ட ஜாக்கிரதையா இருக்கணும். புது முயற்சிகளைத் தள்ளிப் போடுவதே நல்லது. சமயங்களில் சின்னச் சின்ன தடைகள் வரும்னாலும் நிதானம் காட்டினா ஊதித் தள்ளிடலாம்.



மீனம் : (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

பொருளாதார விஷயத்தில் நல்ல அபிவிருத்தி தெரியும். பண நடமாட்டம் சிலருக்குத் தாராளமா இருக்கும்; சிலருக்குத் திருப்திகரமா இருக்கும். யாருக்குமே மோசமா இருக்காது. உத்தியோகஸ்தர்களுக்குப் புதிய பதவிகளும் பொறுப்புகளும் கூடி வரும். குடும்பத்தில் சுப காரியங்களுக்கான சூழ்நிலைகளும் கூடி வரும். சமயத்தில் சின்னச் சின்ன தொல்லைகள் வரும்னாலும் புத்திசாலித்தனமா சமாளிக்க முடியும். வீண் வம்புகளில் மாட்டிக்காம இருக்கறது நல்லது. வியாபாரிகள் அகலக் கால் வைக்க நினைக்கறதும் நல்லதில்லை. ●

நட்சத்திரம்!

அக்னிசர்மா பக்கம்

பிப்ரவரி 9 முதல் 15 வரை

விஜய் டிவியில் திங்கள் தோறும் இரவு 9.00 மணிக்கு. ஃபேவரைட் டெலிவிஷன் தயாரித்து வழங்கும் 'இரண்டாம் பிறை' என்ற புதிய 52 வாரத் தொடர் ஜனவரி 24 முதல் ஒளிபரப்பாக உள்ளது. நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஜெயசித்ரா முற்றிலும் மாறுபட்ட கதாபாத்திரத்தில் இத்தொடரில் தோன்றுகிறார்.

இரண்டாம் பிறை

அவருடன் நடிகை கஸ்தூரி, விஜய் ஆதிராஜ் மற்றும் கே.எஸ்.ஜி. வெங்கடேஷ் நடிப்பில் வெளிவரும் பரபரப்பான தொடர் இரண்டாம் பிறை.



கணவனின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ஜமீனின் வாரிசான தனது எட்டு வயது மகன் முத்தரசுவிற்கு, ஏழைத் தொழிலாளியின் ஐந்து வயது மகளை மணமுடிக்கிறார் முத்து நாச்சியார். விடுதலையடைந்த ஜமிந்தார் அத் தொழிலாளியின் குடும்பத்தை குடிசையுடன் தீக்கிரையாக்குகிறார். ஆனால் அந்த சிறுமி மட்டும் தப்பி வேறொரு இடத்தில் வளர்கிறாள். பல ஆண்டுகளுக்குப் பின்னர் படிப்பு முடித்து வெளிநாட்டில் இருந்து திரும்பும் முத்தரசிற்கு தீக்கிரையான குடிசையின் உருவம் அடிக்கடி நினைவில் வந்து துன்புறுத்துகிறது. உண்மையறிந்த முத்தரசு, அப்பெண்ணை தேடி அலைகிறான். அவனது முயற்சிக்கு தடைகள் உண்டு பண்ணுகிறார் முத்து நாச்சியார். முடிவு சின்னத் திரையில்.

இத் தொடரினை எம்.எம். ரங்கசாமி இயக்கியுள்ளார்.


vijay

புதுமை என்றென்றும்

விஜய் டி.வியில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் இரவு 9.00 மணிக்கு

சப்தவிடங்க ஸ்தலம் – 7

தெய்வ தரிசனம் – 15



வேதாரண்யத்து புவனி விடங்கர்

ஆனந்தி

கோவிலில் அர்ச்சனைகள் முடிந்து அர்த்த ஜாம பூஜையும் முடிந்து கருவறையின் கதவைச் சாத்திக் கொண்டு போய் விட்டார் குருக்கள். ஏற்றி வைத்திருந்த விளக்கில் திரி எரிந்து சுடர் மங்கியது. சிவபெருமான் அம்பிகையைப் பார்த்து, ''இந்த விளக்கை யாராவது தூண்டி விட்டால் அவனுக்கு அரச பதவி தந்து பிறகு சிவலோகப் பதவியும் தரப் போகிறேன்'' என்று வேடிக்கையாகச் சொன்னார். பார்வதி தேவியும் சிரித்துக் கொண்டே, ''இந்த நடு நிசியில் இங்கே யார் வரப் போகிறார்கள்? கதவு கூட சாத்தியாகி விட்டதே. வராதவருக்குத் தராத வரமா இது'' என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே ஒரு சிறிய எலி சந்து வழியாகப் புகுந்து வந்தது. மங்கிய விளக்கில் நெய் உறைந்திருந்தது. அந்த மணத்தால் கவரப்பட்டுத் தாவி விளக்கின் மேல் ஏறிற்று. நெய்யை நக்கும் போது எலியின் வால் திரி மீது பட்டு வெளியில் நகர்ந்தது. சுடர் திடீரென்று பிரகாசமாக எரிந்து கருவறை முழுவதும் அந்த ஒளியில் ஜொலித்தது. உமாதேவி மீண்டும் முறுவலித்தாள். சிவபெருமான் எலியைக் கருணைக் கண்களால் பார்த்தார்.

எலியின் பாக்கியத்தை என்னவென்று சொல்வது? மறு பிறவியில் விரோசனன் என்ற பேரரசனின் மகனாகப் பிறந்தது. மகத்தான பலம்பொருந்திய அந்த அரசகுமாரனுக்கு மகாபலி என்று பெயரிட்டு வளர்த்தார்கள். செல்வம், அதிகாரம், பலம் மூன்று சேர்ந்தால் என்ன ஆகும்? மகாபலியின் அரச பதவியினால் வந்த கர்வமும், பெரியோர்களை அவமதிக்கும் செருக்கும் செய்யக்கூடாத காரியங்களைச் செய்ய வைத்தன. சிவபெருமானை மறந்தான். தேவர்களையும் ரிஷிகளையும் அவமதித்தான்.

பிரும்மதேவரும் தேவர்களும் ஈசனிடம் சென்று ''வேதபுரீச்வரப் பெருமானே! மகாபலியின் செருக்கை அடக்க வேண்டும்''

என்று வேண்டினார்கள். சிவபெருமான் திருமாலைக் கூப்பிட்டு, "வேதவனத்தில் திரியைத் தூண்டிய எலிக்கு நாம் நல்ல பிறவி கொடுத்தோம். பலியாகப் பிறந்த எலி சரியாகப் பிறவியைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நானே வரம் கொடுத்து நானே தண்டிக்க விரும்பவில்லை. மகாபலியின் கர்வத்தை நீர்தான் அடக்க வேண்டும்" என்று கூறினார்.

மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி மண் கேட்டு பூமியையும் ஆகாயத்தையும் அளந்து பலியைப் பாதாளத்தில் அமுக்கி விட்டார் நாராயணன். பலிக்கு ஒரு வரமும் கொடுத்தார். பாதாளத்தில் அரசு செலுத்திக் கொண்டு, தவறாகச் செய்யப்படும் யாக பலனையும், தேவர்களுக்குக் கொடுக்கப்படும் தானத்தின் பலனையும் அடைந்து கொண்டு வாழும்படி அருள்செய்தார்.

இந்தக் கதையை நினைவூட்டும்படியிருக்கிறது அப்பர் பாடல் :

"விளக்கிட்டார்ப் பேறு சொல்லின்
மெய்ந் நெறி ஞானமாகும்"

என்று வேதபுரீஸ்வரரைப் புகழ்கிறார். அப்படிப்பட்ட வேதாரண்யத்துக்கே இன்று போகிறோம்.

திருத்துறைப்பூண்டி ரயில் நிலையத்திலிருந்து சுமார் முப்பது மைல் தூரத்தில் இருக்கிறது வேதாரண்யம். வேதாரண்யம் என்றதும் எனக்கு முதலில் ஞாபகம் வந்தது, ராஜாஜியின் தலைமையில் நடந்த உப்பு சத்தியாக்கிரகம் தான். கடற்கரையானதால் உப்பளங்கள் உள்ள இடம்.

தலபுராண வரலாறு சுவரில் எழுதப்பட்டிருந்தது. அதைப் படித்துக் கொண்டிருக்கையில், "குருக்களுக்கு சொல்லி அனுப்பியிருக்கிறேன். வந்து விடுவார்" என்றார் வரணி ஆதீனத்து செல்வந்தி நாதப் பண்டாரசந்நிதி அவர்கள். வேதாரண்யம் கோவில் சுமார் எழுநூறு ஆண்டுகளாக யாழ்ப்பாண வரணி ஆதீனத்தினால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.



• ராமர் பாதம்



ஸ்ரீ சுப்ரமண்ய குருக்கள் வந்தார். கோவிலைப் பற்றிய எல்லா விஷயங்களையும் ஆர்வத்தோடும் சந்தேகத்துக்கிடமில்லாமலும் எடுத்துச் சொன்னார். பள்ளிக்கூட ஆசிரியரைப் போலக் கேள்வி கேட்டு நம்மை மடக்கினார், ரொம்ப சுவாரஸ்யமாக இருந்தது.

முதலில் மறைக்காடு உறையும் மணாளர் சந்நிதிக்குப் போகிறோம். கதையைச் சொல்கிறார் குருக்கள். பார்வதி கல்யாணத்தின் போது வடக்குத் தாழ்ந்து தெற்கு உயர்ந்தது. அதைச் சமன் செய்வதற்காக அகத்தியரைத் தெற்கே அனுப்பினார் சிவபெருமான். திருமணக் கோலத்தில் அகத்தியருக்குத் தரிசனம் தந்தார். கருவறையில் வேதவனேச்வரருக்குப் பின்னால் மறைக்காட்டு மணாளரும் பார்வதியும் புடைச் சிற்பங்களாகக் காட்சி தருகிறார்கள். தீபாராதனை செய்து நன்றாகத் தரிசனம் செய்து வைக்கிறார்கள். இந்தத் திருமணத் தம்பதிகளுக்கு வருடத்தில் ஒருமுறை

• திருச்சுற்றிலுள்ள சித்திரங்கள்



தான் அபிஷேகம். சந்தனக்காப்பு.

''முதலில் பிள்ளையாரைத் தரிசனம் பண்ண வேண்டாமா?'' என்று கேட்டதற்கு குருக்கள், ''இந்த ஊரில் வேதாரண்யேச்வரர் தான் முதல்வர். எல்லாமே அவருக்குத்தான் முதலில் நடக்கும். காமிகாகமத்தில் சிவன்தான் முக்கியம். காரணாகமத்தின்படி பிள்ளையார் முதல்வர்'' என்று விளக்கினார்.

நான்கு வேதங்களும் பூஜித்துப் போற்றிய மூர்த்தி. அறுபத்து மூவருடன் நான்கு வேதங்களும் புருஷ வடிவில் காட்சி தருகிறார்கள்.

வேதாரண்யேச்வரரைப் பூஜித்துப் பேறு பெற்றோர் எத்தனையோ பேர்.



• தலவிருட்சம்- தக்ஷிண கைலாயம்

ஈசன் பிரும்மதேவருக்கு வேதங்களை உபதேசித்தார். அந்தணர்கள் சரியாக ஓதாத படியால் வலிமை இழந்த வேதங்கள் வேதாம்ருதம் என்ற ஏரியை வெட்டி, சத்தியநதியில் மூழ்கி (வேதங்கள் நீராடியதால் வேதநதியாயிற்று) சத்தியகிரீச்வரரை வழிபட்டன. வலிமை பெற்றன. எங்கள் பெயரால் இந்தக் காடு திருமறைக்காடு என்று வழங்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டன. நாரதர் வந்து வேத நதியில் நீராடித் துதித்த தலம் இது. விசுவாமித்திரரின் தவத்தைக் கலைத்த மேனகை அவருடைய சாபத்தால் மான் உருவம் அடைந்தாள். வேடன் அம்பு தைத்து ஓடி வேதநதியில் விழுந்ததால் மீண்டும் மேனகை வடிவம் அடைந்தாள். பிரும்மராக்ஷதர்கள் இங்கே சிவலோகப் பதவியடைந்தார்கள். ஸ்ரீராம பிரானுடைய வீரஹத்தி தோஷம் இங்கே விலகியது. இன்னும் கோலாஹலன், குலகேசன், தனபாலன் என்ற பலர் சாபவிமோசனம் பெற்றார்கள். யாக்ஞவல்கியரும் மைத்ரேயியும் இங்கே தத்துவங்களைப் பேசினார்களாம்.



• துர்க்கை அம்மன்

வேதாரண்யத்தை நெருங்கும் போதே வேதாம்ருதம் என்ற ஏரியைப் பார்க்கலாம். வேதநதி என்ற ஆறு கடலுடன் கலந்து விட்டதால் கடலே வேதநதியாகி விட்டது. பயமில்லாமல் எப்போதும் ஸ்நானம் செய்யலாம். கடல் முனை ஒரு இடத்தில் கோடி தீர்த்தம் என்று பெயர் பெற்றிருக்கிறது.

கோவில் கோபுரம் தாண்டிய உடன் மிகப் பெரிய குளம். மணிகர்ணிகா என்று எழுதியிருந்தது. கங்கை நதியில் சகல மக்களும் தங்கள் பாபங்களைக் கழுவிக் கொள்கிறார்கள் அல்லவா? அந்தப் பாபத்தை இந்த மணிகர்ணிகா தீர்த்தத்தில் பங்குனி உத்திர நன்னாளில் மூழ்கியே போக்கிக் கொள்கிறாளாம் கங்கா தேவி. அவ்வளவு புண்ய தீர்த்தம். மணிகர்ணிகையில் உச்சிக் காலத்தில் நீராடுவது ரொம்ப விசேஷம். தீர்த்த மகிமைகளைச் சொல்லி மாளாது.

கோவிலுக்குள்ளேயே பல கிணறுகள். விசுவாமித்திரர் கிணறு, ஸரஸ்வதி கிணறு லக்ஷ்மி கிணறு என்று புண்ணிய தீர்த்தங்கள். அம்பாள் ஸந்நிதி பிராகாரத்தில் அம்பாள் தீர்த்தம். தண்ணீரை எப்படிப் போற்றி வந்திருக்கிறார்கள் நம் பெரியோர்! கோவிலில் விழுகிற மழை நீர் முற்றிலும் மணிகர்ணிகா நோக்கிச் சரியும்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

இது சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றாயிற்றே. நினைத்தாலே பாவங்களைப் போக்கி முக்தியளிக்கும் வேதாரண்யேச்வரரைத் தரிசித்து விட்டு தியாகராஜசுவாமியைத் தரிசிக்கிறோம். இவர் புவனிவிடங்கப்பெருமான்.

இவர் ஆடுவது பிருங்க நடனம். வண்டு சுழன்று பறந்து சுற்றி வருவது போல் புவனி விடங்கரைத் தூக்கிக் கொண்டு ஆடுவார்களாம். மரகத லிங்கம். கற்பூர ஜோதியில் தியாகராஜசுவாமி, சுந்தன் நீலோத்பலாம் பாளைத் தரிசிக்கிறோம். முசுகுந்த சக்ரவர்த்தியும் இந்திரனும் ஆண்டுதோறும் வந்து வழிபடுகிறார்களாம்.

பிராகாரத்தை வலம் வருகிறோம். முக்குறுணிப் பிள்ளையாரைத் தரிசிக்கிறோம். பிள்ளை வரம் வேண்டுபவர்கள் இவருக்கு வழிபாடு செய்வார்கள். யானைக்கு வைப்பது போலக் கரிமுகனுக்கு மூன்று மரக்கால் அவல், ஐந்து தேங்காய், ஐந்து பெரிய உருண்டை பாலாஜிப்பேட்டை வெல்லம் எல்லாம் வைத்து நெய் விளக்கு ஏற்றி வழிபடுவார்கள். குழந்தை பிறக்கும்.

பாண்டவர் பூஜித்த லிங்கத்தைத் தரிசிக்கிறோம். அழிந்தும் அழியாமலுமிருக்கும் சில சித்திரங்களைப் பார்க்கலாம். அதில் பாலன் நம்பியாண்டான் படைத்த நைவேத்தியத்தைத் துதிக்கையால் எடுப்பது போன்ற சித்திரம் என் மனத்தைக் கவர்ந்தது. 'காமிக்ஸ்' என்று இன்று பிரபலமாகியிருக்கும் சித்திரக் கதைகள் கூட எப்படி நம் கோவில்களில் தொடங்கி வளர்ந்து வந்திருக்கிறது என்று எண்ணி ஆச்சர்யப் பட்டேன்.

அம்பிகையின் சந்நிதி. யாழைப் பழித்த மொழியாள் என்று சுந்தரர் அழைத்த அன்னை. வீணாவாத விதூஷிணி என்று சொன்னார் குருக்கள். வேதங்களின் வேண்டுகோளின்படி வேதநாயகி என்று பெயருடையவள். எழுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்று சுந்தரி பீடம். "இதுதான் முதலாவது பீடம்" என்று அழுத்தமாகக் கூறினார் சுப்ரமண்ய குருக்கள். அம்பிகை அழகு வடிவம். அழகும் கருணையும் ஒன்றுதானே. ப்ரும்மா, விஷ்ணு, சிவன் இவர்களின் ருத்ரபாகத்தில் அம்பாள் இருக்கிறாள். அம்பாள் சந்நிதியில் உள்ள புன்னை மரமும் தலவிருட்சம் என்று சொன்னார்.

குருக்கள் கதை சொன்னார். "சரஸ்வதி தேவி வீணை வாசித்துக் கொண்டிருந்தாள். அதன் இனிமை எங்கும் நிரம்பியது. அம்பாள் அதைக் கேட்டு, "ஆஹா! பேஷ்" என்று சொன்னாள். அந்தக் குரலின் இனிமை தன் வீணையின் இனிமையை விட மதுரமாக இருந்ததைக் கேட்ட ஸரஸ்வதி வீணையை இறக்கி வைத்து விட்டு தியானம் பண்ண ஆரம்பித்து விட்டாள். இந்த அம்பாளுடைய குரல் கலைமகளின் வீணையை விட இனிமையானது. தென் கயிலாயத்தில் சுந்தரி பீடம் இருப்பது ரொம்ப விசேஷம்."

ஸரஸ்வதி தேவியின் ஸந்நிதியில் வாணி கையில் புத்தகத்துடன் ஞானஸரஸ்வதியாக வீற்றிருப்பதைக் கண்டு மகிழ்கிறோம்.

வேதாரண்யத்தில் துர்க்கையின் வடிவம் ரொம்ப அபூர்வமானது. தெற்கு நோக்கிய துர்க்காதேவி சாந்த வடிவமாக இருக்கிறாள். வேதாரணியத்தில் புயல் அடித்தால் துர்க்கை அம்மன் காப்பாள் என்று நம்புகிறார்கள். துர்க்கைக்குப் பொட்டு மணி கட்டி வழிபடுவார்கள். தேவீபட்டிணத்தில் மகிஷாசுரனை வதம் செய்து விட்டு கோபம் தணியாமல் வந்து கொண்டிருந்தாளாம் துர்க்கை. இங்கே வந்த போது விநாயகரும் முருகப் பெருமானும் விளையாடிக் கொண்டிருந்தார்களாம். அவர்களைப் பார்த்ததும் கோபம் தணிந்து அன்பு மேலிட்டு மகிழ்ச்சியுடன் குழந்தைகளை அணைத்துக் கொண்டாளாம். அதனால் சாந்தமான சிறு நகையோடு அன்பு வடிவமாக நிற்கிறாள் துர்க்கை. எட்டுக் கரங்களுடன் வீர துர்க்கையானாலும் எட்டுக் கைகளாலும் அருள் சொரிகிறாள்.

இலங்கைக்குப் போவதற்கு முன்னால் ராமபிரான் இந்த துர்க்கையை வழிபட்டாராம். வழக்கம் போல ராகு கால பூஜை சிறப்பு. "எலுமிச்சம் பழ மூடியில் விளக்கேற்றுவதன் அர்த்தம் தெரியுமா? புனிப்பு என்ற வியாதி போய் புண்யாத்மாவாகிறான்" என்றார் குருக்கள். "எலுமிச்சம் பழம் களிம்பை நீக்குவது போலப் பாபங்களைப் போக்கும்."

மேலப் பிராகாரத்துக்கு வருகிறோம். "இவர்தான் வீரஹத்தி விநாயகர். ராமபிரான் ராவணனை வதம் செய்து விட்டுத் திரும்பும்

"டாக்டர், நீங்க பெரிய ஆளா இருக்கலாம்! அதுக்காக ஆப்பரேஷன் செய்துட்டு, 'ஆப்பரேஷன் ஸ்ப'ன்னு உங்க இனிஷியலைப் பொறிக்கிறது சரியில்லை!"
— லட்சுமிபிள்ளை



போது அந்த வீரனை ஹத்தி செய்த தோஷம் தொடர்ந்து வந்தது. இந்தப் பிள்ளையார் காலைத் துக்கி உதைத்து அந்த ப்ரும்ம ஹத்தியை அடித்தார். ராமபிரானும் தோஷம் நீங்கி விநாயகரைப் பூஜித்தார். இந்தக் கோவி லிலும் ராமநாதர் ஸந்நிதி இருக்கிறது."

(இந்த ஊரில் இன்னொரு சிறிய விநாயகர் கோவில் இருக்கிறது. அங்கே பிள்ளையார் கை விரலால் எதையோ சுட்டிக்காட்டுகிறார். இங்கே முதலில் ராமபிரான் வந்தாராம். "இலங்கை அதோ இருக்கிறது" என்று விநா யகர் காட்டினாராம். இதனால் இவருக்கு, "இலக்கறிவித்த விநாயகர்" என்று பெயர்!)


ராமபிரான் நின்று இலங்கையைப் பார்த்த இடம் ஒரு மணல் மேட்டின் மீது இருக்கிறது. வேதாரண்யத்திலிருந்து கோடிக்கரை போகும் பாதையில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருக் கிறது. ஒரு பக்கம் உப்பளங்கள். ஒரு பக்கம் அடர்த்தியான புதர்கள். சிறிய மரங்கள் வளர்ந்த காடு. அங்கே ஒரு மேட்டில் சிறிய மண்டபம். ராமருடைய பாதங்கள் மண்டபத் தில் இருப்பதைத் தரிசித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு கிளம்புகிறோம். இவ்விடத்தை 'ருத்ர கோடி' என்கிறார்கள்.

இங்கிருந்துதான் ராமலக்ஷ்மணர்கள் முதலில் அணை கட்ட ஆரம்பித்தார்களாம். பிறகு ராவணனுடைய அரண்மனையின் பின் பக்கம் போய்ச் சேருவோம் என்ற காரணத்தி னால் இந்தத் திட்டத்தைக் கைவிட்டு இன்னும் தென் முனைக்குச் சென்று அணை கட்டினார் களாம்.

வீரஹத்தி விநாயகரை அடுத்த கருவறை யில் மேலக்குமரன் காட்சி தருகிறார். இவரை அருணகிரிநாதர் மெச்சிப் பாடியிருக்கிறார். "கோடி மறைக்காடமர்ந்த பெருமாளே!" என்று கோடிக் கரையையும் சேர்த்துப் பாடியிருக் கிறார். வசதியிருந்தால் கோடிக்கரை குழகரை யும் போய்த் தரிசிக்கலாம். அங்கே பறவைகள் சரணாலயத்தையும் காணலாம்! இயற்கையும் இறைவன் வடிவுதானே! வழியில் உள்ள அகத்தியான் பள்ளியில் அகத்தியரையும் தரிசித்துக் கொள்ளலாம்.

வேதாரண்யத்தில் பரஞ்சோதி முனிவர் வாழ்ந்திருக்கிறார். திருவிளையாடல் புராணம் பாடிய அருட்கவி இவர். அகோர தேவர் என்ற மகானும் தாயுமான அடிகளும் இந்த ஊரிலே வாழ்ந்தவர்கள்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கோவில் இது. கி.பி. 905 முடிசூடிய முதலாம் பராந்தகனின் கல் வெட்டு இருக்கிறது. சிவபக்தியில் சிறந்த கண்டராதித்த தேவரின் தந்தை இவர். ராஜராஜ சோழ தேவரின் கல்வெட்டுக்களும்



"முதல் மாத டெஸ்டுல பெயில், இரண்டாவது மாத டெஸ்டுலயும் பெயில், காலாண்டு, அரையாண்டு எல்லாத்துலயும் பெயில்! அதனால முழுப் பரீட்சைக்கு அனுப்ப மாட்டேன்னு சொல்லிட்டாங்க! உதவாக்கரையா இருக்கான்; இவனை என்ன பண்றதுன்னே தெரியலை?"

"பேசாம இந்திய கிரிக்கெட் டீம்ல சேர்த்து விட்டுடு!"

– லட்சுமிபிள்ளை

உள்ளன. சோழ மன்னர்கள் இந்தக் கோவிலில் விளக்கெரியக் கொடுத்த தானங்கள் எண்ணி லாதவை. முதல் குலோத்துங்கன் இரண்டாம் குலோத்துங்கன். ராஜாதிராஜன் இரண்டாம் ராஜராஜன் முதலிய பல சோழ மன்னர்கள் பல நிவந்தங்களை அளித்திருக்கிறார்கள். கோடிக்குழகர் திருப்பணி பற்றிய குறிப்புக் கூட இருக்கிறது. கல்வெட்டுக்கள் எல்லாம் சிதைந்து போகாமல் இருந்தால் எத்தனை எத்தனை கதைகள் கிடைத்திருக்குமோ?

வீரஹத்தி விநாயகர் சந்நிதிக்கு இடது புறத்தில் நந்தவனம் இருக்கிறது. அதை ஒட்டி சேர சோழ பாண்டிய லிங்கங்கள் உள்ள சிறு கோவில்கள்.

அறுபத்து மூன்று நாயன்மார்களைத் தரிசித்துக் கொண்டு வரும்போது வேத புருஷர் களைத் தரிசித்து விட்டுக் காட்சி தந்த நாய னாரை அவசியம் தரிசிக்க வேண்டும். பார்த்த கண்கள் பார்த்தது போல் அவர் மீது நிலைத்து விடும். ரிஷபத்தின் மீது ஒய்யாரமாக அவர் சாய்ந்து நின்று கொண்டிருக்கும் கம்பீரம், அருள் புன்னகை, கைகளின் அமைப்பு, இவை எழுத்தினால் வர்ணிக்க முடியாதவை. அறுபத்து மூவரும் மெய்மறந்து இவரைத் தரிசித்துக் கொண்டே இருப்பதில் என்ன அதிசயம்?

வேதாரண்யரைத் தரிசிக்க இருட்டும் சமயத்தில் போனால், 'வேதாரண்யம் விளக்கழகு' என்ற பழமொழியின் பொருளை உணரலாம். பகலில் போனாலும் நெய் எடுத்துக் கொண்டு போய் விளக்குகளில் ஊற்றித் திரியைத் தூண்டி விட்டு அரச பதவியை அடையலாம். திருமாலுடைய திருவடி தீட்சையும் கிடைக்குமே!

படங்கள் : ஸ்ரீஹரி



- உடைந்தால் கலங்குவாயென்று
ரப்பர் வளையல்களை
வாங்கிக் கொடுத்தேன்.

அளவு
சரியில்லை என்பதற்காக
இளைக்கத் தொடங்கி
விட்டாயே

- சொந்தம் மறந்தவனென்று
உறவுகள் தூற்றினாலும்
இறந்தவர் வீட்டுக்கெல்லாம்
வரவே மாட்டேன்.

நீ அழுது கொண்டிருப்பதைப்
பார்க்க முடியாது என்னால்.

- நீயுன் முந்தானையால்
தலை துவட்டி
விடுவாயென்பதற்காக
குடை மறந்து வந்த
மழை நாளில்

ஜீன்ஸூம் - டி - ஷர்ட்டுமாய்
நின்றிருந்த உன்னை
என்ன சொல்லித் திட்டுவது?

- நீ அடிக்கடி
பார்த்துக் கொண்டிருக்க
ஒரு புகைப்படம்
கேட்டனுப்பினாய்.

எல்லா ஆல்பத்திலும்
பிழையாகவே
பதிந்திருக்குமென்னை
உன்னைத் தவிர
சரியாகப் படம் பிடிக்க
யாரால் முடியும்?

- நீதான் ஏற்றி வைத்தாய்.
பிறகெதற்கு
அழுகின்றன
இந்த மெழுகுவர்த்திகள்?

— யுகபாரதி

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited, Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka